# காணி மோசடியுடன் சிரந்திக்கு தொடர்பு

விசாரணைகளுக்கு கோரிக்கை

02 ஆம் பக்கம்




வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 05, இதழ் : 38, குரோதி வருடம், பங்குனி மாதம் 09ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (23.03.2025) ஹிஜ்ரி-1446, ரமழான் - 22, 0115886187 - பக்கங்கள் 20+8+8+8

விலை ரூ.130


## நக்கல் நமசிவாயம்

புரட்சி செய்ய பாராளுமன்றமும் ஜனாதிபதி கதிரையும் போதுமெல்லே... உள்ளூராட்சி சபைகள் என்னத்துக்கு?



# புரட்சிகர மாற்றங்கள்!

## ஜனாதிபதி அநுர சபையில் அறிவிப்பு



- ஜனாதிபதிகளின் சலுகைகள் குறைப்புக்கான விசேட சட்டமூலம் விரைவில்
- எம்.பிக்களுக்கான ஓய்வூதியம் விரைவில் இரத்து
- எம்.பிக்களின் காப்புறுதி 10 இலட்சத்திலிருந்து 02,1/2 இலட்சமாகக் குறைப்பு
- அரச துறையில் 15,300 வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்
- வரி மோசடி செய்வோர் மீது கடும் நடவடிக்கை

02 ஆம் பக்கம்

## சண்டே சாம்பார்



- ★ கை விலங்கு இடப்படாமல் தேசபந்து கூட்டி வரப்பட்ட விநோதம்
- ★ மறைத்துவைத்த அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்க தயக்கம்
- ★ தனி அறையில் அடைத்து வைக்கப்பட்ட தென்னக்கோன் உணவை ஏற்க மறுப்பு

06 ஆம் பக்கம்






## ஜனாதிபதி மற்றும் அமெரிக்க கட்டளை அதிகாரி சந்திப்பு

02 ஆம் பக்கம்

## 114 மேலதிக வாக்குகளால் பாதீடு நிறைவேறியது



02 ஆம் பக்கம்


வியாபாரம் முன்னேற இங்கு கரையேறுங்கள்



வருடாந்த வட்டி 7% இலிருந்து

PEOPLE'S BANK BUSINESS LOANS

தேவைகளின் அடிப்படையில் ஆகக் கூடிய கடன் தொகை மற்றும் மீளச் செலுத்தும் காலத்துடன் விவசாயம், தயாரிப்பு, சேவை மற்றும் வணிக வியாபாரம், ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் நிலையான வியாபாரங்களுக்கான ஏராளமான கடன் திட்டங்கள்

மேலும் விபரங்களுக்கு அருகில் உள்ள மக்கள் வங்கிக் கிளைக்கு வாருங்கள்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

PEOPLE'S BANK

Pride of the Nation



செலான் வங்கியிடமிருந்து உங்கள் தங்கப் பவுணிற்கு...

அதிகபட்ச முற்பணம் ரூ. 166,000/= வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.

- அதிகபட்ச இரகசியத்தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்

011 200 88 88

செலான் தங்கக் கடன்

செலான் வங்கி


# விமானப்படை விமானம் விபத்து

## விசேட விசாரணைக்குழு நியமனம்

02 ஆம் பக்கம்




## தவக்கால சிந்தனை

**நீங்கள் போய் முதலில் உங்கள் சகோதர சகோதரிகளிடம் நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்**



இன்று நாம் தவக்காலத்தின் மூன்றாம் வாரத்தில் இருக்கின்றோம். 40 நாட்கள் தப, ஜெப, ஒறுத்தல் முயற்சிகள் என்று சிந்தித்து சிந்தித்து நாட்களும் நகர்ந்து போகின்றன. மனமாற்றம் என்பது நம் இயலாமைகளோடு நாம் போராடி அவற்றிலிருந்து விடுதலை பெறும் முயற்சி அல்ல. மாறாக, மனமாற்றம் என்பது கடவுளை நம் வாழ்வின் மையமாக கொள்வதாகும். கடவுளுக்குரிய இடத்தை நம் வாழ்வில் சரியாக கொடுக்கின்றபோது உள்ளத்தில் ஒட்டியிருக்கும் சுயநலம், வன்மம், தீமையான எண்ணம், தற்பெருமை ஆகியவை மறைந்துவிடும். இன்றைய வழிபாட்டுக்கான இறை வார்த்தைகள் எங்களை மனமாற்றத்துக்கு அழைத்து நிற்கின்றன. இன்றைய நற்செய்தியில் புனித லூக்கா "மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அவ்வாறே அழிவீர்கள்" (லூக் 19/2) என எச்சரிக்கின்றார். திராட்சைத் தோட்ட உவமை வாயிலாக கடவுள் எப்போதும் எம் வாழ்வை பறித்துவிட வாய்ப்பு பார்த்துக்கொண்டிருப்பதில்லை. மாறாக, தன் படைப்புகளாகிய மனிதன் மனம் மாறி வாழ்வை கண்டடைய வேண்டும் என்பதை விரும்புகின்றார் என்பதை உணர்த்துகின்றது. பிறருடைய வாழ்வில் வருகின்ற வீழ்ச்சிகளையும் இழிவுகளையும் இழப்பையும் உற்று நோக்கி அப்படிப்பட்டோர் கடவுளின் தண்டனைக்குரியவர் எனவும் நாம் புண்ணியவான்கள், தவறிழைக்காதோர் என்னும் செருக்கான எண்ணங்களை விட்டுவிட்டு கடவுள் இந்த அருளின் காலத்தில் கொடுத்த வாய்ப்புகளை சரியாக பயன்படுத்திக்கொள்வோம்.

எம் எண்ணங்களில் படிந்துள்ள எதிர்மறையான, புரிந்துணர்வற்ற, தவறான எண்ணங்களைக் களைந்து ஆண்டவர் முன் அடிபணிவோம். எம்மையே நாம் சரிசெய்யும், தூய்மைப்படுத்தும் இந்தத் தவக்காலத்தில் கிறிஸ்தவ பாடுகள் மரணங்களினூடாக கிறிஸ்தவ வாழ்வில் புதுப்பிறப்பாய் மாறி பயணிப்போம்.

இன்றைய இறைவார்த்தை வழிபாட்டின் திருப்பாடல் பல்லவி கூறுகிறது. "ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்". நாம் இன்று ஆண்டவரின் இரக்கத்தையும் அருளையும் எவ்வாறு அனுபவிக்கலாம்? எப்பொழுதெல்லாம் நாம் பெறுகின்ற இறை இரக்கத்தையும் அருளையும் பிறரோடு பகிர்ந்து கொள்கின்றோமோ, அப்பொழுதெல்லாம் இறைவன் எம்மை முழுமையான அன்பு செய்கின்றார், இரக்கம் கொள்ளுகின்றார் என்பதை நாங்கள் புரிந்துகொள்கின்றோம். இந்த நிலையற்ற, நிரந்தரமற்ற உலகில் நிலையானதெல்லாம் இறைவனின் அன்பும் அவர் மனிதனுக்குக் காட்டுகின்ற இரக்கமுமேயாகும்.

மனம் மாறுவோம் இறைவனின் இரக்கத்தைப் பெறுவோம்.

# பலஸ்தீனில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் அநியாயங்களுக்கு எதிராக கண்டன அறிக்கையை அரசு வெளியிட வேண்டும்

## மு.கா. தலைவர் ஹக்கீம் சபையில் வலியுறுத்து



''பலஸ்தீன் நாட்டையும் மக்களையும் தொடர்ந்தும் பழிக்கடாவாக்க இடமளிக்கக்கூடாது. இதற்காக நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து குரல்கொடுக்க வேண்டும். இலங்கையில் இஸ்ரேலியர்களின் செல்வாக்கை நாங்களே தீர்மானிக்க வேண்டும். பாதுகாப்பு அமைச்சர் இதுதொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். வெளிவிவகார அமைச்சர் தொடர்ந்தும் மௌனமாக இருக்காமல் பலஸ்தீனில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் அநியாயங்களுக்கு எதிராக கண்டன அறிக்கையை வெளியிட வேண்டும்'' - என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (21) இரண்டாவது நாளாக இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சமாதான பேச்சுவார்த்தை இருக்கும் நிலையில் இஸ்ரேல் சமூக பொருளாதாரத்தைச் சிதைக்கும் வகையில் காஸாவில் மீண்டும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. இதன் காரணமாக குழந்தைகள், பெண்கள் என 500 பேருக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. உலக முஸ்லிம்கள் தியாகம், அமைதி, மனித உணர்வுகளைப் பேணிவரும் புனித ரமழான் மாதமாகும். அதையும் உணராமல் பலஸ்தீன் மக்கள் நோன்பு நோற்பதற்கு சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கையால், பலஸ்தீன் மக்களுக்கான உணவு தடுக்கப்பட்டுள்ளது. மருந்துப்பொருட்கள் இல்லை. மருத்துவச் சேவைகளை மேற்கொள்ள முடியாமல் தடைப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக குண்டுகளை போட்டு வைத்தியர்கள், தாதியர்களைக் கொன்று வருகிறார்கள். கடந்த 15 வாரங்களாக அங்கு சமாதான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவர்களின் தாக்குதலில் பிரதான இலக்காக இருப்பது பெண்களும் குழந்தைகளுமாகவே இருக்கின்றன. இந்த இனத்தை முற்றாக அழிப்பதே இவர்களின் நோக்கம். அங்கு பாடசாலைகள், வைத்தியசாலைகள் என அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. மக்களுக்கான அடிப்படை வசதிகளே அங்கு இல்லை.

இஸ்ரேல் சர்வதேச சட்டத்தை மீறியுள்ளது. சவூதி அரேபியா உள்ளிட்ட பல நாடுகள் உடனடியாக அங்கு சமாதான பேச்சுவார்த்தை ஆரம்பிக்குமாறு தெரிவித்துள்ளன. இந்த இரண்டு நாடுகளும் உடனடியாக இதற்குத் தீர்வுகாண வேண்டுமென தெரிவித்துள்ளன. அதேநேரம் இஸ்ரேலின் இந்தத் தாக்குதல் போர்க் குற்றமென சர்வதேச நாடுகள் பல தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் தொடர்ந்து இஸ்ரேலுக்கே ஆதரவளித்து வருகின்றன. ஜனாதிபதி ட்ரம்ப் 18 பில்லியன் டொலர்கள் பெறுமதியான இராணுவ உதவிகளை வழங்கியுள்ளார். இது மனிதாபிமானத்துக்கு எதிரானதாகும். அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு அரபு நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

பலஸ்தீன் பூமியை சுவீகரிப்பதே அவர்களின் நோக்கம். அதேநேரம் காஸாவில் இருக்கும் யாரையும் வெளியேற்ற வேண்டாமென ஜனாதிபதி ட்ரம்ப் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளார். ஆனால், இஸ்ரேலுக்கான அனைத்து உதவிகளும் அமெரிக்காவிலிருந்தே வந்துகொண்டிருக்கின்றன. அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. காஸாவில் இடம்பெறும் விமானத்தாக்குதல்களுக்கு அமெரிக்காவே உதவி வருகிறது.

மேலும், இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்வகையில் சிலி, கொலம்பியா போன்ற நாடுகள் தங்களின் தூதுவர்களை இஸ்ரேலிலிருந்து மீள அழைத்திருக்கின்றன. இது ஓர் இனப்படுகொலையெனக் கூறுகின்றன. பல ஆசிய, ஆபிரிக்க நாடுகள் இஸ்ரேலின் இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்திருக்கின்றன. சர்வதேச நீதிமன்றம் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தெரிவித்திருக்கின்றன.

இந்த இனப்படுகொலையை நிறுத்துமாறு ஐ.சி.சி. தெரிவித்துள்ளது. எமது அண்மை நாடான இந்தியாவும் இதற்கு எதிராக குரல் எழுப்பியிருக்கிறது. அதேபோன்று சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சரும் இந்தப் பிரச்சினையை இரண்டு நாடுகளும் பேச்சுவார்த்தைமூலம் தீர்த்துக்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்திருக்கிறார்.

சர்வதேச சட்டங்களை மீறி செயற்படுகின்ற விடயங்களுக்கு எதிராக தண்டனை வழங்கப்பட வேண்டும். சிவிலியன்கள், பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர். புதுமாத்தளன், முள்ளிவாய்க்காலில் இவ்வாறான நிலைமைதான் இடம்பெற்றது. அப்போது சர்வதேச சமூகமே கிளர்ந்தெழுந்தது. எமது புலம்பெயர்ந்து வாழும் மக்களும் இதற்குக் கண்டனம் தெரிவித்து வந்துள்ளார்கள். அதனால் பலஸ்தீனில் இடம்பெறும் தாக்குதலுக்கு எதிராகவும் குரல்கொடுக்க வேண்டும். இஸ்ரேலின் இந்த நடவடிக்கை மனித உரிமை மீறலுக்கு எதிரான நேரடி வன்முறையென ஐ.சி.சி. தெரிவித்துள்ளது. நெதன்யாஹுவை கைதுசெய்வதற்குப் பிடியாணை விதித்துள்ளது.

எனவே, காஸாவில் இடம்பெறும் சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இதில் இலங்கையும் இணைந்துகொள்ள வேண்டும். அங்கு சமாதான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும். மனிதாபிமான நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும். எமது நாடும் இதற்காக ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பலஸ்தீனில் இடம்பெற்றுவரும் அநீதிக்கு எதிராக அரசாங்கம் குரல்கொடுக்க வேண்டும். சர்வதேச சமூகத்தில் எமது குரலையும் எழுப்பவேண்டும். இஸ்ரேலுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்த வேண்டும்.

பலஸ்தீன் நாட்டையும் மக்களையும் தொடர்ந்தும் பலிகடாவாக்க இடமளிக்கக்கூடாது. இதற்காக நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து குரல்கொடுக்க வேண்டும். எமது வெளிநாட்டு அமைச்சர் இதற்கு எதிராக குரல்கொடுக்க வேண்டும். இலங்கையில் இஸ்ரேலியர்களின் செல்வாக்கை நாங்களே தீர்மானிக்க வேண்டும். பாதுகாப்பு அமைச்சர் இதுதொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். வெளிவிவகார அமைச்சர் தொடர்ந்தும் மௌனமாக இருக்காமல் பலஸ்தீனில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் அநியாயங்களுக்கு கண்டன அறிக்கையொன்றை வெளியிட வேண்டும் - என்றார்.




ரமழானின் கடைசிப்பத்து நுழைந்துவிட்டால் நபி(ஸல்) அவர்கள் ஒவ்வொரு இரவையும் (நல் வணக்கங்களைக்கொண்டு) உயிர்ப்பிப்பார்கள். தங்கள் குடும்பத்தினரையும் (இபாதத் செய்ய) எழுப்பிவிடுவார்கள். தங்கள் வேட்டியை இறுக்கமாகக் கட்டிக்கொள்வார்கள் என ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் (புகாரி, முஸ்லிம்)

ரமழானின் இறுதிப்பத்தில் நாங்கள் இருக்கின்றோம். இந்த இரவுகளில் திக்ர், ஸலவாத், குர்ஆன் திலாவத் போன்ற நல்வணக்கங்களில் அதிகமதிகம் ஈடுட முயற்சிக்கவேண்டும். அத்துடன், எங்களால் ஏற்பட்டிருக்கும் தவறுகள் மற்றும் பாவங்களை நினைவுபடுத்தி அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருவோம்.

(தொழுகை நேரங்கள்)
(21ஆம் திகதி முதல் 24ஆம் திகதிவரை)

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 4.59 |
| சூரிய உதயம் | - | 6.14 |
| ழுஹர் | - | 12.19 |
| அஸர் | - | 3.31 |
| மஃரிப் | - | 6.21 |
| இஷா | - | 7.31 |

## 114 மேலதிக...

நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான அநுரகுமார திசாநாயக்கவால் கடந்த மாதம் 17ஆம் திகதி பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு 114 மேலதிக வாக்குகளால் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

அதன் பிரகாரம் வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்புக்கு ஆதரவாக 159 வாக்குகள் அளிக்கப்பட்டதுடன், எதிராக 45 வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தன.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை கடந்த பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி திங்கட்கிழமை பாராளுமன்றத்துக்கு முன்வைத்தார்.

இதனைத் தொடர்ந்து பெப்ரவரி 18ஆம் திகதி முதல் பெப்ரவரி 25 வரை 07 நாட்கள் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (வரவு-செலவுத்திட்டம்) மீதான இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதம் நடைபெற்றது.

2025ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு 109 மேலதிக வாக்குகளால் கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பில் வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 155 வாக்குகளும் எதிராக 46 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதற்கமைய குழுநிலை விவாதம் பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை 19 நாட்கள் இடம்பெற்றது. இதற்கமைய 2025ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் மூன்றாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு மார்ச் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7.45 மணிக்கு இடம்பெற்றது.

அதன் பிரகாரம் வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்புக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அதன்பிரகாரம் வாக்கெடுப்புக்காக கோரம் மணி ஒலிக்கப்பட்டு, வாக்கெடுப்பு இலத்திரனியல் முறையில் இடம்பெற்றது.

அதனடிப்படையில் வரவு-செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு 114 மேலதிக வாக்குகளால் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் அறிவித்தார்.ள

## புரட்சிகர...

நாட்டை புதிய பாதையில் கொண்டு செல்ல அதிரடி திட்டங்களை வகுத்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மீதான இறுதி விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாட்டின் ஸ்திரத்தன்மையை பாதிக்கும் வகையிலான செய்திகளைப் பரப்பவேண்டாமென நான் அரசியல்வாதிகளிடம் கேட்டுக்கொள்கிறேன். எனக்குரிய எம்.பி. ஓய்வூதியம் வேண்டாமென நான் பாராளுமன்றத்துக்கு அறிவித்துள்ளேன். எம்.பிக்களுக்குரிய ஓய்வூதியத்தை இரத்துச்செய்யும் சட்டமூலத்தை விரைவில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவுள்ளோம். அதேபோல் ஜனாதிபதிக்குரிய சலுகைகளை வெட்டும் சட்டமூலமும் விரைவில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும். எம்.பிக்களுக்கான 10 இலட்சம் ரூபா காப்புறுதி இரண்டரை இலட்சம் ரூபாவாகக் குறைக்கப்படும். அதேபோல் வரி செலுத்தாமல் மோசடி செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அரச துறையில் 15,300 வெற்றிடங்கள் இருப்பதாக பிரதமர் தலைமையிலான குழு கண்டறிந்துள்ளது. அவற்றை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச பணியாளர்கள் மேலதிக வருமானத்தை எதிர்பார்க்காமல் தமது கடமைகளைச் செய்ய வேண்டும். இலஞ்சம், ஊழல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நாங்கள் ஆட்சியைப் பொறுப்பேற்கும்போது ஜப்பான் நாட்டால் முன்னெடுக்கப்பட்டுவந்த 11 வேலைத்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. டிசம்பர் 21ஆம் திகதியின் பின்னர் அந்த வேலைத்திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 75 வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிக்க சீனாவும் இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்திய அரசுக்கும் மின்சார சபைக்குமிடையில் சம்பூர் மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க இணக்கப்பாடு ஏற்பட்டது. மின்சார சபைக்கு 50 சதவீதமும் இந்திய நிறுவனத்துக்கு 50 சதவீதமும் உரித்தாகும் வகையில் ஒன்றிணைந்த நிறுவனமொன்று உருவாக்கப்படும். அந்த நிறுவனத்தால் சாம்பூரில் 120 மெகாவோட் கொள்ளளவுகொண்ட மின் உற்பத்தி நிலையம் உருவாக்கப்படும். அதில் உற்பத்திசெய்யப்படும் மின்னை மின்சார சபை கொள்வனவுசெய்யும்.

அதேபோன்று, சூரிய சக்தியால் உற்பத்தி செய்யப்படும் ஓரலகு மின்னை குறைந்த விலையில் - அதாவது, 5.97 சத டொலருக்கு மின்சார சபையால் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தில் கைசாத்திட்டுள்ளோம். வங்குரோத்து நாட்டில் யாரும் முதலீடுசெய்யமாட்டார்கள். ஆனால், நாங்கள் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தியுள்ளோம். சம்பூர் மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணிப்புப் பணிகளை ஏப்ரல் மாதம் 05ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகையுடன் ஆரம்பிக்கவுள்ளோம்.

இந்த இரு மாதங்களுக்குள் சியம்பலாண்டுவவில் புதிய சூரிய மின் உற்பத்தி நிலையத்தையும் மன்னாரில் 50 மெகாவோட் கொண்ட புதிய காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தையும் ஆரம்பிப்போம். அதற்கான சகல விடயங்களையும் ஏற்பாடு செய்துவிட்டோம். அதாவது, பொருளாதார நிலைப்பாட்டை ஏற்படுத்தியுள்ளோம்.

அதுமட்டுமல்லாமல் டொலரின் பெறுமதியையும் ஸ்திரப்படுத்திக் காட்டியுள்ளோம். வங்கி வட்டி வீதத்தை தனியிலக்கமாக மாற்றியுள்ளோம். பணவீக்கத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

சகலரும் சரியான முறையில் வரியைச் செலுத்த வேண்டும். வரியைச் செலுத்தாமல் வரி மோசடி செய்ய யாராவது முயற்சித்தால் சட்டத்தை கடுமையாக்க நடவடிக்கை எடுப்போம். ஆனால், வரியாக செலுத்தும் ஒவ்வொரு ரூபாவையும் தெய்வ கடமைப்போல் பாதுகாப்போம் என்பதை உறுதியாகக் கூறுகிறோம். அரசாங்கத்துக்கு வழங்கப்படும் ஒவ்வொரு ரூபாவையும் பாதுகாக்க வேண்டும். செலுத்தப்படும் வரிகளையும் பாதுகாப்போம். விசேட வரி செலுத்துபவர்களுக்கு விசேட நிவாரணப் பொதியை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம்.

அரச கடமைகளுக்காக கட்டணம் அறிவிடும் முறையை இல்லாதொழிக்க வேண்டும். அரச அதிகாரிகளுக்கான சம்பளங்கள் முறையாக வழங்கப்படும் நிலையில் இலஞ்சத்துக்கு இடமளிக்க முடியாது. இலஞ்சம் என்பது பொருளாதாரக் குற்றமாகும். இலஞ்சம் தொடர்பில் கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்படும். சகல அரச அதிகாரிகளும் மேலதிக கட்டணங்கள் எதுவுமின்றி கடமைகளை முறையாக செய்ய வேண்டும். இலஞ்சத்தை ஒழித்தால் மாத்திரமே அரச நிர்வாகத்தை மாற்றியமைக்க முடியும்.

மன்னார் காற்றாலை வேலைத்திட்டத்துக்கு விலைமனு கோரல் கோரியிருந்தோம். இரு நிறுவனங்கள் விண்ணப்பித்திருந்தன. தொழில்நுட்பம் காரணமாக ஒரு விலைமனு கோரலை நிராகரித்தோம். மற்றைய விலைமனுவை தெரிவுசெய்தோம். அதனை அனுமதிச் சபைக்கு அனுப்பினோம். குறைந்த கட்டணத்தில் மின்னை வழங்கும் நிறுவனத்தையே தெரிவு செய்திருக்கிறோம். இலங்கை வரலாற்றில் முதன் முறையாக மன்னாரில் 50 மெகாவோட் காற்றை மின்னுற்பத்தி நிலையத்தை ஓரலகு மின்னுக்கு 4.57 சத டொலருக்குப் பெற்றுக்கொடுத்துள்ளோம். 8.22 சத டொலருக்கு இருந்த மின்னலகை 4.57 ஆகக் குறைத்துள்ளோம்.

இந்த தொங்குபாலத்தில் மக்களின் சுமையுடன் பயணித்துக்கொண்டிருக்கிறோம். இலங்கை மக்களுக்கு முதன் முறையான அரசாங்கம் கிடைத்திருக்கிறது. அரசாங்கம் என்றால் என்ன என்பதை மக்களுக்கு முன்மாதிரியாக இருந்து காட்டுவோம். முதலீட்டாளர்களை நேரடியாகச் சந்தித்து உங்களிடமிருந்து குடிக்க நீர் கூட வேண்டாம் என்று எங்களால் கூற முடியும்.

தாமரை கோபுரம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும். ஜனாதிபதியொருவர் இருக்கிறார். அவர் நியமித்த பொலிஸ் மா அதிபர் சிறையிலிருக்கிறார். அவரால் நியமிக்கப்பட்ட மத்திய வங்கி ஆளுநர் நாட்டிலிருந்து தப்பிச் சென்றுள்ளார். சிவப்பு பட்டியலில் இருந்தாலும் அங்கிருந்து தொலைக்காட்சியிலும் பேசுகிறார். சகலருக்கும் சமமான நீதி நிலைநாட்டப்படும். எங்களிடம் பிரிவினை எதுவும் இல்லை. மக்களுக்கும் எங்களுக்குமிடையிலான பிணைப்பே இருக்கிறது - என்றார்.

## விமானப்படை...

விபத்துக்குள்ளான விமானப்படையின் விமானம் குறித்து விசாரிக்க விமானப்படைத் தளபதியால் சிறப்பு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.



கட்டுநாயக்க விமானப்படைத் தளத்திலுள்ள இலங்கை விமானப்படையின் இல. 05 தாக்குதல் படைப்பிரிவுக்குச் சொந்தமான பயிற்சிக்காகப் பயன்படுத்தப்படும் கே -8 விமானம், வெள்ளிக்கிழமை (21) குருநாகல், வாரியபொல பகுதியில் பயிற்சியின்போது விபத்துக்குள்ளானது.

விமானத்தின் இரண்டு விமானிகளும் விமானத்திலிருந்து பாதுகாப்பாக வெளியேறி, குருநாகல், மினுவங்கேட் கல்லூரி வளாகத்தில் பரசூட்களின் உதவியுடன் தரையிறங்கினர்.

இந்த விமானத்தில் தலைமைப் பயிற்சி பயிற்றுவிப்பாளர் விமானியும் பயிற்சி விமானி அதிகாரியும் இருந்தனர். மேலும் இந்த அதிகாரிகள் குருநாகல் தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விமானம் கட்டுநாயக்க விமானப்படைத் தளத்திலிருந்து காலை 07.27 மணியளவில் புறப்பட்டு, காலை 07.55 மணியளவில் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தைத் தொடர்ந்து, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் பந்து எதிரிசிங்க விபத்து குறித்து விசாரிக்க ஏழு பேர் கொண்ட சிறப்பு விசாரணைக் குழுவை நியமித்தார்.

## காணி மோசடியுடன்...

''ஹிம்புல்கொட பகுதியில் இடம்பெறும் காணி அபகரிப்பு மற்றும் காணி மோசடி தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பதில் பொலிஸ் மா அதிபரிடம் வலியுறுத்துகிறேன். இந்தக் காணி கொள்வனவு விவகாரத்தில் தங்காலை கால்டன் ஹவுஸ் முகவரியை வதிவிடமாகக்கொண்டுள்ள சிரந்தி ராஜபக்ஷவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது'' என தொழில் பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (21) நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

ஹிம்புல்கொட பகுதியிலுள்ள விகாரைக்குள் பலவந்தமான முறையில் நுழைவதற்கு நான் முயற்சித்ததாக கடந்த மாதம் செய்திகள் வெளியாகின. இந்தக் காணிக்கான உறுதிப்பத்திரத்தை முழுமையாகப் பெற்றுக்கொண்டுள்ளேன். இந்தக் காணி விகாரைக்குச் சொந்தமானதென்று உறுதிப்பத்திரத்தில் எவ்விடத்திலும் குறிப்பிடப்பட வில்லை.

ஹிம்புல்கொட, இஹல்யாகொட கே.டி.பராக்ரம என்பவருக்குச் சொந்தமான காணி கைப்பற்றப்பட்டு ஹோமாகம தியகம மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் காணி 10 இலட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் 2012.03.02ஆம் திகதி கே.டி.தமித் பிரேமலால், என்.கே.சுவர்ணலதா ஆகியோருக்கு சொந்தமான காணிகள் தங்காலை வீதி, கால்டன் ஹவுஸ், இல.19 என்ற முகவரியில் வசிக்கும் சிராந்தி விக்கிரமசிங்க ராஜபக்ஷ என்பவரின் பெயருக்கு எழுதப்பட்டுள்ளது.

இந்தப் பத்திரத்தில் 535253314 v என்ற தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் காணிகள் 5 இலட்சம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் காணிகள் 2023.10.10ஆம் திகதியன்று அமில கொடிகார என்பவருக்கு 120 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் இடம்பெறும் காணி அபகரிப்பு தொடர்பில் இப்பிரதேச மக்கள் முறைப்பாடளித்தார்கள். அதனால்தான் அங்கு சென்றேன்.

இந்தக் காணி உரித்து பத்திரத்தில் இந்தக் காணிகள் விகாரைக்கோ அல்லது விகாராதிபதிக்கோ சொந்தமானதென்று எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை. விகாரைக்குள் சட்டவிரோதமான முறையில் நுழையவேண்டிய அவசியம் எனக்கில்லை.

ஆகவே, இந்தப் பகுதியில் இடம்பெறும் காணி அபகரிப்பு மற்றும் காணி மோசடி தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பதில் பொலிஸ்மா அதிபரிடம் வலியுறுத்துகிறேன் - என்றார்.

## ஜனாதிபதி...

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் ஐக்கிய அமெரிக்க இந்து - பசுபிக் கட்டளையின் (INDOPACOM) கட்டளை அதிகாரி அட்மிரல் செமுவேல் ஜே.பபாரோ (Samuel Paparo) ஆகியோருக்கிடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை (21) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்துக்குப் பாராட்டு தெரிவித்த அதேநேரம், இந்து சமுத்திர வலயத்தைப் பாதுகாத்து அமைதியான இந்து சமுத்திர வலயத்தைப் பேணுவதற்கு இலங்கை வழங்கும் ஒத்துழைப்பையும் அட்மிரல் பபாரோ பாராட்டினார்.

இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்காவுக்கு இடையில் காணப்படும் வலுவான தொடர்புகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லவும், இலங்கை அரசாங்கத்தின் புதிய வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக்கிக்கொள்ளவும் தனது ஒத்துழைப்பை வழங்குவதாக அட்மிரல் ஜே.பபாரோ தெரிவித்தார்.

இலங்கையின் பாதுகாப்புத் துறையின் மனித வள அபிவிருத்திக்கு ஐக்கிய அமெரிக்காவால் ஆரம்ப காலத்திலிருந்து இதுவரையில் வழங்கப்பட்டுவரும் ஒத்துழைப்புக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதன்போது நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத், ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் (Julie Chung) லெப்டினன்ட் கேர்ணல் அன்டனி நெல்சன், ஐக்கிய அமெரிக்க இந்து - பசுபிக் கட்டளையின் சிரேஷ்ட வெளிநாட்டுக் கொள்கை ஆலோசகர் டேவிட் ரென்ஸ் (David Ranz) உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

# வெளிநாட்டுப் பொறிமுறைக்கு இலங்கை அச்சம் ஏன்?



## கேட்கிறார் சிறிதரன் எம்.பி.

(உரையாடல் - நா.தினுஷா)

**“தாங்கள் தவறு இழைக்கவில்லை, குறிப்பாக, இந்த அரசாங்கமோ அல்லது இந்த அரச படைகளோ போர்க் குற்றங்களில் அல்லது மனிதப் படுகொலைகளில் ஈடுபடவில்லையென்று அரசாங்கம் கருதுகிறதென்றால் ஏன் சர்வதேச விசாரணைக்குப் பயங்கொள்ள வேண்டும். துணிந்து சர்வதேச விசாரணைகளை எதிர்கொள்ளலாம். சர்வதேச விசாரணைகளுக்கு முகங்கொடுத்து தாங்கள் தவறு செய்யவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்” - என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.**

**‘தமிழன்’ வார இதழுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

**அவருடனான உரையாடலின் முழு விபரம் வருமாறு,**

**நாட்டில் இடம்பெற்று முடிந்த இரு தேர்தல்களிலும் தமிழ் மக்கள், தேசிய மக்கள் சக்திக்கு அதிக ஆதரவைப் பெற்றுக்கொடுத்திருந்தார்கள். தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் தமிழ்க் கட்சிகளுக்கான மக்களின் ஆதரவு பின்னடைவையே சந்தித்திருந்தது. உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமையுமென எதிர்பார்க்கிறீர்கள்?**

பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் அளித்த வாக்குகள், எதிரான வாக்குகள் என்று கூற முடியாது. ஏற்கனவே டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன் ஆகியோருக்கு இருந்த வாக்குகளே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்குக் கிடைத்திருக்கிறதே தவிர, தமிழ் மக்களின் வாக்குகளில் பெரும் சிதறல்கள் எதுவும் ஏற்படவில்லை. ஆனால், இலங்கை தமிழரசுக் கட்சிக்கான வாக்கு வங்கி உடைந்திருக்கிறதென்பது உண்மை.

கடந்த இரு தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்தி மீது மக்கள் கொண்டிருந்த மாயை அல்லது அவர்கள் மக்களுக்கு ஏதாவது செய்வார் என்ற விடயங்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் தற்போது மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், உள்ளூராட்சித் தேர்தல் என்பது தமிழ் தேசிய மக்களுடைய அடையாளத்தைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் தமிழ்த் தேசியத்துக்கான இருப்பை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குப் பெரும்பான்மை பலம் கிடைக்குமென்பது நிதர்சனமாகக் கூறக்கூடிய உண்மையாகும்.

**சம்பந்தன், இலங்கை தமிழரசுக் கட்சிக்குத் தலைமைத்துவம் வழங்கிய காலப்பகுதியில் வடக்கு, கிழக்கில் கட்சிக்கென இடமிருந்தது. அவர் மறைந்ததன் பின்னர், கட்சி முதலில் சந்தித்த தேர்தலிலேயே பின்னடைவைச் சந்தித்துள்ளது. இந்தத் தேர்தல் தமிழரசுக் கட்சித்துக்குச் சார்பாக அமையுமா?**

சம்பந்தன் உயிருடன் இருக்கும்போதே கட்சிகள் சிதைவடைந்துவிட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமை இழந்துவிட்டது. கட்சியின் ஒற்றுமையைப் பலமாக வைத்திருக்கக்கூடிய தலைவராக அவர் இருந்திருக்கவில்லை. அவர் இருந்த காலத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவடைந்த தமிழரசுக் கட்சி தனிக் கட்சியாக மாறியிருந்தது. 2023ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெற்றிருந்தால் தமிழரசுக் கட்சி தனித்தே போட்டியிட்டிருக்கும். அந்தநேரமும் சம்பந்தன் உயிருடனேயே இருந்தார். ஆனால், சகலரும் சேர்ந்து தேர்தலில் போட்டியிடக்கூடிய மனநிலையில் அவர் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை.

எனவே, சம்பந்தனின் காலத்திலேயே ஒற்றுமைக்கான பலவீனங்களும் ஒற்றுமைக் கான பிளவுகளும் ஏற்பட்டுவிட்டன. அதனைச் சரியானதொரு தலைவராகக் கையாளவில்லை என்பது எங்கள் மத்தியில் இருக்கும் பெரும் கவலையாகும். தேசிய விடுதலைப் போராட்டம், தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டம் மௌனித்ததன் பின்னர் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சம்பந்தன், சகலரையும் அரவணைத்து ஒரு தலைமைத்துவத்தை வழங்கவில்லை என்பது வரலாற்றில் அவர் இழைத்த பாரிய தவறாகக் கருதப்படுகிறது.

இருந்தாலும் அவர் இறந்ததன் பின்னர் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலிலும் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிட்டு 08 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது. அந்த 08 ஆசனங்கள்கூட பெரும் விழுக்காடாக இல்லை. கடந்த காலங்களில் ஏனைய கட்சிகளுடன் கூட்டாகப் போட்டியிட்டபோது தமிழரசுக் கட்சி பெற்றுக்கொண்ட ஆசனங்களின் அடிப்படையில் பார்த்தால் இலங்கை தமிழரசுக் கட்சி பெற்றுக்கொண்ட ஆசனங்களின் அடிப்படையில் பார்த்தால் இதே ஆசனங்களையே பெற்றுக்கொண்டுள்ளது. ஏனைய கட்சிகள் சில இடங்களில் தவற விட்டிருக்கின்றன.

இலங்கை தமிழரசுக் கட்சிக்கான இருப்பு, தமிழ் மக்களிடமுள்ள செல்வாக்கு என்பது மாறவில்லை. கட்சிக்குள் உள்ளக மோதல்கள், கட்சிக்குள் இருந்துகொண்டே கட்சிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருப்பவர்கள், வழக்கினூடாக கட்சியை சிதைத்திருப்பதே மக்கள் மத்தியில் வேதனையையும் வெறுப்பையும் உருவாக்கியுள்ளது என்பதே உண்மையான விடயமாகும்.

**உள்ளூராட்சித் தேர்தலின் முடிவுகள் எவ்வாறு அமையுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?**

உள்ளூராட்சித் தேர்தல் என்பது தனிப்பட்ட நபர்கள், பிரதேச வளர்ச்சிகளுடன் தொடர்புடையதாகும். அந்தப் பிரதேசங்களில் வாழ்வின்றி மக்களின் எண்ணங்கள், தனி மனித விருப்பு வெறுப்புகளை உள்ளடக்கியது. இது அடிப்படைத் தேர்தல் முறைமை என்பதால், இந்தத் தேர்தல் முறைமையின் செல்வாக்கு கட்சிக்குக் கிடைக்கும் வாக்குகளுக்கப்பால் நபர்களுக்கான வாக்குகளாகக் கொள்ளப்படும். ஆகவே, இந்தத் தேர்தலிலும் கடந்த கால அனுபவங்களுடன் வெற்றியை நோக்கி நகர்வோம். தமிழ்த் தேசிய இருப்புக்காக எங்களால் முடிந்த முழு முயற்சிகளையும் முன்னெடுப்போம்.

**தமிழரசுக் கட்சிக்குள் இருக்கும் சிக்கல்கள் தேர்தல் முடிவுகளில் தாக்கம் செலுத்துமா? இந்தப் பிரச்சினைகளுக்கு எப்போது தீர்வு கிடைக்குமெனக் கருதுகிறீர்கள்?**

கட்சி மீதான வழக்கு தீர்வின்றி தொடரும் வரை கட்சிக்குள் இருக்கும் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கப்போவதில்லை. ஏனெனில், பதவிகளைக் கைப்பற்றுவதற்காக அல்லது குறுக்கு வழியில் பதவிகளை எடுத்துக்கொள்வதற்காக சிலர் எடுக்கும் முயற்சிகளும் நேர்மை, ஜனநாயகம் என்பவற்றைப் புறந்தள்ளிவிட்டு யாரும் பதவிக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காக நீதிமன்றத்தினூடாக கையாளப்படுகின்ற இந்த யுக்திகள் நேர்மை தன்மையுடையதல்ல. ஜனநாயக தன்மையுடையதல்ல. இவ்வாறான செயற்பாடுகள் மக்களிடமிருந்து எங்களின் கட்சிக்கான அந்நியச் செயற்பாடுகளைத் தந்திருக்கிறது.

### அர்ச்சுனா மீதான தடை மற்றைய தமிழ் எம்.பிக்களுக்கு சிக்கலாகிவிடக் கூடாது

**வழமைக்கப்பால் வடக்கில் அநேகமான தமிழ்க் கட்சிகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. காரணம் என்னவென்று கருதுகிறீர்கள்?**

இம்முறை 25 சதவீதம் பெண்கள், 25 சதவீதம் இளைஞர்கள், ஏனையவர்கள் 50 சதவீதம் என்ற அடிப்படையில் வேட்மனுக்கள் கோரப்பட்டிருந்தன. அதில் சில நுட்பங்களும் வழங்கப்பட்டிருந்தன. பிறப்புச் சான்றிதழ் போன்ற உள்ளடக்கங்கள் தொடர்பில் பல்வேறு விடயங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. குறிப்பாக, வேட்புமனுக்காக தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்களின் வயதெல்லை தொடர் பில் அதிகம் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். அதேபோன்று, வேட்புமனுக் களை நேரத்துடன் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

**இம்முறையும் ஏனைய தமிழ்க் கட்சிகள் கூட்டணியாக போட்டியிடுகிறார். இது எந்தளவுக்கு சவாலாக அமையும்?**

எத்தனை கூட்டணி அமைத்தாலும் இந்தத் தேர்தல் முறைமையின் கீழ் ஒரு வேட்பாளர் 50 வாக்கெடுத்திருந்தாலும் அது எண்ணப்படும். கட்சிகள் தனித் தனியாக போட்டியிடும்போதே இந்தத் தேர்தல் முறைமை வெற்றிகரமானதாகும். கூட்டாக நான்கு கட்சிகள் போட்டியிடுகின்றபோது அந்தக் கட்சிகளுக்கான ஆசனப் பங்கீடு தொடர்பிலும் ஏனைய விடயங்கள் தொடர்பிலும் பல்வேறு நெருக்கடிகள் வரும். அந்த நெருக்கடிகளைக் கடந்து செயற்படவேண்டுமென்றால் தனித்துப் போட்டியிடுவதே சிறந்த தீர்மானமாகும். கூட்டாகப் போட்டியிடுகிறார்கள் என்பதற்காக அவர்கள் வெற்றியடை வார்கள் அல்லது தோல்வியடைவார்கள் என்று கூற முடியாது.

**கடந்த இரு தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்திக்கு அதிக வாக்குகள் கிடைத்திருந்தன. இம்முறையும் தேர்தல் முடிவுகள் அவ்வாறே அமைந்துவிடும் என்று கருதுகிறீர்களா?**

மேற்குறிப்பிட்டதுபோன்று, கடந்த பாராளுமன்றத் தேர்தலில் டக்ளஸ், அங்கஜன், ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய தரப்புகளின் வாக்குகளே தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்திருந்தனவே தவிர, தமிழ்த் தேசியத்தின் வாக்குகள் கிடைத்ததாகத் தெரியவில்லை. உள்ளூராட்சித் தேர்தலில் எதிர்பார்க்குமளவு அவர்களுக்கு வாக்குகள் கிடைப்பதற்கான சாத்தியம் மிகக் குறைவாகவே இருக்கிறது.

**நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் தொடர்ச்சி யாக கருத்து முன்வைத்து வருகிறீர்கள். ஆனால், முதலீட்டுக்காக முன்வந்த அதானி நிறுவனம் பின்வாங்கியுள்ளது. இவ்வாறான நிலைமைகள் நாட்டின் அபிவிருத்தியிலும் மக்களின் முன்னேற்றத் திலும் எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தும்?**

அதானி நிறுவனத்தின் காற்றாலை வேலைத்திட்டம் தொடர்பில் ஊர் மக்களிடமிருந்தும் சில எதிர்ப்புகள் எழுந்திருந்தன. ஆனால், அதுதொடர்பில் அரசாங்கம் அதிக கரிசனையைக் கொண்டி ருக்கவில்லை என்பது தெரிகிறது. இருந்தாலும் தொடர்ந்தும் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவே தகவல்கள் கூறுகின்றன. இதற்கப்பால் ஏனைய அபிவிருத்தி விடயங்கள் குறித்தும் நாங்கள் அதிக கரிசனை செலுத்தி வருகிறோம். மேலும், அபிவிருத்தி தொடர்பில் அரசாங்கத்தால் எடுக்கப்படும் முயற்சிகளுக்கும் எங்களால் முடிந்த ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கிறோம்.

**போர்க் குற்றங்கள், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்பன தொடர்ச்சியான பேசுபொருளாக இருந்து வருகின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கு சர்வதேச பொறிமுறையினூடாக தீர்வு காணப்படவேண்டுமென்று நீங்கள் உள்ளிட்ட தமிழ்த் தலைமைகள் கோரி வருகிறார்கள். ஆனால், இந்த அரசாங்கம் சர்வதேச பொறிமுறைகளை நிராகரித்துவிட்டு, உள்நாட்டுப் பொறிமுறையில் தீர்வு காணப்போவதாக ஜெனீவாவுக்கே அறிவித்துள்ளதே?**

ஒவ்வொரு அரசாங்கங்களும் மாறும்போது கருத்துகளை மாறி மாறி பதிவுசெய்வது காலத்தின் தாக்கமாகும். ஆனால், இந்த அரசாங்கம் மிகக் கடுமையாக தாங்கள் உள்நாட்டுப் பொறிமுறையூடாக தீர்வு காண்கிறோம் என்று கூறுகிறார்களென்றால் அதனைச் செய்ய மாட்டார்கள். தாங்கள் தவறு இழைக்கவில்லை என்றால் குறிப்பாக, இந்த அரசாங்கமோ அல்லது இந்த அரச படைகளோ போர்க் குற்றங்களில் அல்லது மனிதப் படுகொலைகளில் ஈடுபடவில்லை என்று அரசாங்கம் கருதுகிறது என்றால் ஏன் சர்வதேச விசாரணைக் குப் பயங்கொள்ள வேண்டும். துணிந்து சர்வதேச விசாரணை களை எதிர்கொள்ளலாம். சர்வதேச விசாரணைகளுக்கு முகங்கொடுத்து தாங்கள் தவறு செய்யவில்லை என்பதை உறுதிப்படுத்த முடியும்.

ஆகவே, இவர்கள் தமிழர்கள் மீது இனப் படுகொலை செய்திருக்கிறார்கள் என்பது இவர்களின் பயத்திலிருந்தே தெரிகிறது. தமிழ்த் தேசிய இனத்தை அழித்திருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. பிழையில்லாதவர்கள் குற்றம் செய்யவில்லை என்றால் பயங்கொள்ளா மல் சர்வதேச விசாரணைக்கு ஒப்புக் கொண்டாலே அதுவே பெரும் வெற்றியாக அமையும். தயக்கமடைகிறார்கள் என்றால் தவறிழைத்திருக்கிறார்கள் என்பது நியாய மான விடயமாகும்.

எனவே, சர்வதேச விசாரணையே தமிழ் மக்களுக்கான பாதுகாப்பு என்ற விடயத்தில் இப்போதும் தெளிவாக இருக்கிறோம். உள்நாட்டு விசாரணையோ உள்நாட்டுப் பொறிமுறையோ எங்களுக்கு எந்தவொரு விமோசனத்தையும் தரப்போவதில்லை. சர்வதேச விசாரணைகள் என்பது மிக மிக முக்கியமானது. அதற்காக இறுதிவரை குரல் கொடுப்போம்.

### உள்ளூராட்சி தேர்தலின் பின் அரசாங்கத்தின் வீராப்பு மாறும்

**பாராளுமன்றத்தில் அர்ச்சுனா எம்.பி. முன்வைத்த கருத்துக்கு சபாநாய கர் எடுத்த நடவடிக்கை எதிராக நீங்கள் பேசியிருந்தீர்கள். ஆனால், பொறுப்புவாய்ந்த உயரிய சபையில் அர்ச்சுனா எம்.பி. பேசிய விடயங்களிலும் தவறு இருக்கிறதல்லவா? அவரில் தவறு இல்லை என்று கூறிவிட முடியாதல்லவா?**

தனிப்பட்ட ரீதியில் பெண்களை வலிந்து பாராளுமன்றத்தில் பெயர் குறிப்பிட்டு அவர்கள் மீது சேறுபூச நினைப்பது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குரிய அழகல்ல. அதேநேரம் ஒரு மார்க்கம், மதம் சார்ந்த முஸ்லிம் தேசிய இனத்தின் மீது காழ்ப்புணர்ச்சிகொண்டு பேச முடியாது. அவ்வாறு பேசவும் கூடாது. அதற்காக அந்தச் சமூகத்திடமும் முஸ்லிம் தேசிய இனத்திடமும் மன்னிப்பு கோரியிருக்கிறேன்.

அதேநேரம், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக கொண்டுவரப்படுகின்ற சட்டங்களும் நடைமுறைகளும் நாளை இன்னுமொரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் மீது பாயாதா என்ற கேள்வி எங்களிடம் இருக்கிறது. குறிப்பாக, டி.பி.விஜேதுங்க, ஜே.ஆர்.ஜயவர்தன, சிறில் மெத்யூ போன்றவர்கள் பாராளுமன்றத்தில் மிக மோசமான இனவாதக் கருத்துகளை அள்ளி வீசியிருந்தார்கள். விமல் வீரவங்ச போன்றவர்கள் கூட இவ்வாறான கருத்துகளை முன்வைத்திருந்தார்கள்.

ஆனால், இவ்வாறானவர்கள் மீது பாராளுமன்றத்தில் எந்த நடவடிக்கையையும் எடுத்ததில்லை. ஆகவே, பாராளுமன்றத்துக்கு முரணான வார்த்தைகளைப் பேசுவதற்கு தடைவிதிப்பதென்பது சரியான விடயமாகும். ஆனால், தமிழ் பாராளுமன்ற உறுப்பினராக அவர்மீது கொண்டுவரப்பட்ட தடை, இதே சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த காலங்களில் பேசியபோது ஜே.ஆர்.ஜயவர்தன நாட்டின் தலைவராக இருந்துகொண்டு போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்று அப்பாவி தமிழ் மக்கள் மீது போர் தொடுத்தபோது கூட இந்த முழு உலகமும் இந்த நாடும் மௌனம் காத்தது. ஒருவருக்குத் தண்டனை வழங்கிவிட்டார்கள் என்பதற்காக மகிழ்ச்சியடைய முடியாது.

நாளை பூமரங்போல இன்னுமொருவரை நாடி வருகின்றபோதே அதற்குப் பதிலளிக்க கூடியதாக இருக்கும். அர்ச்சுனா ராமநாதன் கூறிய சகல விடயங்களையும் நியாயப்படுத்தவில்லை. அதேநேரம் அவருக்காக விரிக்கப்படுகின்ற வலை நாளை எத்தனை பேருக்கு சிக்கலாக மாறும் என்பதே கேள்விக்குரிய விடயமாகும்.

**தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான பேச்சுவார்த்தைகள் மந்தநிலையில் இருப்பதுபோன்றே தெரிகிறது. ஜனாதிபதி தெரிவான பின்னர் இலங்கை தமிழரசுக் கட்சியும் ஒரு முறை மாத்திரமே ஜனாதிபதியை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தது. ஆனால், அதன் பின்னர் அதுதொடர்பில் எவ்வித ஆழமான பேச்சுவார்த்தைகள் எதுவும் இடம்பெறவில்லையே?**

இந்த அரசாங்கம் அரசியல் பேச்சுவார்த்தை தொடர்பில் இதுவரையில் எவ்வித கரிசனையும் கொள்ளவில்லை. நாங்கள் அவர்களுடன் பேசியபோது பேசலாம் என்று கூறுகிறார்களே தவிர, புதிய அரசியலமைப்பு வரும் அது வரும்போது பேசுவோம் என்று சொல்கிறார்களே தவிர, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியாக தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவர்களாகக் காணவில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் அவர்களுடன் இருப்பதுபோல் உணர்கிறார்கள். உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் இந்த உணர்வு நிலைகளில் மாற்றம் ஏற்படுமென்று நினைக்கிறேன்.

சர்வதேச அழுத்தமும் இவர்களுக்கு குறைவாகவே இருக்கிறது. புதிய அரசாங்கம் என்பதால் சிறிதுகாலம் விட்டுப் பார்க்கலாமே என்ற நிலைப்பாட்டிலேயே சர்வதேசமும் இருக்கிறது. ஒரு 06 மாத காலப்பகுதிக்குள் இந்த விடயங்கள் தொடர்பில் அதிக சிரத்தை எடுக்காவிட்டால் சர்வதேச ரீதியான ஒழுங்குக்குக் கொண்டுசெல்லப்படும். எந்த அரசாங்கத்திடம் பேசுவதானாலும் அதில் சர்வதேச தரப்பின் சர்வதேச நாடுகளுடைய அழுத்தம் இல்லாமல் அதனைச் செய்ய முடியாதென்பதே எங்களின் உறுதியான நிலைப்பாடும். எனவே, சர்வதேச அழுத்தம் இல்லாத அரசியல் தீர்வு தீர்வாக அமையப் போவதுமில்லை.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் இதுவரையில் எந்த பேச்சும் இல்லை. அதுதொடர்பில் தமிழ்க் கட்சிகளுடன் கலந்துரையாடப்பட்டதாகவும் நான் அறியவில்லை.

**வடக்கு, கிழக்கில் இடம்பெறும் காணி அபகரிப்பு தொடர்பில் நீங்கள் உள்ளிட்ட அரசியல் தலைமைகள் கொடுத்தாலும் அரசாங்கத்தின் கரிசனை குறைவாக இருப்பதுபோன்றே தெரிகிறது. இந்த விடயத்துக்கு மேலும் உறுதியான அழுத்தமொன்று அவசியமல்லவா?**

குறுந்தூர்மலை, வெடுக்குநாரிமலை போன்ற விடயங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதே தவிர, வழக்கின்மூலம் எவ்வாறான தீர்வு வரும் என்று கூற முடியாது. ஆனால், பல இடங்களில் விகாரைகளை அமைத்துவிட்டு தமிழர்களின் நிலங்களை அந்த விகாரைகளுக்குச் சொந்தமென அழுத்திப் பிடிக்கும் பிக்குமாரின் நடவடிக்கைகளை நாங்கள் அவதானிக்கிறோம்.

அது தமிழர் நிலங்களைப் பறிப்பதற்கான, அவர்களுடைய கலாசார அடையாளங்களை சிதைப்பதற்கான ஒரு தந்திரோபயமாக இந்த அரசாங்கம் கையாளுகிறது. கால ஓட்டத்தில் தொடர்ந்தும் அவர்கள் இதனைக் கையாள முடியாது. காலத்துக்கு பொருத்தமானதாக இருக்கிறது.

வாரவெளியீடு
தமிழன்
THAMILAN WEEKLY

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 23, 2025


# வேட்புமனுக்கள் நிராகரிப்பும் நீதிகோரும் செயற்பாடுகளும்!

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 136 கட்சிகள் (தரப்புகள்) மற்றும் 23 சுயேச்சைக் குழுக்கள் தாக்கல் செய்திருந்த வேட்புமனுக்களில் 22 கட்சிகள் மற்றும் 13 சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, மலையகத்தில் - ஏன் கொழும்பில்கூட பல தரப்புகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 9 சபைகளில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்புமனுக்களும் 3 சபைகளில் தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்புமனுக்களும் 2 சபைகளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்புமனுக்களும் பல சபைகளில் அர்ச்சுனா அணியின் (சுயேச்சைக் குழு) வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதனால் மேற்படி தரப்புகள் அதிர்ச்சியடைந்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் அர்ச்சுனா அணி (சுயேச்சைக் குழு) தாக்கல் செய்த வேட்புமனுக்களில் பருத்தித்துறை நகர சபைக்கான வேட்புமனு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பான முழுமையான விவரத்தை யாழ். மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் அறிவித்துள்ளார்.

வேட்புமனுத் தாக்கல் மற்றும் பரிசீலனை நடவடிக்கைகளுக்குப் பின்னர் கடந்த வியாழன் மாலை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இம்முறை தேர்தலுக்காக 148 கட்சிகளும் 27 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணத்தைச் செலுத்தியிருந்தன. இதில் 136 கட்சிகளும்(தரப்புகளும்) 23 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுப் பத்திரத்தைத் தாக்கல் செய்திருந்தன. அவற்றில் 22 கட்சிகளின் வேட்புமனுப் பத்திரங்களும் 13 சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுப் பத்திரங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகர சபைக்கான வேட்புமனுவில் தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, ஈரோஸ் ஜனநாயக முன்னணி ஆகிய கட்சிகளின் வேட்புமனுக்களும் ஞானப்பிரகாசம் சுலக்சன், நரேந்திரன் கௌசல்யா ஆகியோர் தலைமையிலான சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை நகர சபைக்கான வேட்புமனுவில் இராமச்சந்திரன் சுரேன், யோகேஸ்வரி அருளானந்தம் ஆகியோர் தலைமையிலான சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நகர சபைக்கான வேட்புமனுவில் அனைத்து வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகர சபைக்கான வேட்புமனுவில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கட்சியின் வேட்புமனுவும் மகாலிங்கம் சதீஸ், பெரியான் சிவகுருநாதன் ஆகியோர் தலைமையிலான சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன. காரைநகர் பிரதேச சபைக்கான வேட்புமனுவில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கான வேட்புமனுவில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவு பிரதேச சபைக்கான வேட்புமனுவில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபைக்கான வேட்புமனுவில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கான வேட்புமனுவில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கட்சியின் வேட்புமனுவும் துரைராஜா சுஜிந்தன் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கான வேட்புமனுவில் சவரிமுத்து ஸ்டாலின் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்கான வேட்புமனுவில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கான வேட்புமனுவில் தமிழ் மக்கள் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கான வேட்புமனுவில் மக்கள் போராட்ட முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைக்கான வேட்புமனுவில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் வேட்புமனுக்களும் தவம் தவனிலாதாசன் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை பிரதேச சபைக்கான வேட்புமனுவில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் வேட்புமனுக்களும் அல்பிரட் ரெஜி ராஜேஸ்வரன் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரி பிரதேச சபைக்கான வேட்புமனுவில் வைத்தியலிங்கம் ஜெகதாஸ் தலைமையிலான சுயேச்சைக் குழுவும் குணரட்ணம் குகானந்தன் தலைமையிலான சுயேச்சைக் குழுவும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேச சபைக்கான வேட்புமனுவில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகளின் வேட்புமனுக்களும் திலீப் தீபாரஞ்சன் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடருவோமென்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 9 உள்ளூராட்சி மன்றங்களில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பல இடங்களில் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளமையால் நாளை திங்கட்கிழமைக்குப் பின்னர் எஞ்சியிருக்கும் ஆறு வாரங்களும் இந்த விவகாரம் தேர்தல் சர்ச்சை- நீதிமன்றத்திலும் சூடாக எதிரொலிக்கும் எனத் தெரிகின்றது.

தமிழர் பிரதேசத்தில் பல கட்சிகள் மற்றும் குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக அத்தரப்புகள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு சமர்ப்பித்து நிவாரணம் பெறுவதற்குத் துடியாய்த் துடிக்கின்றன என்று தெரிகின்றது.

தேர்தல் ஒழுங்குவிதிகள் தொடர்பாக தேர்தல் ஆணையத்தின் வியாக்கியானத்தில் திருப்திப்படாத தரப்புகள் இந்த வழக்குகளைத் தாக்கல் செய்வதற்குத் தயாராகி வருகின்றன.

விடயம் நீதிமன்றுக்குச் செல்லவிருப்பதால், அதிலுள்ள சரி பிழைகள் பற்றி இப்போது நாங்கள் விமர்சிப்பது அல்லது கருத்து வெளியிடுவது பொருத்தமாக இருக்காது.

எனினும், தமிழர் பிரதேசத்தில் பல டசின்கணக்கான வேட்புமனுக்கள் குறிப்பாக, பல கட்சிகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றன என்பது உண்மைதான்.

ஆயினும், அவை எல்லாவற்றுக்கும் நீதிமன்றின் மூலம் நிவாரணம் கிடைக்குமா என்பது கேள்விக்குறியே.

ஆயினும், வடக்கிலிருந்தும் மலையகத்திலிருந்தும் பல கட்சிகளும் தரப்புகளும் தத்தமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து நீதிமன்றுக்குச் செல்வதற்கு முடிவு செய்துவிட்டன. அதற்கு முழுமூச்சில் அவை தயாராகி வருகின்றன என்று செய்திகள் கிடைத்துள்ளன.

உரிய சட்ட ஆவணங்களைத் தயார் செய்து, அடுத்த வாரத்திலேயே அவை நீதிமன்றுக்குச் செல்லக்கூடியதாக இருக்கும். இப்படி வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் பல டசின்கணக்கில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டால் அடுத்துவரும் வாரங்களில் அந்த வழக்குகளைக் கையாள்வதிலேயே உயர்நீதிமன்றத்தின் நேரம் போய்விடும் என்று தோன்றுகின்றது.

சில சமயங்களில் முறைப்பாட்டாளர்களின் விண்ணப்பங்களை ஏற்று, பல உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை தற்காலிகமாக ஒத்திவைக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வேட்புமனுத் தாக்கல் தொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்ட ஒழுங்குவிதிகளின் வியாக்கியானம் தொடர்பில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு நிலைமையே இந்தக் குழப்பங்களுக்குப் பிரதான காரணம் என்று கூறப்படுகின்றது.

அவற்றின் அந்த ஒழுங்குவிதிகளின் வியாக்கியானத்தில் உயர்நீதிமன்றம் தலையிடுமா, வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட தரப்புகளுக்கு நீதி, நியாயம் கிடைக்கும் விதத்தில் உத்தரவுகளை உயர்நீதிமன்றம் விடுக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். தேர்தல் வேட்புமனுக்கள் நிராகரிப்புக்கு பின்னணியாக அரசின் மறைகரம் இருப்பதாகக் கூறப்படும் விமர்சனங்கள் கூட இந்த நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் அடிபட்டுப் போய்விடலாம்.

# இன்னொரு மின்சார நெருக்கடியை நோக்கி




மீநிலங்கோ தெய்வேந்திரன்

அண்மையில் ஏற்பட்ட மின்தடைக்கான பழியை குரங்கின் மேல் சுமத்தி விட்டு இலங்கையர்கள் அப்பால் நகர்ந்து விட்டார்கள். ஆனால், உண்மையில் என்ன நடந்தது, இனி இவ்வாறு நடக்காமலிருக்க என்ன செய்ய வேண்டும், இதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் யார், இந்தத் தவறுக்கு யாராவது பொறுப்பேற்றார் களா போன்ற கேள்விகளை இலங்கையர்கள் எழுப்பத் தவறியுள்ளனர். இது ஆபத்தானது.

பொது அலுவல்கள் மீதான மக்கள் அக்கறை முக்கியமானது. வெறுமனே சம்பளமும் பொருட்களின் விலைகளும் பற்றியுமே கவனம் கொள்ளாமல் அனைவரையும் பாதிக்கின்ற பொது விடயங்களில் மக்கள் அக்கறையாக இருக்க வேண்டியுள்ளது. அரசியல்வாதிகளிடம் மாற்றத்தைக் கோரும் நாம் அம்மாற்றத்தை நம்மிலும் ஏற்படுத்த வேண்டும்.

இலங்கையின் மின்சாரத்துறை சத்தமில்லாமல் பல மாற்றங்களை நோக்கி நகர்கிறது. ஆனால், அவை நாட்டுக்கும் மக்களுக்கும் பயனுள்ள மாற்றங்களா என்பது கேள்விக்குரியது. கடந்த மாதம் ஏற்பட்ட மின்தடைக்கு குரங்கின் மீது முதலில் பழி போடப்பட்டாலும் பின்னர் அளவுக்கதிகமான சூரியகல மின்சாரம் உற்பத்தியான மின்சாரக் கட்டமைப்பைத் தளம்பல் அடையச் செய்தமையே இந்த மின்தடைக்குக் காரணம் என்று கூறப்பட்டது.

இதைத் தொடர்ந்து மெதுமெதுவாக இலங்கையில் மின்சார நெருக்கடி ஏற்படுவதற்கான பழி புதுப்பிக்கத்தக்க சக்தி மீது போடப்பட்டது. இது விந்தையானது. ஏனெனில், இலங்கை 2030இல் 70 வீதமான மின்சாரத்தைப் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து பெறுவதற்குத் திட்டமிட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாகவே கூரைகளில் இடப்படுகின்ற சூரியகலன்கள் உட்பட பல புதிய புதுப்பிக்கத்தக்க சக்தி முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வந்தது.



இந்தப் பின்புலத்தில் மின்தடையைத் தொடர்ந்து புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் மின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் வேலையில் இலங்கை மின்சார சபை இறங்கியுள்ளது. கடந்த மாதத்திலிருந்து தேவை குறைந்த நாட்களில் (சனி மற்றும் ஞாயிறு) மின்சார உற்பத்தியைக் குறைக்கவும் நிறுத்தவும் சிறிய நீர்மின் நிலையங்களுக்கு இலங்கை மின்சார சபை உத்தரவிடத் தொடங்கியுள்ளது.

உதாரணமாக, மார்ச் 02ஆம் திகதியன்று முப்பது சிறிய நீர் மின் நிலையங்கள் காலை 11 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மூடப்பட வேண்டுமென்றும் பின்னர் மார்ச் 09 அன்று அதே நேரத்தில் சுமார் 40 மின் நிலையங்களின் உற்பத்தியை 50 சதவீதம் குறைக்க வேண்டுமென்றும் இலங்கை மின்சார சபை அறிவுறுத்தல்களை வழங்கியது.

இந்தத் திட்டமிடப்படாத மின் குறைப்புகளுக்கு இலங்கை மின்சார சபை இலங்கை பொது பயன்பாட்டு ஆணையத்திடம் ஒப்புதலைப் பெறவேண்டும். ஆனால், இந்த ஒப்புதல் கோரப்படவில்லையென்றும் ஆணையம் கூடுதல் தகவல்களைக் கேட்டிருந்தாலும் அத்தகவல்களை இலங்கை மின்சார சபை வழங்கவில்லையென்றும் ஆணையம் தெரிவிக்கின்றது.

இதேவேளை, மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மின்சார சபைக்கும் சுயாதீன மின் உற்பத்தியாளர்களுக்குமிடையே கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்களில் மின் குறைப்புகளுக்கான ஏற்பாடுகள் இல்லை என்பதால் இப்போது இவ்வுற்பத்தியாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவேண்டும். அது ஏராளமான அரச பணத்தை விரயமாக்கும். இதேபோன்று புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து பெறப்படும் மின்சாரத்தைப் பல்வேறு வழிகளில் கட்டுப்படுத்த மின்சார சபை முனைகிறது.

நாடு முழுவதும் 430 மெகாவோட் உற்பத்திசெய்யும் சுமார் 230 சிறிய நீர்மின் திட்டங்கள் உள்ளன. அதேபோல சூரியகல மின் உற்பத்தியைக் குறைக்கச் சொல்லியும் அறிவுறுத்தல்களை இலங்கை மின்சார சபை வழங்கியுள்ளது. இந்த குறுக்கீடுகளுக்கும் அரசாங்கம் நட்டஈடு வழங்கவேண்டியிருக்கும்.

ஏனெனில், சூரியகல மின் உற்பத்தியை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கும் மின்சார சபைக்கும் உடன்படிக்கைகள் உள்ளன. அதன்படி தடையற்ற மின்சாரத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகள் உள்ளன. அதை மீறினால் அவர்கள் மீது மின்சார சபை நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், மின்சார உற்பத்தியை நிறுத்துவது பற்றிய ஏற்பாடுகள் குறித்த உடன்படிக்கைகளில் இல்லை. இவை இலங்கையின் புதுப்பிக்கத்தக்க சக்தித் துறையை பின்நோக்கி இழுக்கும் காரணிகள்.

புதுப்பிக்கத்தக்க சக்தி ஒத்துழைப்பில் இலங்கையும் இந்தியாவும் திருகோணமலையின் கிழக்கு துறைமுக பகுதியில் சூரிய மின் நிலையங்களை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தை முறைப்படுத்தியுள்ளன. சம்பூரில் நிறுத்தப்பட்ட அனல் மின்நிலையத்துக்கு மாற்றாக, சூரிய மின்கலங்களின் மூலமான மின் உற்பத்தி நடைபெறவிருக்கிறது. இதன் முதல் கட்டத்தில் 50 மெகாவோட் சூரிய மின் நிலையமும் அதைத் தொடர்ந்து இரண்டாவது கட்டத்தில் 85 மெகாவோட் வசதியும் உருவாக்கப்படும்.

இந்த முயற்சி இலங்கை மின்சார சபை மற்றும் இந்தியாவின் தேசிய வெப்ப மின் நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு கூட்டு முயற்சியாகும். இது ஆலைகளின் கட்டுமானம், உரிமை மற்றும் செயற்பாட்டில் கவனம் செலுத்துகிறது.

இந்தியாவின் தேசிய வெப்ப மின் நிறுவனமே ஆரம்பத்தில் இதே இடத்தில் நிலக்கரி மின் நிலையத்தைக் கட்ட திட்டமிட்டிருந்ததென்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தத் திட்டத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது விஜயத்தின்போது தொடங்கி வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போது நிபுணர்கள் எழுப்புகின்ற கேள்வி யாதெனில், தற்போதுள்ள புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து வருகின்ற மின்சாரம் வலையமைப்பில் தளம்பலை ஏற்படுத்துவதால் எதுவித புதிய புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களையும் மின்சார சபை அனுமதிப்பதில்லை.

10 அல்லது 20 கிலோவோட் அளவிலான கூரைச் சூரியகலன்களுக்கே அனுமதி இல்லை. ஏனெனில், அவை மின்சார வழங்கல் கட்டமைப்பைத் தளம்பலடையச் செய்துவிடுமென்று மின்சார சபை தொடர்ந்து சொல்கிறது.

இந்நிலையில், சம்பூரில் அமையவுள்ள 135 மெகாவோட் சூரிய மின் நிலையத்துக்கு அவர்களால் எவ்வாறு இடமளிக்க முடியும்? அங்கிருந்து உற்பத்தியாகும் மின்சாரம் கட்டமைப்பைத் தளம்பலடையச் செய்யாதா? இந்த வினா நியாயமானது.

அதேவேளை, இங்கு உற்பத்தியாகும் மின்சாரம் காலப்போக்கில் இந்தியாவுக்கு ஏற்றுமதியாவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா, அதற்கான உடன்படிக்கைகள் ஏதேனும் உள்ளனவா போன்ற கேள்விகள் எழுவது இயல்பானது.

புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் மீதான தடை பல ஐயங்களை எழுப்புகிறது. அதேவேளை, எதிர்வரும் ஜூன் மாதம் முதல் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதை நோக்கியே மின்சார சபையின் நடவடிக்கைகள் இருக்கின்றன.

ஜூன் மாதத்தில் பயனர் கட்டணங்களில் மிகப்பெரிய அதிகரிப்புக்குக் காரணமான பெரிய நாடகத்தின் ஒரு பகுதியே இப்போது அரங்கேறுகிறது என்று பலர் குற்றஞ்சாட்டுகிறார்கள். சிறிய தரையிலுள்ள மற்றும் கூரை சூரிய மின்சக்தி மற்றும் சிறிய நீர்மின் நிலையங்கள் ஆகியவற்றை துண்டிப்பது இயற்கையாகவே அதிக எண்ணெய் பயன்பாட்டை அனுமதிக்கும். பின்னர் அதிக செலவினங்களைக் காட்டலாம். இதனால் இழப்புகள் ஏற்படும், பின்னர் பயனர் கட்டணங்களில் மிகப்பெரிய அதிகரிப்புக்கான கோரிக்கை எழும். இறுதியில் இந்த அதிக செலவினங்கள் மின்சாரக் கட்டண அதிகரிப்பாக மக்கள் தரையில் விழும்.

(தொடர்ச்சி 08ஆம் பக்கம்)

# தேர்தலில் சாதிக்குமா அரசியல் கட்சிகள்?



எம்.எஸ்.அமீர் ஹுசைன்



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும் கால அவகாசம் 2024.03.20ஆம் திகதியுடன் முடிவடைந்திருக்கின்றது. அங்கீகரிக்கப்பட்ட 107 அரசியல் கட்சிகள் மற்றும் 49 சுயேச்சைக் குழுக்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் 2025 மே மாதம் 06ஆம் திகதி நடைபெறுமென்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருக்கின்றது.

பிரதான அரசியல் கட்சியான தேசிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ.ல.சு.கட்சி, ஐ.தே.கட்சி, கிழக்கில் சில முஸ்லிம் கட்சிகள், வடக்கில் தமிழ்க் கட்சிகள் பல ஆகியவற்றுடன் சுயேச்சைக் குழுக்கள் பலவும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிட வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

மாநகர சபைகள் 28, நகர சபைகள் 36 மற்றும் பிரதேச சபைகள் 272 ஆகியவை உள்ளடங்கலாக 336 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறவிருக்கின்றது. அவற்றுக்கான வேட்புமனுத் தாக்கல் நடைபெற்றிருக்கின்றது. இந்நிலையில், 2025 மே மாதம் 06ஆம் திகதி இந்தத் தேர்தல் இடம்பெறவுள்ளது.

2023ஆம் ஆண்டு இதே தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்த பின்னர் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் தேர்தல் பிற்போடப்பட்டது. நாட்டின் மோசமான பொருளாதார நிலைமையைக் காரணங்காட்டி தேர்தல் நடத்த 1000 கோடி ரூபா பணம் இல்லை என்று தெரிவித்து தேர்தலை பிற்போட்டார். பின்னர் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விசேட திருத்தச் சட்டமூலமொன்றின் மூலம் முன்னைய வேட்புமனுக்களை இரத்துச்செய்து புதிதாக வேட்புமனுத் தாக்கல் செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் ஏற்கனவே இரண்டு தேர்தல்கள் நடத்தப்பட்டு நாட்டில் பாரிய அரசியல் மாற்றமொன்று ஏற்பட்ட பின்னர் இந்தத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடைபெறவிருக்கின்றன.

நடந்து முடிந்த தேர்தலின் பின்னர் நாட்டில் நடைமுறையிலிருந்த பல அரசியல் கட்சிகள் மிக மோசமான பின்னடைவைக் கண்டிருக்கின்றன. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் வாக்குப்பலம் 56 இலட்சத்திலிருந்து 43 இலட்சமாக வீழ்ச்சி கண்டது. அதன் பின்னர் 2024ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மேலும் பின்னடைவு கண்டு 19 இலட்சத்து 68 ஆயிரமாக வீழ்ச்சி கண்டது.

அவ்வாறே 2024 செப்டெம்பர் பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி தலைமையிலான கூட்டணி 5,00,835 வாக்குகளையும் 2019 மற்றும் 2020 தேர்தல்களில் 69 இலட்சம் வாக்குப்பலத்தைப் பெற்றிருந்த பொதுஜன பெரமுன கட்சி, நாமல் ராஜபக்ஷ தலைமையில் 3,50,429 வாக்குகளைப் பெற்று பின்தள்ளப்பட்டது.

வடக்கில் தமிழரசுக் கட்சி நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் 2,57,813 வாக்குகளையும் கிழக்கை பிரதானமாகக்கொண்டு தனித்துப் போட்டியிட்ட ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் கட்சி 87,038 வாக்குகள் என்ற அடிப்படையிலும் பாரிய பின்னடைவுகளைச் சந்திக்க நேரிட்டது. எதிர்பாராதவிதமாக 2024 ஜனாதிபதித் தேர்தலிலும் அதன் பின்னர் பொதுத் தேர்தலிலும் ஜே.வி.பியின் மறு வடிவமான தேசிய மக்கள் சக்தி எழுச்சி கண்டதால் ஏற்பட்ட அரசியல் மாற்றமே மரபு ரீதியாக செல்வாக்குப் பெற்றிருந்த கட்சிகள் வீழ்ச்சி காண அடிப்படைக் காரணமாக அமைந்ததெனலாம்.

2024 செப்டெம்பர் மாதம் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மொத்தமாக 68,63,186 வாக்குகளைப் பெற்றுக்கொண்டது. அக்கட்சி 2024 ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொண்ட வாக்குகள் 56,34,915 ஆகும். ஆனால், பொதுத் தேர்தலில் மேலும் 12 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

எவ்வாறாயினும் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கடந்த 07 மாத காலத்தில் நாட்டில் ஏற்படுத்திய மாற்றங்கள், மக்களது வாழ்க்கைச் செலவு உயர்வைக் குறைக்க முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போன்ற காரணங்களை அடிப்படையாக வைத்து பார்த்தால் தொடர்ந்தும் பொதுத் தேர்தலிலிருந்த மக்கள் ஆதரவு இருக்கின்றதா அல்லது வீழ்ச்சி கண்டிருக்கின்றதா என்பதை கண்டுகொள்ள நல்ல வாய்ப்பாக இந்தத் தேர்தல் அமையவிருக்கின்றது. அவ்வாறு தேசிய மக்கள் சக்தி ஏதாவதொரு வகையில் வீழ்ச்சியை நோக்கிச் செல்வதாக இருந்தால் அந்த வீழ்ச்சி அல்லது மக்கள் ஆதரவிலான பின்னடைவு கடந்த பொதுத் தேர்தலில் படுதோல்வியைத் தழுவி வாக்குப்பலம், மக்கள் ஆதரவை இழந்த கட்சிகளின் மீளெழுச்சிக்கு வழிவகுப்பதாக அமையலாம்.

அதிலும் பிரதான எதிர்க்கட்சியாக இருந்துவரும் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் நாமல் ராஜபக்ஷவின் தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சி மற்றும் ஐ.தே.கட்சி, ஸ்ரீ.ல.சு.கட்சி என்பவற்றின் மீளெழுச்சி எவ்வாறு அமையும் என்பது முக்கியமானதாகும். ஆனாலும் தற்போதைய நிலையில் இந்த அரசாங்கத்தால் புதிதாக எந்தவிதமான மாற்றத்தையும் இதுவரையில் ஏற்படுத்த முடியாமல் போனாலும் மக்களின் மனதை கவர்ந்திழுத்தெடுக்கும் வகையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் உரைகள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

அரசாங்கம் என்ற வகையில் இதுவரையில் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி, மக்களின் வாழ்க்கைத் தரத்திலான மாற்றம் என்பவற்றை இலக்காகக்கொண்ட திட்டங்களை முன்வைக்கவில்லை. ஆனாலும் தொடர்ந்தும் கடந்த ஆட்சியாளர்களது முறைகேடுகளையும் ஊழல்களையும் தேடியெடுத்து பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்து மக்கள் ஆதரவைத் தேடுவதோடு ஏனைய அரசியல் கட்சிகள் குறித்த மக்களது வெறுப்பைத் தூண்டும் வேலைகள் நடைபெறுகின்றன.

அடுத்த விடயமாக, தற்போது பேசுபொருளாக மாறியிருக்கின்ற முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 1989 மற்றும் 19190ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்ற பட்டலந்தை சித்திரவதை முகாம் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை வெளியே போடப்பட்டிருக்கின்றது. அக்காலப்பகுதியில் ஜே.வி.பி. ஆதரவாளர்கள் கடத்தப்பட்டும் சிறை பிடிக்கப்பட்டும் சித்திரவதை செய்து கொல்லப்பட்டமை தொடர்பான விசாரணை ஆணைக்குழு அறிக்கையாக இந்த பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை இருக்கின்றது. இவ்வறிக்கை 1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க காலப்பகுதியில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணைகளின் பின்னர் தயாரிக்கப்பட்ட அறிக்கையாகும்.

இந்த அறிக்கை 2001ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் கிடப்பில் போடப்பட்டிருந்ததாகும். இப்போது புதிதாக தூசு தட்டப்பட்டு வெளியே எடுக்கப்பட்டு கடந்த 2025.03.17ஆம் திகதி அமைச்சரும் சபை முதல்வருமான சுனில் ஹந்துன்நெத்தியால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கை தொடர்பான இரண்டு நாள் விவாதம் பாராளுமன்றத்தில் நடத்தப்படவிருக்கின்றது.

2025.04.10ஆம் திகதியும் அதன் பின்னர் மே மாதத்தில் ஒருநாளில் என்று இரண்டு நாட்களாக விவாதம் நடத்தப்பட்டு பட்டலந்தை வதை முகாமுக்குப் பொறுப்பானவர் என்ற அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது நடவடிக்கை எடுக்கத் திட்டமிடப்பட்டு வருகின்றது. ஒன்றில் அவரது பிரஜாவுரிமையை நீக்குவது அல்லது சட்ட மா அதிபருக்கு அறிக்கையை சமர்ப்பித்து சட்ட நடவடிக்கை எடுக்கக் கோருவது என்ற அடிப்படையில் முன்னெடுப்புகள் நடந்துகொண்டிருக்கின்றன.

எவ்வாறாயினும் ரணில் விக்கிரமசிங்க இந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பாக தெரிவிக்கையில், தனக்கும் பட்டலந்தை வதை முகாம்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அன்றைய 1989 மற்றும் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையில் சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க அப்போதைய பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரத்ன மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்றார். அப்போதைய சந்தர்ப்பத்தில் குறித்த பிரதேசத்தில் பொலிஸாருக்குப் பாதுகாப்புக்காக தங்குவதற்காக வீடமைப்புத் தொகுதியொன்றை வழங்கியது மாத்திரமே தனது வேலையாக இருந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போது இந்த வதை முகாம் பற்றியும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை பற்றியும் பேசும் ஜே.வி.பியினர் அன்றைய சூழ்நிலையில் பல சந்தர்ப்பங்களில் இதே ரணில் விக்கிரமசிங்கவுடன் கைகோர்த்து செயற்பட்டனர். 2003ஆம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்கவுடன் இருந்து அந்த ஆட்சிக்கு ஆதரவு வழங்கியபோது பட்டலந்தை பற்றி பேசவில்லை. அதன் பின்னர் 2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியின் பங்காளிகளாக இருந்தபோதும் பட்டலந்தை பற்றி பேசவில்லை. அதேபோன்று ரணில் பிரதமராக இருந்த 2015 முதல் 2019 இடைப்பட்ட நல்லாட்சிக் காலத்திலும் இதே ஜே.வி.பி. ஆட்சிக்கு முட்டுக் கொடுத்ததாயினும் பட்டலந்தை பற்றி பேசாமல் ரணிலுடன் தோள் கொடுத்து அரசியல் நடத்திவிட்டு இப்போது ஏன் பட்டலந்தை பற்றி பேச வேண்டும் என்ற கேள்விகள் ஐ.தே.கட்சி தரப்பிலிருந்து கேட்கப்படுகின்றது.

அதேநேரம் 1989 மற்றும் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்பாவி இளைஞர்களை வீதிக்கு இறக்கி அரசுக்கு எதிரான வன்முறைகளுக்குத் தள்ளியது இந்த ஜே.வி.பியாகும். அன்றைய சூழ்நிலையில் இலங்கை - இந்திய உடன்படிக்கைக்கு எதிராக செயற்பட்டதோடு, அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்துக்கு எதிராக கிளர்ச்சி செய்தது. பல்கலைக்கழகங்களில் முதலில் தாய்நாடு என்றும் அடுத்து பட்டம் என்றும் கடுமையான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. நாட்டில் அசாதாரண சூழ்நிலையைத் தோற்றுவித்ததோடு அரசாங்கத்துக்கு ஆதரவான அரச அதிகாரிகள், பொலிஸார், இராணுவத்தினர் என்று தாராதரம் பாராது பலரை ஜே.வி.பி. படுகொலை செய்தது. அரச சொத்துகளை அழித்து நாசமாக்கியது. சுமார் 4000 பொதுப் போக்குவரத்து பஸ்கள் எரித்து நாசமாக்கப்பட்டன.

அதுமட்டுமல்லாமல் 1960 ஐ.தே.க. ஆதரவாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்று ஐ.தே.க. குற்றஞ்சாட்டுகின்றது. இத்தகைய வன்முறையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கையாக அப்பாவி இளைஞர்கள் இவ்வாறு வதை முகாம் என்றும் சிறைப்படுத்தல் என்றும் கொலை செய்யப்படும் நிலை ஏற்பட்டது. ஆனாலும் அதன் பின்னர் எந்த அரசாங்கமும் 1989 மற்றும் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற ஜே.வி.பி.யின் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதென்ற அடிப்படையில் ஆணைக்குழுக்களை நியமித்து விசாரணைகள் நடத்தப்படவில்லை. ஆனாலும் 1970ஆம் ஆண்டு முதல் 1977ஆம் ஆண்டு காலப்பகுதி வரையில் அப்போதைய பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியில் இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாக அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜயவர்தன காலப்பகுதியில் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து விசாரணை செய்து சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமையை 07 வருடங்களுக்குப் பறிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆனாலும் 1994ஆம் ஆண்டு பதவிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க பாராளுமன்றத்தில் விசேட சட்டமூலமொன்றை நிறைவேற்றி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமையைப் பறித்த செயல் சட்டரீதியற்றது என்று திருத்தம் செய்யப்பட்டதோடு, அவரை குற்றமற்றவர் என்றும் அறிவித்தது. இப்போது பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை விவாதத்துக்கு எடுத்து ரணில் மீது குற்றச்சாட்டை முன்வைத்து ஜே.வி.பி. குற்றமற்ற கட்சி என்றும் அதன் அப்பாவி இளைஞர்கள் அநியாயமாக ஐ.தே.க. ஆட்சியில் படுகொலை செய்யப்பட்டனர் என்றும் வரலாற்றை மாற்றி எழுதுவதே பின்னணி நோக்கமாகும்.

ஏனெனில் இன்றைய தேசிய மக்கள் சக்தி ஜே.வி.பியின் மறு வடிவமாக இருந்தாலும் அதன் முன்னாள் அங்கத்தவர்களுக்கு குற்றம் இழைத்த அவப்பெயர் இருந்து வருகின்றது. இரத்தக்கறை படிந்த வரலாறு இருக்கின்றது. அந்த வரலாற்றை மாற்றி எழுத இனிமேல் வேறு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. அதற்காகத்தான் பட்டலந்தை விசாரணை ஆணைக்குழு அறிக்கை தூசு தட்டப்படுகின்றது எனலாம். சந்தர்ப்பமாக பயன்படுத்தப்படுகின்றது. மறுபுறமாக தேர்தல் இலக்கும் இந்த ஆணைக்குழு தொடர்பான விவாதத்தில் இருக்கின்றது. தற்போதைய நிலையில் இந்த ஆணைக்குழு அறிக்கையைக் காட்டி தேர்தல் பிரசாரத்தை முன்னெடுக்கவும் முடியுமாகின்றது. அதுபற்றி பேசும்போது அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டை திசை திருப்பவும் சந்தர்ப்பமாகப் பயன்படுத்த முடிகின்றது. அத்துடன், மேடைப் பிரசார ஆயுதமாகவும் பயன்படுத்த முடிகின்றது.





## Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209

# வேறுவழியின்றி சரணடைந்த தேசபந்து!

★ கை விலங்கு இடப்படாமல் கூட்டிவரப்பட்ட விநோதம்

★ தனி அறையில் அடைத்து வைக்கப்பட்ட தென்னக்கோன் உணவை ஏற்க மறுப்பு

★ மறைத்துவைத்த அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்க தயக்கம்



மாத்தறை நீதவான் நீதிமன்ற உத்தரவைப் புறக்கணித்து தலைமறைவாகி வாழ்ந்து வந்த முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நீதிமன்றத்தில் சரணடைந்த நிலையில், அவரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 03ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க மாத்தறை நீதவான் நீதிமன்றம் கடந்த வியாழன் (20) உத்தரவு பிறப்பித்தது.

உடனடியாக கைதுசெய்யுமாறு நீதிமன்றத் தால் பிடியாணை பிறப்பிக்கப் பட்டு, சுமார் 20 நாட்கள் தலைமறைவாகி யிருந்த தேசபந்து தென்னக்கோன், மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் (மார்ச் 19) சரணடைந்தார். தனது வழக்கறி ஞர்களுடன் காலை 8 மணியளவில் அவர் நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

இந்நிலையில், கடும் பாதுகாப்புக்கு மத்தியில் தேசபந்து தென்னக்கோன் மாத்தறை நீதவான் நீதிமன்றத் துக்கு அழைத்து வரப்பட்டிருந் தார். நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத் தப்பட்டதையடுத்து, பிணை வழங்கும் கோரிக்கையை நீதவான் நிராகரித்ததுடன், அவரை எதிர்வரும் ஏப்ரல் 03ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார். தேசபந்து தென்னக் கோன் மாத்தறை நீதவான் நீதிமன் றத்தில் சரணடைந் துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, அன்றைய தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேசபந்து தென்னக் கோனின் வீட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை (மார்ச் 18) குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விசேட சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்தச் சோதனை நடவடிக்கைகளின் போது, பெரும் எண்ணிக்கையிலான மதுபானப் போத்தல்கள், பெறுமதிமிக்க கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கைத்துப்பாக்கியொன்று என்பன மீட்கப்பட்டதாக அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டிருந்தார்.

தென்னக்கோனின் துப்பாக்கியெனக் கருதப்படும் பிஸ்டல் ரக துப்பாக்கி யொன்றை பொலிஸார் தமது பொறுப் புக்கு எடுத்தார்கள். அதேபோன்று அப்பிள் ரக இரண்டு தொலைபேசி களையும் பொலிஸார் மீட்டுள்ளனர். அந்தத் தொலைபேசிகளின் ஊடாக பாரி யளவிலான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமென நாம் நம்புகின்றோம் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால அன்று தெரிவித்தார்.

### தேசபந்து தென்னக்கோனை கைதுசெய்யும் உத்தரவுக்கான காரணம்?

தேசபந்து தென்னக்கோன், பதில் பொலிஸ் மா அதிபராகச் செயற்பட்ட 2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடத் தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவ மொன்றை அடிப்படையாகக் கொண்டே அவரை கைதுசெய்வதற்கான உத்தரவை மாத்தறை நீதவான் நீதிமன்றம் பிறப்பித் திருந்தது.

இலங்கையின் தென் மாகாணத்தில் அமைந்துள்ள மாத்தறை மாவட்டத்தின் வெலிகம பகுதியிலுள்ள சுற்றுலா ஹோட்டலொன்றை இலக்குவைத்து 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

வெள்ளை நிறத்திலான வேனொன்றில் வருகை தந்த அடையாளம் தெரியாத நபர்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். இதன்போது, அங்கு வருகை தந்த வெலிகம பொலி ஸார், குறித்த வெள்ளை நிறத்திலான வேனை நோக்கி பதில் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியிருந்தனர்.

இந்த பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத் தில் வேனில் வருகை தந்த இருவர் காயமடைந்து, கராப்பிட்டிய மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர்களுள் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வெலிகம பொலிஸார் நடத்திய விசாரணைகளில், வேனில் வருகை தந்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியவர்கள் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் எனத் தெரியவந்தது.




துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் காயமடைந்த நபர் மற்றும் உயிரிழந்த நபர் ஆகியோர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்பதும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் தொடர்பில் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் வெலிகம பொலிஸார் வழக்குப் பதிவுசெய்த நிலையில், இந்த வழக்கு விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்திருந்தன.

இதன்படி, இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் ஹோட்டல் மீது துப்பாக்கிப் பிரயோ கம் நடத்துவதற்காக குற்றப் புலனாய் வுத் திணைக்கள அதிகாரிகளை ஈடுபடுத் தியமை சட்டத்துக்குப் புறம்பானதென நீதிமன்றத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

மேலும், குற்றப் புலனாய்வுத் திணைக் கள அதிகாரியின் உயிரிழப்பானது குற்றச் செயல் என்ற அடிப்படையில் தீர்மா னத்தை எட்டிய மாத்தறை நீதவான் நீதி மன்றம், பதில் துப்பாக்கிச்சூட்டில் ஈடு பட்ட முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்ட 8 பேரை கைதுசெய்து நீதிமன்றத்தில் முன் னிலைப்படுத்துமாறு உத்தரவைப் பிறப்பித்தது.

### தலைமறைவான முன்னாள் பொலிஸ் மா அதிபர்

உடனடியாக கைதுசெய்து நீதிமன்றத் தில் முன்னிலைப்படுத்துமாறு மாத் தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப் பித்திருந்த பின்னணியில், முன் னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமறைவாகி யிருந்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் பல குழுக்களாக பிரிக்கப் பட்டு, நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

எனினும், தேசபந்து தென்னக்கோனை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரி களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்நிலையில், தேசபந்து தென்னக் கோனின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை நடத்தி, வாக்குமூலம் பதிவுசெய்திருந்தனர்.

இவ்வாறான பின்னணி யில், தேசபந்து தென்னக் கோனின் வீட்டை குற் றப் புலனாய்வுத் திணைக் கள அதிகாரிகள் சுற்றி வளைத்து, சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

தேசபந்து தென்னக் கோன் 1998ஆம் ஆண்டு பொலிஸ் சேவையில் இணைந்து கொண்ட நிலையில், அவர் இலங்கையின் 36ஆவது பொலிஸ் மா அதிபராக கட மையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### கடுமையாக எதிர்ப்பு வெளியிட்ட சட்ட மா அதிபர் திணைக்களம்

கண்ட இடத்தில் கைது செய்யும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், தலைமறைவாகி வாழ்ந்துவந்த முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் கடந்த புதன்கிழமை சரணடைந்த நிலையில், தேசபந்து தென்னக்கோனின் செயற்பாடுகளுக்கு சட்ட மா அதிபர் திணைக்களம் கடும் எதிர்ப்பை வெளியிட்டது.

சட்ட மா அதிபர் திணைக்களம் சார்பில் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் இவ்வாறு தமது எதிர்ப்பை வெளியிட்டார்.

இந்த வழக்கு விசாரணைகளை எடுத்துக்கொண்ட தருணத்தில், தேசபந்து தென்னக்கோன் சார்பில் வழக்கறி ஞர் ஷானக்க ரணசிங்க முன்னிலையாகி யிருந்தார்.

தேசபந்து பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டதையடுத்து நிழலுலக குழுக்கள் மற்றும் போதைப் பொருட்களுக்கு எதிரான போரை யுக்திய என்ற பெயரில் ஆரம்பித்தார். அவர் சிறை வைக்கப்படும் பட்சத்தில், அவரது உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுகின்றது. அதனால், எந்தவொரு நிபந்தனையின் கீழும் பிணையில் அவரை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென நீதிமன்றத்திடம் நாம் கோரிக்கை விடுக்கின்றோம் என தேசபந்து தென்னக்கோனின் சட்டத்தரணி கோரியிருந்தார்.

இதையடுத்து, சட்ட மா அதிபர் திணைக் களம் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலை யான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், பிணை வழங்கும் கோரிக்கைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டார்.




"பூனைக் குட்டி போல் ஒளிந்து வந்தால் பிணை கிடைத்து விடுமா? சட்டத்தரணிகள் தான் குற்றவாளிகளைப் பாதுகாப்பதாக கூறிய தேசபந்துவே இன்று சட்டத்தரணிகள் சூழ வந்தது அவர் செய்த பாவத்தின் வினை. எந்தவொரு சொத்தும் அவரின் பெயரில் இல்லை. அவருக்கு அடைக்கலம் கொடுத்தவர்களையும் கூண்டோடு அள்ள வேண்டும்" என்று அன்றையதினம் கொழும்பிலிருந்து விரைந்து மாத்தறை நீதிமன்றம் சென்ற மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் கிழி கிழியென கிழித்திருக்கிறார்.

நீதிமன்றம் கடந்த 27ஆம் திகதி தீர்ப்பை வழங்கிய பின்னர், பிரபாகரனை தேடுவதைப் போன்று பெரும் படையொன்று அவரைத் தேடியது. சிறைவைக்க வேண்டாம். மரண அச்சுறுத்தல் காணப்படுவதாகக் கூறுகின்றனர். தனது கடமைக்கான துப்பாக்கியை வீட்டின் படுக்கைக்கு கீழ் வைத்துவிட்டே, அவர் 20 நாட்கள் தலைமறைவாகி வாழ்ந்து வந்தார். அவரின் பெயரில் எந்தவொரு பதிவு செய்யப்பட்ட சொத்துகளும் இல்லை. குறைந்தது சைக்கிள் ஒன்று கூட இல்லை. எனினும், அதிகாரபூர்வமற்ற விதத்தில் 8 வீடுகள் அவர் வசம் காணப்படுகின்றன என்பது உறுதியாகியுள்ளது. நாங்கள் இன்னுமொன்றையும் கண்டுபிடித்துள் ளோம். அவர் இன்றும் இந்த நாட்டின் பொலிஸ் மா அதிபர். அவரோ அல்லது வீட்டிலுள்ள எவரும் 2021ஆம் ஆண்டுக் குப் பின்னர் தேர்தல் வாக்காளர் இடாப்பில் கூட தமது பெயரை பதிவு செய்யவில்லை. He is a Ghost. உண்மையில் அவர் ஒரு பேய்.

பகிரங்க பிடியாணை விடுக்கப்பட் டுள்ள சந்தேகநபரொருவர் டை, கோர்ட் அணிந்துகொண்டு பென்ஸ் காரில் புடைசூழ வந்து நீதிமன்ற மண்டப கதிரையில் அமர்ந்திருப்பதாக நான் அறிந்துகொண்டேன். அதன் காரண மாகவே சட்ட மா அதிபரின் சார்பில் நான் நீதிமன்றத்துக்கு வருகை தந்துள்ளேன். நகர்த்தல் பத்திரம் தொடர்பில் எங்களுக்கு அறிவிக்காமல் கூட திருட்டுப் பூனையைப்போன்று நீதிமன்றத்துக்கு வந்து பாழடைந்த வீட்டில் பானையை உடைப்பதுபோல் பிணை எடுத்துச் செல்ல முடியுமென்று எண்ணினாரோ தெரியவில்லை.

பகிரங்க பிடியாணை விடுக்கப்பட்ட நபரொருவர் சாட்சிக்கூண்டுக்கு வராமல் எதற்காக கதிரையில் அமர்ந்திருக்கிறார் என்பதை அறிந்துகொள்ள விரும்பு கிறேன். குற்றம் செய்த ஒருவர் சிங்கம் போல தோற்றத்தில் இவ்வாறு கதிரை யில் அமர்ந்திருக்க முடியாது. தொலை பேசியை ஓவ் செய்துவிட்டு, இரகசிய நடவடிக்கை, ஏமாற்று வேலைசெய்து 20 நாட்கள் நீதிமன்றத்தைப் புறக் கணித்து தலைமறை வாகியிருந்த இவர் சிறந்த நடிகராவார். இவர் பொலிஸ் மா அதிபராக இருந்தபோது சட்டத்தரணிகளே குற்றவாளிகளைப் பாதுகாப்பதாகக் கூறியிருந்தார். அவ்வாறு கூறிய அவருக்கு இன்று சட்டத்தரணிகள் சூழ நீதிமன்றத்துக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது W-5 ஹோட்டலுக்கு துப்பாக்கிச் சூடு நடத்திய வழக்கு விசாரணை இல்லை. கர்மவினை தொடர்பான வழக் காகும். அவர் செய்த கர்மமே இந்தப் பிறவியிலேயே பலனைக் கொடுத்துள் ளது. நீதிமன்றத்தினூடாக கடந்த மாதம் 27ஆம் திகதி பிடியாணை பிறப்பிக்கப்பட்டது முதல் பிரபாகரனை, செவ்வந்தியை தேடுவதுபோன்று பெரும் சேனைகளினூடாக அவரை தேடி சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அவரது வீட்டை சோதனைக்கு உட்படுத்தியபோது அங்கிருந்து வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அது வீடல்ல. அதுவொரு களியாட்ட விடுதி. எனக்கு விளக்கமறியல் வழங்க வேண்டாம். உயிர் அச்சுறுத்தல் இருப்ப தாகக் கூறும் அவர், அவரது கடமை துப்பாக்கியை துணியில் மறைத்துவிட்டு 20 நாட்கள் தலைமறைவாகியிருந்தார். அவரின் பெயரில் எந்தவொரு சொத்தும் இல்லாவிட்டால் இவருக்கு மாத்திரம் உத்தியோகபூர்வமற்ற 8 வீடுகள் இருக் கின்றமை உறுதியாகியுள்ளது. பாதாள குழுத் தலைவர்களான மாக்கந்துர மதுசை விடவும் ஹரக் கட்டாவை விடவும் இவர் ஆபத்தானவர். இதுபோன்று சூட்சுமமாக அவர்களால் செயலாற்றியிருக்க முடியாது என்று கூறுகிறேன்.

நாட்டின் பொலிஸ் மா அதிபர் என்று கூறிக்கொள்ளும் இவர் அல் லது அவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர் களின் பெயரில் எவரும் 2021ஆம் ஆண்டிலிருந்து வாக்காளர் இடாப்பில் இல்லை. அம்பிட்டியவில் வீடொன்றை சோதனையிட்டோம். அந்த வீட்டு வேலைக்காரர்களுக்கே அந்த வீடு யாருடையதென்பது தெரியாது. 8 வீடுகள் வரை இவருக்குச் சொந்த மானது என்று கருதப்படுகிறது. இவருக்கு அடைக்கலம் கொடுத்தவர்களையும் கைது செய்யவேண்டும் என்று நீதிமன்றத்தில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் காரசாரமாகத் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

06 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## தேசபந்து மீதான குற்றச்சாட்டுகள்

தென்னக்கோன் முதியன்சேலாகே வன்சலங்க தேசபந்து தென்னக்கோன் எனப்படும் முன்னாள் பொலிஸ் மா அதிபருக்கு எதிராக 9 புதிய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை குறித்து மேலும் விசாரணைகளை மேற்கொள்ளவும் தேசபந்து தலைமறைவாக உதவியவர்களை விசாரிக்கவும் குற்றப் புலனாய்வுத் துறைக்கு உத்தரவிடப்பட்டது. இதோ அந்த 09 குற்றச்சாட்டுகள்..

***01) 31.12.2023 அன்று பதில் ஐ.ஜி.பியாக தேசபந்து பணியில் இருந்தபோது, அவருக்குக் கீழ் இருந்த 08 காவல்துறை அதிகாரிகள், ஒரு அரசு பணியாளர் சட்டத்தின் உத்தரவுகளை மீறிய குற்றத்தைச் செய்தனர். சட்டத்தால் விதிக்கப்பட்ட சட்ட உத்தரவுகளையும் அவர்கள் கடமையாகக் கருதிச் செய்ய வேண்டிய சட்டப் பொறுப்புகளையும் மீறி, எந்தவொரு நபருக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடன் செயற்பட்டமை தண்டனைச் சட்டத்தின் பிரிவு 162 இன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.***

***02) மாத்தறை வெலிகமவிலுள்ள W15 ஹோட்டலில் ரி-56 தானியங்கி துப்பாக்கியால் சுட்டு ஹோட்டலுக்கு தீங்கு விளைவிக்கும் குற்றவியல் நோக்கங்களை அடைய, காவல் துறையின் தலைவராக 08 காவல்துறை அதிகாரிகளை சட்டவிரோதக் கூட்டத்தின் உறுப்பினர்களாகப் பயன்படுத்தி, தண்டனைச் சட்டத்தின் பிரிவு 147 இன் கீழ் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்தமை. ஹோட்டலிலுள்ள நபர்கள், அதன் நிர்வாகம் அல்லது உரிமையாளர்கள் மீது குற்றவியல் பலத்தைப் பயன்படுத்தியமை.***

***03) வெலிகமவின் பெலேனவிலுள்ள W15 ஹோட்டலில் உத்தியோகபூர்வ கடமைகளைத் தவிர, வேறு தனிப்பட்ட நோக்கங்களுக்காக ரி-56 தானியங்கி துப்பாக்கியால் சுட்டு, குற்றவியல் மிரட்டல் மற்றும் தீங்கு விளைவிக்க, மற்ற காவல்துறை அதிகாரிகள் குழுவுடன் சேர்ந்து இலங்கை தண்டனைச் சட்டத்தின் பிரிவு 113 (b) இன் கீழ் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்தமை.***

***04) குற்றவியல் சட்டத்தின் பிரிவு 190இன் கீழ் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்வது - அதாவது, சம்பவத்துக்குப் பிறகு செய்யப்பட்ட குற்றங்கள் தொடர்பான நீதி விசாரணையில் உண்மை வெளிப்படுவதைத் தடுக்க தவறான சாட்சியங்களை வழங்குவது.***

***05) வெலிகமவிலுள்ள W15 ஹோட்டலில் ரி-56 தானியங்கி துப்பாக்கியால் சுட்டதன் மூலம், இலங்கை தண்டனைச் சட்டத்தின் பிரிவு 410இன் கீழ் குற்றத்தை விளைவித்த குற்றத்துக்குத் தண்டனைக்குரிய குற்றமாகும். இது தண்டனைச் சட்டத்தின் பிரிவு 32 உடன் சேர்த்து பொதுவான நோக்கம் தொடர்பானது மற்றும் தீ அல்லது வெடிபொருட்களால் குற்றத்தை விளைவித்த குற்றமாகும்.***

***06) அதே சட்டத்தின்போது, இலங்கை தண்டனைச் சட்டத்தின் பிரிவு 32 உடன் சேர்த்துப் படிக்கப்படும் பிரிவு 343 இன் கீழ் குற்றத்தைச் செய்ய வற்புறுத்துவது தண்டனைக்குரிய குற்றம்.***

***07) இலங்கை தண்டனைச் சட்டத்தின் பிரிவு 298 உடன் சேர்த்துப் படிக்கப்படும் பிரிவு 32இன் கீழ் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்தல். சட்டவிரோதமாக துப்பாக்கிச் சூடு நடத்துவதால் ஏற்படும் விளைவுகள் குறித்து போதுமான அறிவு இருந்தும் பொறுப்பற்ற செயலைச் செய்தமை. (இதன் விளைவாக மணிங்கமுவைச் சேர்ந்த உபுல் சமிந்த குமார என்ற காவல்துறை உத்தியோகத்தர் இறந்தார்.)***

***08) WP PK - 7225 என்ற வேனுக்கு சேதம் விளைவித்த குற்றத்தைச் செய்தமை. இது ஒரு பொதுச் சொத்தாகும். இது இலங்கை தண்டனைச் சட்டத்தின் பிரிவு 32 உடன் படிக்கப்பட்ட பொதுச் சொத்துச் சட்டத்தின் எல்லைக்குள் வருகிறது.***

***09) ரி-56 தானியங்கி துப்பாக்கியால் செய்யப்பட்ட குற்றம். துப்பாக்கி கட்டளைச் சட்டத்தின் பிரிவு 44 (b)இன் கீழ் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்தல் என்று இது வகைப்படும்.***

### நீதவானின் உத்தரவு

கடந்த வியாழக்கிழமை நீதிமன்றத்தில் நீதவான் வழங்கிய தீர்ப்பை அப்படியே தருகிறோம்.

அனைத்து சமர்ப்பணங்களையும் சட்டச் சூழ்நிலைகளையும் பரிசீலித்த பிறகு, இந்த வழக்கு தொடர்பாக ஒரு தீர்க்கமான விசாரணை செயல்முறை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதென்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. சந்தேக நபர் நீதிமன்ற உத்தரவைப் பின்பற்றத் தவறியதால், வழக்கில் முக்கியமான புலனாய்வு நடவடிக்கைகளை அரசு தரப்பு முடிக்க முடியவில்லை என்றும் நீதிமன்றம் முடிவு செய்தது. சந்தேக நபர் ஆரம்பத்திலேயே விசாரணைக்கு முறையான உதவியை வழங்கியிருந்தால், விசாரணையை முறையாக நடத்தி, முன்னேற்றத்தை நீதிமன்றத்தில் முன்வைக்க அரசு தரப்புக்குப் போதுமான வாய்ப்புக் கிடைத்திருக்கும் என்றும் சந்தேக நபரின் செயல்களின் விளைவாக அரசு தரப்பு அந்த வாய்ப்பை இழந்துவிட்டது என்றும் நான் முடிவு செய்கிறேன்.

இந்த வழக்கில் சந்தேக நபர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டால், மாண்புமிகு மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த மஜிஸ்திரேட் நீதிமன்றத்துக்கு வழங்கிய மேற்கூறிய குறிப்பிட்ட உத்தரவின் படிகளை வெற்றிகரமாக முடிப்பது தொடர்பாக சந்தேக நபரின் ஈடுபாட்டின் காரணமாக ஒரு சிக்கல் சூழ்நிலை ஏற்படக்கூடுமென்றும் நான் முடிவு செய்கிறேன். எனவே, அனைத்து உண்மைகளையும் பரிசீலித்த பிறகு, சந்தேக நபருக்குப் பிணை வழங்கக்கூடாது என்று சட்ட மா அதிபர் சார்பாக முன்வைக்கப்பட்ட சட்ட நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் முடிவுசெய்கிறேன்.

அதன்படி, மேலே குறிப்பிடப்பட்ட காரணங்களின் அடிப்படையில் சந்தேக நபருக்கு எதிரான பிணை விண்ணப்பத்தை நான் நிராகரிக்கிறேன். சந்தேக நபரை ஏப்ரல் 03, 2025 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடுகிறேன்.

சந்தேக நபர் மீது விரைவான மற்றும் விரிவான விசாரணை நடத்தி, அதன் முன்னேற்றத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு அரசுத் தரப்புக்கு நான் உத்தரவிடுகிறேன். மேலும், சந்தேக நபர் தலைமறைவாக இருந்தபோது உதவிய மற்றும் உடந்தையாக இருந்த நபர்கள் குறித்து விரைவான மற்றும் விரிவான விசாரணையை நடத்தவும் மாண்புமிகு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுகளின்படி, அந்தக் குற்றங்களைச் செய்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்து அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் அரசுத் தரப்புக்கு நான் உத்தரவிடுகிறேன்.

**கையொப்பமிடப்பட்டது**

பி. ஏ. இந்திரஜித் புத்ததாச,
நீதவான் - மாத்தறை.
2025-03-20

### சாப்பிட மறுத்த தென்னக்கோன்!

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தபோது சேவை இடைநிறுத்தப்பட்ட முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், அங்குனுகொல பெலஸ்ஸ சிறைச்சாலையில் கழித்த முதல் நாளில் சாப்பிடக்கூட மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாகவும் யாருடனும் பேசவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாவது நாள் நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், சிறைச்சாலை அதிகாரிகள் சந்தேக நபரான ஐ.ஜி.பி. தேசபந்து தென்னக்கோனை சிறைச்சாலை பேருந்தில் தும்பர சிறைச்சாலை அறைக்கு அழைத்துச் சென்றனர்.

தும்பரை சிறைச்சாலையிலுள்ள இரண்டு மாடிக் கட்டிடத்தின் மேல் தளத்திலுள்ள தனி அறையில் தேசபந்து தென்னக்கோன் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேல் மாடி அறையில் 8 பேர் வரை தங்க முடியும் என்றும் தற்போது அங்கு அடைக்கப்பட்டிருப்பவர் அவர் மட்டுமே என்றும் சிறை வட்டாரங்கள் தெரிவித்தன.

### தென்னக்கோன் பின்னாலுள்ள சக்தி

தேசபந்து தென்னக்கோன் 20 நாட்கள் தலைமறைவாகியிருந்தது எப்படி என்பது குறித்து தீவிர விசாரணைகள் இடம்பெற்றுவந்தாலும் அவருக்கு உதவிய சந்தேக நபர்களை கைதுசெய்யும் சூழ்நிலை இல்லை என்பது தெரிகிறது .

தேசபந்து மறைந்திருப்பதற்கு உதவியவர் முன்னாள் அமைச்சர் ஒருவர். அந்த முன்னாள் அமைச்சருக்கும் தற்போதைய அரசின் அமைச்சர் ஒருவருக்குமிடையில் நெருங்கிய தொடர்புள்ளது. கடந்த ஆட்சிக்காலத்தில் பலம் வாய்ந்த அமைச்சராக இருந்தபோது அந்த முன்னாள் அமைச்சர் இன்றைய அரசின் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு நிறைய உதவிகளைச் செய்துள்ளதால் அந்த நட்பு இன்றுவரை தொடர்கிறது.

தேசபந்து அந்த முன்னாள் அமைச்சருடன் நெருங்கிப் பழகியவர் என்பதற்கப்பால் முன்னாள் அமைச்சரின் வர்த்தகத்துக்கு நிறைய உதவிகளைச் செய்திருக்கிறார் தேசபந்து. அதனால்தான் தேசபந்துவை தனது பாதுகாப்பில் வைத்திருந்த அந்த முன்னாள் அமைச்சர் தேசபந்து சரணடைய ஏற்பாடுகளையும் செய்ததுடன், சட்ட நடவடிக்கைகளுக்கு நிதியுதவி வழங்கியும் ஒத்துழைத்திருக்கிறார். தேசபந்து கூட நீதிமன்றில் சரணடைய விரும்பியிருக்கவில்லை. ஆனால், அவரது சொத்துகள் அரசுடைமையாக்கப்படலாம் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் கைது செய்யப்படலாம் என்ற நிலைமை வந்தபோதுதான் அவர் சரணடையும் முடிவை எடுத்தார்.

தேசபந்துவின் வீட்டில் பொலிஸார் சோதனையிடும் நடவடிக்கை குறித்து முன்கூட்டியே தேசபந்துவின்



குடும்பத்தினருக்கு அறியக்கிடைத்தது. இப்போது 1009 மதுபானப் போத்தல்கள் அங்கு மீட்கப்பட்டிருந்தாலும் கூட அங்கு அதைவிட பொருட்கள் இருந்ததாகவும் அவை முன்கூட்டியே அகற்றப்பட்டுவிட்டதாகவும் அறியமுடிந்தது. தேசபந்துவின் வீட்டைப் பொலிஸார் சோதனையிடச் சென்றபோது நீதிமன்ற உத்தரவின்பேரில் அல்லது சோதனைக்குரிய அனுமதியுடன் வரவில்லையென தேசபந்துவின் மனைவி கடந்த 18ஆம் திகதி அத்துருகிரிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைச் செய்திருந்தார்.

### கைவிலங்கின்றி கொண்டுவரப்பட்டார்

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை நீதிமன்றத்துக்கு அழைத்து வரும்போது அவர் சிறைச்சாலை பேருந்திலேயே அழைத்து வரப்பட்டார் .

பேருந்தில் அவர் ஊடகங்களின் கமராக்களிலிருந்து தப்பிப்பதற்காக தான் அணிந்திருந்த கோட் சூட்டை வைத்து தன்னை முழுமையாக மறைத்துக்கொண்டார். மேலும், அவரது பாதுகாப்புக்காக பேருந்தில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் இருந்தனர்.

அவருக்கு கைவிலங்கு விடப்படவில்லை. தேசபந்து தென்னகோன் நீதிமன்றத்துக்குள் அழைத்துச் செல்லப்பட்டு ஒரு மணி நேரத்துக்குள் அவருக்கு விளக்கமறியல் தீர்ப்பு வழங்கப்பட்டது. தேசபந்துவை மீடியாக்கள் படம் எடுக்கக்கூடாதென்று கங்கணங்கட்டி செயற்பட்டது பொலிஸ். தேசபந்து பொலிஸ் மா அதிபராக பதவி வகித்த காலத்தில் அவரின் சிபாரிசில் பதவியுயர்வு பெற்ற அதிகாரிகள் பலர் தேசபந்துவுக்கு மறைமுக ஆதரவை வழங்கிவருவதாகச் சொல்லப்படுகிறது.

### ரணில் தரப்பு பேச்சு

எந்தப் பக்கமும் எடுக்காமல் அரசியல் சூழ்நிலையைக் கூர்ந்து கவனிக்கும் குடிமக்களுக்கு அரசாங்கம் ரணில் விக்கிரமசிங்கவைப் பார்த்து அஞ்சுகிறது என்பது தெளிவாகிறது. அவர் இப்போது எந்த நிர்வாக, பாராளுமன்ற அல்லது நீதித்துறை அதிகாரமும் இல்லாமல் வீட்டில் இருக்கிறார். ''ரணிலுக்கு அரசாங்கம் ஏன் இவ்வளவு பயப்படுகிறது? அந்த மனிதர் எந்தத் தடையும் இல்லாமல் தனது வேலையைச் செய்யும்போது அவர் மீது ஏன் இவ்வளவு பயப்படுகிறார்கள்?" புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களும் ஐ.தே.க. பிரமுகர்களும் கடந்த வாரம் இவ்வாறு பேசிக்கொண்டனர்.

"இது நாங்கள் மட்டுமல்ல, மக்களும் கேட்கும் ஒரு கேள்வி. அரசாங்கம் ரணிலைப் பார்த்து ஏன் இவ்வளவு பயப்படுகிறது?" என்று சாமர சம்பத் கேள்வியெழுப்பினார்.

"இப்போது எதிர்க்கட்சித் தலைவரைக் கொண்ட ஓர் எதிர்க்கட்சி இருக்கிறது. அரசாங்கம் மீது எந்த விமர்சனங்களும் இல்லை. நேற்று முன்தினம் கலாசார அமைச்சு மீதான பட்ஜெட் விவாதம் நடந்தது. மத்திய கலாசார நிதியத்தில் நடந்த மோசடி குறித்து ஒரு வார்த்தை தானும் பேசப்படவில்லை. உண்மையில், எஸ்.ஜே.பிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே ஏதோ ஒரு டீல் இருப்பது அதிலிருந்து உறுதிப்படுத்தப்படுகிறது" என்று தலதா இங்கு கூறினார்.

"ஆம், எஸ்.ஜே.பி. தவிசாளர் பாக்கீர் மார்க்கர் இராஜிநாமாச் செய்ததற்கான காரணம், அப்படியான ஒப்பந்தத்தை அவரால் ஜீரணிக்க முடியாததால் இருக்கலாம். எஸ்.ஜே.பி. தலைவராக அவர் தனது மனச்சாட்சிப்படி இவற்றைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது" என்று அநுராத ஜயரத்ன இங்கு கூறினார்.

இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டு அமைதியாக இருந்த ரணில், பட்டலந்த பற்றி பேச ஆரம்பித்தார்

"ஜே.வி.பி. இதைப்பற்றி பேசிய பிறகு நான் உண்மையில் அதற்கு ஒரு பதிலைக் கொடுத்தேன்.

பின்னர், நளிந்த ஜயதிஸ்ஸ அதை மீண்டும் குறிப்பிட்ட பிறகு, இரண்டு வஜிரவும் தலதாவும் பதிலளித்தனர். அவர்கள் இதைக் குறிப்பிடாமல் இருந்திருந்தால், ஜே.வி.பியின் பழைய குப்பைக் குவியல்கள் கிளறப்பட்டிருக்காது.

மற்ற விஷயம் என்னவென்றால், ரில்வின் இதை எடுத்துக்கொண்டதால் அது 1988 காலப்பகுதியின் அவர்களின் செயல்முறையை வெளிப்படுத்துகிறது'' - என்றார் ரணில்.

ரணில் மேலும் விபரிக்கையில்,

''பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையின் 3ஆம் அத்தியாயம், ஐக்கிய தேசியக் கட்சியின் தோராயமாக 1,960 உறுப்பினர்கள் ஜே.வி.பியினரால் கொல்லப்பட்டதாகக் கூறுகிறது. ஓகஸ்ட் 1987 முதல் நாட்டின் பாதுகாப்பு நிலைமை படிப்படியாகவும் தொடர்ச்சியாகவும் மோசமடைந்து, அரசியல்வாதிகளின் உயிருக்குக் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஆணையத்தின் அறிக்கை தெளிவாகக் காட்டுகிறது. அப்போது அரசாங்கத்தை அமைத்த ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல்வாதிகள்தான் ஜே.வி.பியின் வலுவான இலக்காக இருந்தனர். மேலும் பாரம்பரிய இடதுசாரித் தலைவர்களும் இந்த அச்சுறுத்தல்களுக்கு இலக்காகினர். உயர்மட்ட அரசியல்வாதிகளைத் தவிர, பொது'மக்களிடையே அரசியல் அனுதாபிகளும் அச்சுறுத்தல்களுக்கு ஆளானதாக ஆணைய அறிக்கை கூறுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சுமார் 1960 உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாக ஆணையம் மதிப்பிடுகிறது (அத்தியாயம் 3 - சிங்களம் - பக்கம் 29). அவர்களில் அடுத்தடுத்து இரண்டு UNP செயலாளர்களான ஹர்ஷா அபேவர்தன (21.12.1987 அன்று படுகொலை செய்யப்பட்டார்). நந்தலால் பெர்னாண்டோ மற்றும் சில UNP பாராளுமன்ற உறுப்பினர்களும் இருந்ததாக ஆணைக்குழு அறிக்கை தெளிவாகக் கூறுகிறது.

பட்டலந்த கமிஷன் அறிக்கை, மூத்த காவல்துறை அதிகாரிகளும் தங்கள் தாக்குதல்களில் குறிவைக்கப்பட்டதாகவும் அந்த நேரத்தில் ஜே.வி.பியின் நடவடிக்கைகள் குறித்து புலனாய்வுத் தகவல்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்த காவல்துறை கண்காணிப்பாளர் கிளாரன்ஸ் பெரேரா, ஜே.வி.பியினரால் கொல்லப்பட்டதாகவும் கூறுகிறது.

நாசவேலை நடவடிக்கைகளை விசாரிப்பதில் ஆர்வங்காட்டிய அதிகாரியான மூத்த பொலிஸ் அதிகாரி பென்னட் பெரேராவும் கொல்லப்பட்டார். அரசாங்க சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதம் மிகவும் ஆபத்தானது. புறநகர்ப் பகுதிகளில் அமைந்துள்ள அரசு நிறுவனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. அரசாங்க அமைப்புகளுக்குள் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட வேலைநிறுத்தங்கள் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அத்தியாவசிய சேவைகளை கிட்டத்தட்ட ஸ்தம்பிதமாக்கிய ஒரு வேலைநிறுத்தம் தேசிய போக்குவரத்து ஊழியர்கள் தொடங்கிய வேலைநிறுத்தமாகும். பல்வேறு அரசு நிறுவனங்களில் பணிகள் படிப்படியாக நிறுத்தப்பட்டன. தேசபக்த மக்கள் இயக்கம் (D.J.V.) என்ற அமைப்பால் அந்த இடங்களுக்கு அனுப்பப்பட்ட ஒரு கடதாசி துண்டின் மூலம் வழங்கப்பட்ட உத்தரவுகளுடன் இது நடந்தது.

இந்த வேலைநிறுத்தங்களுடன், அந்த அமைப்பே அறிவித்ததாகக் கூறப்படும் ஊரடங்கு உத்தரவுகளும் இருந்தன. "தேசபக்த மக்கள் இயக்கத்தின் உத்தரவுகள் "கீர்த்தி விஜயபாகு" என்ற பெயரில் பிறப்பிக்கப்பட்டன. இதன் விளைவாக, நாட்டில் அராஜக சூழ்நிலை நிலவியது" என்று பட்டலந்த ஆணைய அறிக்கை தெளிவாகக் கூறுகிறது.

இவை பட்டலந்த கமிஷன் அறிக்கையில் ஜே.வி.பி. பற்றி குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் ஒரு பகுதி மட்டுமே'' என்றார் ரணில்.

பட்டலந்த விவகாரங்களை விசாரிக்க ஒரு குழு அமைக்கப்படும் என்று நளிந்த ஜெயதிஸ்ஸ கூறியிருந்தார். பின்னர், அவர்கள் செய்த கொலைகளும் விசாரிக்கப்பட வேண்டும். குழுக்கள் அமைக்கப்பட்டு ஒரு பக்கம் மட்டுமே விசாரிக்கப்பட்டால், அரசாங்கம் சிக்கிக்கொள்ளும். இரு தரப்பினரும் விசாரிக்கப்பட்டால், அது இன்னும் சிக்கிக்கொள்ளும். பட்டலந்தவை இழுப்பதன் மூலம் ஒரு குரங்கு, ஆப்பை வெளியே எடுத்ததுபோல் அரசாங்கம் செய்துள்ளது. இப்போது அரசாங்கம் ஒரு சிக்கலில் சிக்கியுள்ளது - என்று தலதா இங்கு கூறினார்.

### ருவன் முற்றிலும் புதிய அம்சத்தைக் கொண்டுவந்தார்

இங்கு பேசிய ருவன் விஜேவர்தன, "இப்போது இந்த விஷயங்களை விசாரித்தால், எங்கள் சம்பவங்களையும் விசாரிக்கவேண்டும் என்று வடக்கிலுள்ள மக்கள் கேட்கிறார்கள். தெற்கில் மட்டும் ஏன் விசாரணை நடத்துகிறீர்கள் என்று கேட்கிறார்கள். இந்த நிலைமை மிகையாகச் சென்றால், வடக்கு முழுவதும் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட வேண்டியிருக்கு" என்றார் ருவன்.

விஜய குமாரதுங்க கொலையை நாம் விசாரிக்க வேண்டுமென்று இதன்போது குறிப்பிட்டார் சாமர.

"நான் இந்தியாவுக்குச் சென்று அரசாங்கத்தைப் பற்றி எதையும் கூறவில்லை. நான் பதவியிலிருந்து விலகிய பிறகு, IMF பயணத்தை ஏற்றுக்கொண்டதற்காக ஜனாதிபதி அநுரவைப் பாராட்டி ஓர் அறிக்கையை மட்டுமே வெளியிட்டேன். அரசாங்கம் தன்னைப் பற்றி எவ்வளவு பயப்படுகிறது" என்று ரணில் இதன்போது கூறி ஆச்சரியப்பட்டார்.

இலங்கையில் அதிக கொலைகளைச் செய்த கட்சி ஜே.வி.பியா? இந்த விஷயத்தை உண்மையிலேயே தெளிவுபடுத்துமாறு ஷெஹான் கேட்டார்.

"ஆமாம், விடுதலைப் புலிகள் பாராளுமன்றத்தில் இல்லை. விடுதலைப் புலிகள் இராணுவத்துடன் சண்டையிட்ட காலங்களும் ஜே.வி.பி. இராணுவத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய காலங்களும் இருந்தன" என்று வஜிர அந்த கடந்த காலத்தை நினைவுகூர்ந்தார்.

''இவ்வளவு குற்றங்களில் ஜே.வி.பி. ஈடுபட்டிருப்பது பற்றி இளைய தலைமுறையினர் அறிந்திருக்கவில்லை. பின்னர் பிறந்த தலைமுறையினருக்கு இந்த விஷயங்கள் பற்றி எதுவும் தெரியாது'' என்று ருவன் கூறினார்.

"மார்ச் தொடங்கியபோது, எதிர்க்கட்சிகளிடம் பேசுவதற்கு எந்த தலைப்புகளும் இல்லை. இப்போது, மார்ச் மாத இறுதிக்குள் பேச அரசாங்கம் ஏராளமான தலைப்புகளை வழங்கியுள்ளது" என்று ரணில் சிரித்தபடி கூறினார்.

"உண்மையிலேயே கிராமங்களிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் ஜே.வி.பியுடன் ஒரு பயங்கரமான அனுபவத்தைக் கொண்டிருந்தன" என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்கு கூறினர்.

எதிர்வரும் தேர்தலில் ஐ.தே.க., எஸ்.ஜே.பி. மற்றும் பிற கட்சிகள் இணைந்து தேர்தலில் போட்டியிட்டிருந்தால், கொழும்பு மாவட்டத்தில் வெற்றி பெற்றிருக்க முடியுமென்று அரசியல் விமர்சகர்கள் நம்புகிறார்கள். மாநகர தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிட எரான் விருப்பம் தெரிவித்திருந்தார். ஐ.தே.க. மற்றும் எஸ்.ஜே.பியும் அவ்வாறு செய்ய விருப்பம் தெரிவித்தன. ஆனால், ஒன்றாக போட்டியிட வேண்டாமென்று யார் சொன்னது? இது எஸ்.ஜே.பி. ஜே.வி.பியுடனான ஒப்பந்தம்தான் என்பதை அரசியல் அறிவு குறைவாக உள்ள ஒருவர் கூட புரிந்துகொள்வார் என்று இந்தச் சந்திப்பில் பலரும் சுட்டிக்காட்டினர்.

# போதும் இந்தக் கொலைவெறி!

மேற்காசியாவில் மீண்டும் இரத்த ஆறு ஓடத் தொடங்கியிருக்கிறது. பலஸ்தீனரைக் குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் மீண்டும் நடத்தியிருக்கும் தாக்குதலில் 85 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். கடந்த செவ்வாய்க் கிழமை இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 400க்கும் மேற்பட்டோர் காஸாவில் கொல்லப்பட்டனர்.

காஸா உள்ளிட்ட பலஸ்தீனப் பகுதியை தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்த ஹமாஸ் பயங்கரவாத இயக்கத்தினருடன் செய்துகொண்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் தன்னிச்சையாக மீறியிருக்கிறது. ஹமாஸ் இயக்கத்தினரைக் குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் கூறினாலும் கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகளுமாவர்.

கடந்த செவ்வாய்க்கிழமை தாக்குதலில் கொல்லப்பட்ட 436 பேரில் 183 பேர்



குழந்தைகள். பெண்களும் முதியவர்களும் ஏனையோரில் பெரும்பாலோர். இஸ்ரேலின் தாக்குதல்கள் நின்றபாடில்லை.

ஜனவரி 19ஆம் திகதி போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தபோது, நவீன வரலாற்றில் மிகப் பெரிய நாசத்தை ஏற்படுத்திய போர் முடிவுக்கு வரும், அமைதி ஏற்படுமென்று உலகம் எதிர்பார்த்தது. காஸாவின் நிரந்தரத் தீர்வு ஏற்படுவதற்கான முயற்சி முறியடிக்கப்பட்டு அந்தப் பகுதி முழுவதும் அப்பாவி உயிர்களின் இரத்தம் ஆறாக ஓடிக்கொண்டிருக்கிறது. இது எதிர்பாராத திருப்பம்.

அமெரிக்காவின் தலைமையில் கட்டாரும் எகிப்தும் இணைந்து ஒரு வாரத்துக்கும் மேலாக நடந்துவரும் அமைதிப் பேச்சு வார்த்தை முடிவுக்கு வர இருந்த நிலையில், இஸ்ரேல் நடத்தியிருக்கும் தாக்குதலும் உயிர்க்கொலையும் முட்டுக்கட்டை போட்டிருக்கின்றன. தெற்கு காஸாவிலிருந்து வடக்கு காஸா வரையில் வீடுகள், அகதிகள் முகாம்கள் என்று விட்டுவைக்காமல் செவ்வாய்க்கிழமை காலையிலிருந்து வெடிகுண்டு வீச்சு நடைபெறுகிறது.

அதிகாரப்பூர்வமாக உயிரிழப்புகள் குறித்தும் சேதங்கள் குறித்தும் துல்லியமான புள்ளிவிவரங்கள் இல்லையென்றாலும் எதிர்பாராமல் நடத்தப்பட்ட தாக்குதல் என்பதால், பேரழிவு ஏற்பட்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. காஸாவுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைக் கடந்த இரண்டு வாரங்களாகவே இஸ்ரேல் தடுத்திருக்கிறது. இஸ்ரேல் இராணுவம் மீண்டும் காஸாவை தனது கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக்கொள்ளும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இரண்டாம் கட்ட போர்நிறுத்த பேச்சுவார்த்தைகள் தொடர்வதுதான் இஸ்லாமியர்களின் ரமழானும் யூதர்களின் தவக்காலமும் முடியும் வரை எந்தவித ஆக்கிரமிப்பு நடவடிக்கையும் கூடாது என்று அமெரிக்கா இஸ்ரேலிடம் கூறியிருந்தது.

இரண்டாவது கட்ட ஒப்பந்தப்படி, போர்நிறுத்த காலத்தின் பணயக் கைதிகள் அனைவரையும் விட்டுவிட வேண்டும் என்றும் முழுமையாக போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் இரு தரப்பும் ஏற்றுக்கொண்டிருந்தன. அந்த ஒப்பந்தம் மீறப்பட்டிருக்கிறது.

ஹமாஸ் அமைப்பினர் பணயக் கைதிகளை விடுவிப்பதில் தயக்கம் காட்டியதால்தான் இராணுவத் தாக்குதலுக்கு உத்தரவிட்டதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு கூறுகிறார். மீண்டும் தாக்குதல் இப்போது தான் தொடங்கியிருக்கிறதென்று அவர் கூறுவதன்மூலம் தொடர்ந்து தாக்குதல் நடத்த இஸ்ரேல் முற்பட்டிருக்கிறதென்பது தெரிகிறது.

உயிரோடு இருக்கும் பணயக் கைதிகளையும் ஹமாஸ் அமைப்பினர் கொலைசெய்ய இஸ்ரேல் பிரதமர் தூண்டுகிறார் என்கிறார்கள் விமர்சகர்கள். மீண்டும் போர் தொடங்கியிருப்பதில் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹுவுக்கு எதிராக இஸ்ரேலிலும் கடுமையான எதிர்ப்பு காணப்படுகிறது.

ஏறத்தாழ 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காஸாவில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஹமாஸ் அமைப்பினரின் கட்டுப்பாட்டில் காஸா மீண்டும் செல்வதையும் அந்தப் பகுதி அவர்களது நிர்வாகத்தின்கீழ் இருப்பதையும் தடுப்பதுதான் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹுவின் நோக்கமென்று தோன்றுகிறது. ஹமாஸை முற்றிலுமாக அழிக்கும்வரை ஓயமாட்டேன் என்கிற பிரதமர் நெதன்யாஹுவின் முனைப்பின் நோக்கம் காஸாவிலிருந்து பலஸ்தீனர்களை முற்றிலுமாக அகற்றுவது அல்லது அழிப்பது என்பதாகத்தான் தோன்றுகிறது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு அமெரிக்கா துணை நிற்கிறது என்கிற ஹமாஸின் குற்றச்சாட்டையும் முற்றிலுமாகப் புறந்தள்ளிவிட முடியாது.

பலஸ்தீனர்களை காஸாவிலிருந்து முற்றிலுமாக அகற்றி அவர்களுக்கு போர்ச்சூழல் இல்லாத சமாதான வாழ்க்கையை அளிப்பதும் அந்தப் பகுதியை கெஸினோக்கல் நிறைந்த சூதாட்ட கேளிக்கை நகரமாக மாற்றுவது என்பதும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்மொழிந்த மாற்றுத் திட்டம். அதைக் கேட்டு ஒட்டுமொத்த உலகமும் அதிர்ந்தது. மேற்காசியாவில் பரவலாக எதிர்ப்புக் கிளம்பியது.

இஸ்ரேலின் இப்போதைய தாக்குதல்களைப் பார்க்கும்போது பிரதமர் நெதன்யாஹு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் கனவை நனவாக்க உதவுகிறாரோ என்கிற நியாயமான ஐயப்பாடு எழுகிறது.

2023 ஒக்டோபர் 07ஆம் திகதி ஒட்டுமொத்த உலகமும் சற்றும் எதிர்பாராத மின்னல் வேகத் தாக்குதலை ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது நடத்தியதிலிருந்து தொடங்குகிறது இப்போதைய காஸா யுத்தம். அதற்கு உறுதுணையாக இஸ்ரேல் முன்னெடுக்கும் தாக்குதல்கள் அந்தப் பாலைவன பூமியில் இரத்த ஆறுகளை ஓடச் செய்திருக்கிறது. தற்போதைய காஸா யுத்தத்தில் பெண்களின் மீதும், குழந்தைகள் மீதும் இஸ்ரேல் மோசமான தாக்குதல்களை நடத்தி வருவதாக ஐ.நாவின் மனித உரிமை ஆணையத்தின் அறிக்கை தெரிவிக்கிறது. மக்கள் வசிக்கும் இடங்களிலும் மருத்துவமனைகளிலும் அகதிகள் முகாம்களிலும் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்கள் மூலம் குண்டுகளைப் பொழிந்ததாக அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

வழக்கம்போல அந்த அறிக்கையை இஸ்ரேல் நிராகரித்திருப்பதில் வியப்பேதும் இல்லை.

மத்திய ஆசியாவில் அமைதி மீட்டெடுக்கப்பட வேண்டும் என்று ஒட்டுமொத்த உலகமும் பிரார்த்திக்கிறது. காஸாவின் நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகள் தளர்ச்சியடைந்துவிடக் கூடாது.

**நன்றி - தினமணி**



# கெட்ட போரிடும் உலகை வேருடன் சாய்ப்போம்!

உக்ரைன் மீதான போரை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பும் ரஷ்ய ஜனாதிபதி புட்டினும் தொலைபேசியில் இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக பேசியுள்ளனர். இதைத் தொடர்ந்து உக்ரைன் மீதான போரை 30 நாட்களுக்கு தற்காலிகமாக நிறுத்திவைக்க புட்டின் ஒப்புதலளித்துள்ளார்.

உலகத்தின் எதிரெதிர் துருவங்களான இரு நாடுகளின் ஜனாதிபதிகளும் தொலைபேசியில் இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக பேசும் அளவுக்கு காலம் இன்று மாறியுள்ளது. இனி ஒரு போருக்கு இடமேயில்லை, செலவிட சக்தியுமில்லை என்று பேசப்படும் நேரத்தில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலும் ஹமாஸ் மீதான இஸ்ரேலின் தாக்குதலும் உலகத்தையே அதிர்ச்சியில் உறையவைத்தன.

பல்வேறு நாடுகளில் உள்நாட்டுப் புரட்சி என்ற பெயரிலும் சில தீவிரவாதிகளும் கொடூரமாக நடத்திவரும் தாக்குதல்களால் ஏற்படும் மனித மற்றும் பொருள் இழப்புகள் பெருத்த சோகத்தை உண்டாக்கி வருகின்றன. இந்நிலையில், பெரும் நாடுகளே போரில் இறங்குவது ஏதோ ஒருவகையில் உலகின் மற்ற பாகங்களையும் பாதிக்கிறதென்பதை மறுக்க முடியாது. ஏற்கனவே, மனித இனத்தின் பேராசை காரணமாக வளர்ச்சி என்ற பெயரால் விலைமதிப்பற்ற இயற்கை தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகிறது.

சுற்றுச்சூழலை நாசப்படுத்தும் விதமாக அசுரத்தனமான தொழில் வளர்ச்சியும் கனிம வள வேட்டையும் பூமித் தாயின் அழகிய முகத்தை செதுக்கி சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கிறது. இதனால், ஏற்படும் பருவநிலை மாற்றம் காரணமாக பனிப்பாறை உருகுதல், ஊருக்குள் கடல்புகுதல், ஆங்காங்கே நிலச்சரிவுகள், திணறடிக்கும் நச்சுப்புகையால் நகரங்கள் தவித்தல், எதிர்பாராத மேகவெடிப்புகள் காரணமாக வெள்ளம் புகுதல் என்று இயற்கை தன் பதிலடியை வெவ்வேறு விதமாகக் காட்டிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

இன்று பொருளாதார வளர்ச்சி என்ற பெயரில் ஒருபுறமும் கௌரவ யுத்தம் என்ற பெயரில் இன்னொரு புறமும் நிஜ யுத்தம் மீண்டும் மீண்டும் பூமிப்பந்தை அதிர்வடையச் செய்துகொண்டே இருப்பதை இனியும் அனுமதிக்கலாகாது. உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்த போரானாலும் சரி, ஹமாஸ் மீது இஸ்ரேல் தொடுத்த போரானாலும் சரி, எப்பாடுபட்டாகிலும் நிறுத்தப்பட வேண்டும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

மனிதகுலத்தின் பேராசையும் பொறாமையும் மதத் துவேஷமும் குருட்டுத்தனமான வளர்ச்சி மனப்பான்மையும் ஒட்டுமொத்தமாக சேரும்போது இந்தப் பூமி நாம் வாழ்வதற்கு ஏற்றதல்ல என்ற நிலையை என்றாவது ஒருநாள் கொண்டுவந்தே தீரும். இயற்கை கொடுத்த அற்புதமான இந்தக் கிரகத்தை அடிமுட்டாள்தனமாக நாசம் செய்துகொண்டே, மனித இனம் வாழ்வதற்கு காற்றும் தண்ணீரும் கிடைக்கிறதா என்று நிலவு உட்பட வேற்று கிரகங்களில் போய் தேடுதல் வேட்டை நடத்துவதை என்னவென்று சொல்வது?

எவ்வாறாயினும் கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்த்து பூமித்தாய் மகிழும் வண்ணம் உண்மையான புத்திசாலித்தனத்தோடு அன்பும் அமைதியும் சூழ நம் ஆன்றோர்கள் சொல்லிக்கொடுத்த எளிதான ஒரு வாழ்க்கையை வாழப் பழகுவோம். அதை உலகத் தலைவர்களும் உணரும் நாள் உடனே வரட்டுமென்று மனமார வேண்டி நிற்போம்.

**எஸ்.எஸ்.**

# தலைமன்னாருக்கு மீண்டும் கப்பல் போக்குவரத்துச் சேவை

## ராமேஸ்வரத்தில் பணிகள் ஆரம்பம்

தலைமன்னாருக்கு மீண்டும் கப்பல் போக்குவரத்தைத் தொடங்குவதற்காக பணிகள் ராமேஸ்வரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையிலுள்ள தலைமன்னாருக்கு தனுஷ்கோடியிலிருந்து 1914ஆம் ஆண்டு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட்டது. 1964ஆம் ஆண்டு டிசம்பரில் தனுஷ்கோடியை புயல் தாக்கிய பிறகு, 1965ஆம் ஆண்டு ராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கும் கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட்டது. ஆனால், இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரால் இந்தக் கப்பல் சேவை 1981ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது.

இந்தியா - இலங்கை இடையே மீண்டும் கப்பல் போக்குவரத்து தொடங்க இரு நாட்டு வெளியுறவுத் துறை மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, 14.10.2023இல் தமிழகத்தின் நாகைப்பட்டினம் துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்துக்குப் பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவையை பிரதமர் நரேந்திர மோடி காணொளி வாயிலாகத் தொடக்கிவைத்தார்.



அப்போது பிரதமர் நரேந்திர மோடி, ராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு கப்பல் சேவை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ராமேஸ்வரம் கடற்பகுதியில் நான்கு இடங்களைத் தெரிவுசெய்து தமிழக அரசின் சிறு துறைமுகங்கள் துறை சார்பாக ஐ.ஐ.டி. நிபுணர்கள் குழு கடலடியில் மண்ணின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். அவற்றிலிருந்து ஓர் இடம் அக்னி தீர்த்த கடற்கரை அருகே தெரிவுசெய்யப்பட்டு கப்பல் பயணிகள் இறங்குதளம் அமையவுள்ளது.

ரூ.6.43 கோடி (இந்திய ரூபா) மதிப்பில் அமையவுள்ள இந்த இறங்குதளம் 119 மீற்றர் நீளமும், 7.5 மீற்றர் அகமும் 6 அடி உயரமும் உடையது. இதன் முதற்கட்ட பணியாக நகர்வு மேடை அமைக்கும் பணி ராமேஸ்வரம் ஓலைக்குடா கடற்பகுதியில் நடைபெற்று வருகிறது. இந்த நகர்வு மேடைக்கான பாகங்கள் இரண்டு வாரத்துக்குள் பொருத்தப்பட்டு அக்னி தீர்த்த கடற்கரை அருகே பயணிகள் இறங்குதளம் அமையவுள்ள பகுதியில் நிறுவப்படும். இதனைத் தொடர்ந்து கரையிலிருந்து கடலுக்குள் கொங்கிரீட் தூண்கள் அமைத்து கட்டுமானப் பணிகள் தொடங்குமென்பது குறிப்பிடத்தக்கது.

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசாங்கம் இப்போது, மின்சாரச் சட்டத் திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றது. எரிசக்தி அமைச்சால் அனுப்பப்பட்ட திருத்தங்கள் பொதுவெளிக்கு வந்துள்ளன. அதன்படி சர்வதேச நாணய நிதியம் கோருகின்ற கட்டமைப்பு மாற்றத்தை அரசாங்கம் முன்னெடுக்கின்றது. புதிய சட்டத்தின்படி ஒரு மின்சார சபைக்குப் பதிலான மூன்று சிறிய மின்சார சபைகள் உருவாகும்.

மின்உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம் ஆகியன மூன்று தனித்தனியான அமைப்புகளால் நிர்வகிக்கப்படும். அவ்வமைப்புகள் தனியாரிடம் ஒப்படைக்கப்படும். இது மின்சாரத்தின் விலைகளை இயல்பாகவே அதிகரிக்கும். இப்போதுள்ள சட்டத்தில் அமைச்சருக்கு அதிக அதிகாரம் இருக்கின்றது, சுயாதீனத்தன்மை இல்லை என்பது பல ஆண்டுகளாக ஜே.வி.பி. முன்வைத்த விமர்சனமாகும்.

ஆனால், இன்று புதிய சட்டமானது பொது பயன்பாட்டு ஆணையத்தின் கைகளைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக, அவர்களிடமிருந்த அதிகாரத்தையும் பிடுங்கி அமைச்சரின் கைகளில் அதிகாரத்தை மையப்படுத்துகிறது.

புதிய சட்டத்தின்படி மின்சாரம் தொடர்பான ஆலோசனைக் குழு அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுக்களால் மாற்றப்படுகிறது. இது பொறுப்புக்கூறல் இல்லாத அரசாங்கத்தின் நிர்வாக முறையாகும். இப்புதிய சட்டம் பொது பயன்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த கட்டணப் பொறுப்புகளை நீக்குவது (ஒருபுறம் உற்பத்தி கட்டணங்கள் மற்றும் FIT மற்றும் மறுபுறம் நுகர்வோர் கட்டணம்) ஒரு கடுமையான பிரச்சினையாகும். ஓர் அமைச்சரின் கைகளில் உற்பத்திக் கட்டணங்களை வைத்திருப்பது ஊழலுக்கான திறந்த வழியை உருவாக்குகிறது என்பதை இங்கு நினைவூட்ட வேண்டியுள்ளது.

அண்மையில் கசிந்த அமைச்சரவைப் பத்திரத்தின் அடிப்படையில், ஒருபுறம் புதுப்பிக்கத்தக்க சக்தியைப் புறந்தள்ளி ஒதுக்குகின்ற அதேவேளை, சூழலுக்குப் பாதிப்பான மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்க அரசாங்கம் முனைகிறது. குறித்த சஹஸ்தனவி மின் உற்பத்தி நிலையத்துக்கான அமைச்சரவை ஆவணமானது 350 மெகாவோட் ஒருங்கிணைந்த சுழற்சி டீசல் ஆலையை உருவாக்குவதற்கான அனுமதியை கோருகிறது. இது ஆபத்தானது.

அரசாங்கத்தை உரியவர்கள் தவறாக வழிநடத்துகிறார்களா அல்லது அரசாங்கமே திட்டமிட்டு இந்தப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறதா என்ற வினா ஐயமானது. அமைச்சரவை அனுமதி கிடைத்தால் இலங்கை அதிக விலைக்கு மின்சாரத்தை உற்பத்திசெய்ய விளையும். இறுதியில் அவை மக்களின் தலையில் விலை அதிகரிப்பாக விடியும்.

2016ஆம் ஆண்டுக்குள் 100 வீத மின்மயமாக்கல் சாதனையை இலங்கை பெருமையாகக் கருதுகிறது. அதாவது, இலங்கையர் அனைவருக்கும் மின் இணைப்புக் கிடைத்தமை. இந்தச் சாதனையை நமது அண்டை நாடுகளால் இன்னும் அடைய முடியவில்லை. இந்த சாதனை பாராட்டுக்குரியது.

இருப்பினும், 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் மிகப்பெரிய அளவிலான கட்டண உயர்வுக்குப் பிறகு மின்கட்டணம் செலுத்த முடியாததால் ஒரு மில்லியனுக்கும் அதிகமான குறைந்த விலை நுகர்வோரின் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால், இந்த பிரகாசமான சாதனையை ஒரு சிறிய மேகம் மறைத்துள்ளது. அவர்களில் குறைந்தது பாதிப்பேராவது இப்போது மீண்டும் இணைக்கப்பட்டுள்ளனர். ஆனால், மின்சார விலைகளின் அதிகரிப்பு மீண்டும் இவ்வகைப்பட்ட துண்டிப்புக்கு வழிவகுக்கும்.

இலங்கையின் இன்னொரு சாதனையாதெனில், 1995ஆம் ஆண்டு வரை மின்சார உற்பத்திக்கு இலங்கை புதுப்பிக்கத்தக்க சக்தியைச் சார்ந்திருந்தது. முக்கியமாக மின்சார சபைக்குச் சொந்தமான நீர் மின் உற்பத்தியால் மட்டுமே. இது இப்போது வெறும் 50 வீதமாகக் குறைந்துவிட்டது. இது ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இன்னும் ஒரு சாதனையாகக் கருதப்படுகிறது.

இந்த வீழ்ச்சியை ஓர் அவமானமாக பார்க்க வேண்டாமா? ஏனெனில், இறக்குமதி செய்யப்பட்ட விலையுயர்ந்த எண்ணெய் மற்றும் நிலக்கரியில் ஈடுபடுவதற்கு மின்சார சபை தெரிவுசெய்ததன் தவறான திட்டமிடல் நடவடிக்கைகளால் இது முற்றிலும் ஏற்பட்டது.

இப்போது, இலங்கையில் ஏராளமான உள்நாட்டு புதுப்பிக்கத்தக்க சக்திகள் உள்ளன. அவை எதிர்காலத்தில் பல தசாப்தங்களுக்கப்பாலும் தேவையைப் பூர்த்திசெய்ய போதுமானவை, தொழில்நுட்பங்களின் முதிர்ச்சி மற்றும் வணிக நம்பகத்தன்மை ஆகியவற்றுடன் இணைந்து, புதுப்பிக்கத்தக்க சக்தி மிகவும் மலிவான அதேவேளை, போதுமான மின்சாரத்தை இலங்கைக்கு வழங்கவல்லது. ஆனால், நாம் கடந்த காலத்துக்குத் திரும்புகிறோம்.

# கிழக்கில் தீவிரவாதம் உண்மை நிலை என்ன?

**உமர் அலி உஸ்மான்**

'அமைதி' என்ற ஒற்றை வார்த்தையிலிருந்து பிறந்த சொல்லையே தனது மதத்தின் பெயராகக்கொண்ட இஸ்லாமியர்களுக்கு எதிரான பிரசாரத்தில் 'இஸ்லாமிய தீவிரவாதம்' என்ற சொல்லாடலுக்கான எண்ணம் / திட்டம் ஓரளவு வெற்றி பெற்றுவிட்டதென்றே சொல்ல வேண்டும்.

நீண்டகாலமாக கட்டவிழ்த்துவிடப்படும் இப்பிரசாரத்தின் பெரும் பங்கு அரசியலையும் ஊடகத்துறையையுமே சாரும் என்பதையும் மறுக்க முடியாது. பொது அறிவு வளர்க்க வேண்டிய பத்திரிகை, தொலைக்காட்சி, திரைப்படம் போன்றவையே இந்தப் பாதகச்செயலை முன்னின்று செய்வது துரதிர்ஷ்டவசமானது. அதன் ஓர் அங்கமாக அண்மைய காலத்தில் ஊடகங்களில் பேசுபொருளாக மாறியிருப்பது 'கிழக்கில் முஸ்லிம் தீவிரவாதம்' எனும் சொல்.

'கிழக்கில் முஸ்லிம் தீவிரவாதம்' எனும் சொல் இன்றைய இலங்கை அரசியல் பரப்பில் கடுமையாகப் பேசப்படும் அல்லது உச்சரிக்கப்படும் சொல்லாக மாறியிருக்கிறது. கிழக்கு மாகாணத்தில் இயங்கும் முஸ்லிம் தீவிரவாதக் குழு தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு உரையாற்றிய அவர், தீவிரவாதக் குழு பற்றிய கூடுதல் தகவல்களைக் கண்டறிய காவல்துறை, உளவுத்துறை மற்றும் பாதுகாப்புப் படையினர் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி பாராளுமன்றத்தில் சில தகவல்களை வழங்கினார். அதுமட்டுமல்லாது இந்தத் தீவிரவாதக் குழுவின் நடவடிக்கைகளை பாதுகாப்புப் படையினர் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர் - எனக் கூறினார்.

இதைப் போன்றே அடிப்படைவாத கொள்கைள் தொடர்பான செயற்பாடுகள் கல்முனை பிரதேசத்தில் அதிகம் பதிவாகியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்ததாக வந்த செய்தியே சமூக ஊடகங்களில் பேசுபொருளாக மாறி இப்போது நாட்டின் பிரதான பேசுபொருள்களில் ஒன்றாக மாறியிருக்கிறது.

அவரது கருத்தாக அந்த ஆங்கில ஊடகம், கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் மக்கள் மத்தியில் அடிப்படைவாதக் கொள்கைகளைப் பரப்புவதற்கான முயற்சிகள் தற்போது இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டாரென்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவு மற்றும் அரச புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றிடமிருந்தே இந்த அறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தாரென செய்தி வெளியிட்டிருந்தது.

மதச் செயற்பாடுகள் நடக்கும் சில இடங்களைக் கண்காணித்ததில், குறிப்பாக, சிறுவர்கள் மத்தியில் அடிப்படைவாதக் கொள்கைகள் புகுத்தப்படுவது கண்டறியப் பட்டதாக அவர் குறிப் பிட்டிருந் ததுடன், இந்த அடிப்படைவாதக் கொள்கைகள் இஸ்லாத்தின் போதனைகளுக்கு முரணானதென அமைச்சர் ஆனந்த விஜயபால கூறி நாட்டில் தீவிரவாதம் மற்றும் இனவாதம் மீண்டும் பரவ ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். இதுபோன்ற பிரச்சினைகளை முளையிலேயே அகற்ற நடவடிக்கை எடுப்போமென அவர் மேலும் அந்தச் செய்தியில் தெரிவித்திருந்தார்.

இப்படியாக இந்தப் பிரச்சினைகள் பேசுபொருளாக மாறியிருக்கும் நிலையில், சர்ச்சைகளுக்குப் பெயர்போன பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவுடனான கலந்துரையாடலில் பங்கேற்று, கல்முனையில் 'சூப்பர் முஸ்லிம்' தீவிரவாதம் இருப்பதாகவும் கருத்துகளை வெளியிட்டார்.

அப்போது கிழக்கில் முஸ்லிம் தீவிரவாதக் குழுவின் தலைமைத்துவத்தை கல்முனையிலுள்ள மருத்துவமனையொன்றில் பணிபுரியும் மருத்துவரொருவர் வழங்குவதாக கூறியிருந்தார்.

அது மட்டுமல்லாது, இந்த உலகம் பயனற்றது, குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கக்கூடாது, புத்தகங்களைப் படிக்கக்கூடாது என்று பிரசங்கிக்கும் இந்த தீவிரவாதத் தலைவர், கடவுளுக்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்ய மக்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார் என்றும் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகிறார்கள். இதனைக் கேட்டும் அரசு அவரிடம் விசாரித்து உண்மைகளை கண்டறியாமல் மௌனிப்பது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

இவரது கருத்துகள் பல்லின மக்கள் வாழும் இந்நாட்டுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்ற நிலையில், இனங்களுக்கிடையில் விரிசலையும் ஏற்படுத்துவதாக சமூக ஆர்வலர்கள் விமர்சிக்கின்றனர். இந்நிலையில், இது குறித்து அரசு மௌனம் காப்பது இனங்களுக்கிடையிலான விரிசலை மேலும் அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கின்றனர்.


BOARD OF TRUSTEES
MUHIDEEN JUMMAH GRAND MOSQUE & KADATKARAI PALLIVASAL - KALMUNAI
Office : MOSQUE BUILDING, MOSQUE ROAD, KALMUNAI - 06, SRI LANKA.

இதனைத் தெளிவுபடுத்தும் விதமாக இஸ்லாமிய தீவிரவாதம்' என்பது தப்பான பதம் என இலங்கை முஸ்லிம்களின் அதிக செல்வாக்கைப்பெற்ற அரசியல் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான நிசாம் காரியப்பர் 05.03.2025 அன்று இடம்பெற்ற 2025 வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

கல்முனையைச் சேர்ந்த அவரது உரையில், பேரினவாதிகள் எங்களை முடக்க முயற்சிக்கலாம். 'இஸ்லாமிய தீவிரவாதம்' என்ற பதம் இஸ்லாமிய கொள்கைகளுக்கு முரண்பட்டதென்பதை உறுதியாகக் குறிப்பிட்டுக்கொள்கிறேன் என வலியுறுத்தியிருந்தார். அதுமட்டுமன்றி, கிழக்கில் அடிப்படைவாதம் என்ற கூற்றின் ஊடாக எம்மீது பழி சுமத்த பல தீயசக்திகள் முயற்சிக்கலாம். அமைச்சர்களின் கூற்றுகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள இந்த சக்திகள் நிச்சயம் முயற்சிக்கும். இவ்வாறான கூற்றுகளைக்கொண்டு பேரினவாதிகள் எங்களை முடக்க முயற்சிக்கலாம். எனவே, இந்தக் கூற்றின் உண்மைத்தன்மையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மற்றும் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ ஆகியோர் தெரிவித்த கருத்துகள் சமூக ஊடகங்களில் மட்டுமல்ல, தேசிய பத்திரிகைகளில் - பிரதான ஊடகங்களில் கூட பிரதான செய்தியாக தொடர்ந்தும் வெளிவந்தமையால் நிசாம் காரியப்பர் தனது கருத்துகளை ஆழமாக பாராளுமன்றச் சபைக்கு முன்வைத்தார். அவரது கருத்துகளே பெரும்பான்மையான கல்முனை பிராந்திய மக்களின் கருத்தாகவும் அமைந்துள்ளது.

கல்முனை பகுதிகளில் மத அமைப்புகளால் பிள்ளைகள் தீவிரவாத கற்பித்தலுக்காக பயன்படுத்தப் படுகிறார்கள் என்றும் அதன் காரணமாக உளவுத்துறையினர் கண்காணிப்புகளை அதிகரிக்க வேண்டியுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்தக் கூற்றால் கல்முனை பிரதேச மக்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. அவர்களின் கூற்றுகளில் பொதுவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, அமைப்புகளின் பெயர்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இந்த விடயத்தில் கல்முனை பள்ளிவாசல்கள் சம்மேளனம், ஜம் இய்யதுல் உலமா சபை உட்பட இஸ்லாமிய அமைப்புகள், பொது நிறுவனங்கள் உட்பட இஸ்லாமிய மக்கள் தீவிரவாதத்துக்கு எதிராகவும் தீவிரவாதம் தொடர்பான விசாரணைகளுக்குத் தொடர்புடைய அதிகாரிகளுடன் ஒன்றிணைந்து செயற்படத் தயாராகவுள்ளனர் என்றார்.











இவ்வாறான அடிப்படைவாதப் போக்குகள் உள்ள குழுக்களின் பின்னணியையும் அவர்களுக்கு யார் நிதி வழங்குகிறார்கள் என்பதையும் அறிந்துகொள்ள எமது மக்கள் ஆர்வமாக உள்ளனர். எனவே, புலனாய்வு விசாரணைகள் சட்டத்துக்கமைவாக மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கு முன்னரும் முஸ்லிம் சமூகம் பல விடயங்கள் தொடர்பில் முன்னெச்சரிக்கை விடுத்தும் உரிய அதிகாரிகள் பொறுப்புடன் செயற்படவில்லை. இதனால் சஹ்ரானின் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றன. இன்னொரு சஹ்ரானின் சம்பவம் இந்த நாட்டில் இனி ஒருபோதும் இடம்பெறக்கூடாது என்பதே இலங்கை முஸ்லிம்களின் விருப்பம்.

**(தொடர்ச்சி 18ஆம் பக்கம்)**

# தமிழக சட்ட சபைக்குள் சமாதானமான தலைவர்கள்

**ரமணி**

அண்ணன் தம்பியாக பாசத்துடன் பழகிய பன்னீரும் எடப்பாடியும் எலியும் பூனையுமாக மாறி ஒருவர் மீது ஒருவர் சேறு பூசினார்கள். தமிழக சட்ட மன்றத்தில் பன்னீருக்கு அருகில் இருப்பதற்கு எடப்பாடி மறுப்புத் தெரிவித்தார். டெல்லியிலிருந்து அழுத்தம் கொடுக்கப்பட்டபோதும் பன்னீருடன் இணக்கமாவதற்கு எடப்பாடி விரும்பவில்லை. இன்று தமிழக சட்ட சபையில் எடப்பாடிக்காகக் குரல் கொடுக்கிறார் பன்னீர். அதனை ரசித்துப் பார்க்கிறார் எடப்பாடி. கவுண்டமனியில் பஞ்ச் வசனத்துக்கு அரசியல்வாதிகள் உயிர் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நீக்கப்பட்ட ஓ.பன்னீர் செல்வமும் அவரது ஆதரவாளர்களும் சட்ட சபையில் அணியாகச் செயற்பட்டு வருகின்றனர். இவர்களை மீண்டும் இணைக்க கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி மறுப்புத் தெரிவித்து வருகிறார். இந்நிலையில்தான் தமிழ்நாடு சட்ட சபையில் அடுத்தடுத்து நிகழ்ந்த சம்பவம் ஓ.பன்னீர்செல்வம் அணி அ.தி.மு.கவில் இணைகிறதா என்ற கேள்வியை எழுப்பி உள்ளது.

இப்படியான சூழலில் ஒரு சம்பவம் நடந்தது. அ.தி.மு.கவில் ஓ.பன்னீர்செல்வம் ஒருங்கிணைப்பாளராகவும் எடப்பாடி பழனிச்சாமி துணை ஒருங்கிணைப்பாளராகவும் செயற்பட்டனர். ஒற்றைத் தலைமை வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது. எடப்பாடி பழனிச்சாமியை அ.தி.மு.கவில் பொதுச் செயலாளராக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கு ஓ.பன்னீர் செல்வம் ஒப்புக்கொள்ளவில்லை. இதையடுத்து ஓ.பன்னீர்செல்வமும் அவரது ஆதரவாளர்களும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர்.

இதையடுத்து ஓ.பன்னீர்செல்வம் தனது ஆதரவாளர்களுடன் தனியாக சேர்ந்து செயற்பட்டு வருகிறார். அ.தி.மு.கவில் மீண்டும் இணையும் முனைப்பில் ஓ.பன்னீர் செல்வம் சேர்ந்து செயற்படவேண்டுமென்று பத்திரிகையாளர்கள் சந்திப்பில் கூறி வருகிறார். ஆனால், எடப்பாடி பழனிச்சாமி மீண்டும் அவர்களை கட்சியில் இணைக்க ஆர்வம் காட்டவில்லை. இது தொடர்பான வழக்குகளும் நிலுவையிலுள்ளன.

தமிழக சட்ட சபையில் சபாநாயகர் அப்பாவுக்கு எதிரான நம்பிக்கை யில்லாத் தீர்மானம் இருவரையும் இணைத்து வைத்தது. சபாநாயகர் அப்பாவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அ.தி.மு.க. கொண்டுவந்தபோது அதை ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர்கள் ஆதரித்தனர். சட்ட சபையில் மட்டுமன்றி வெளியிலும் இருதரப்பும் எலியும் பூனையுமாக செயற்பட்டு வந்த நிலையில் ஓ.பன்னீர்செல்வம் தரப்பு இந்தத் தீர்மானத்தை ஆதரவு தெரிவித்தது. குரல் வாக்கெடுப்பிலும் அதற்குப் பிறகு நடந்த டிவிசன் வாக்கெடுப்பிலும் ஓ.பன்னீர்செல்வம் தனது ஆதரவாளர்களுடன் அ.தி.மு.கவின் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்தார்.



கடன் விவகாரம் தொடர்பாக நிதியமைச்சர் தங்கம் தென்னரசுவுடன் எடப்பாடி பழனிச்சாமி பேசிக்கொண்டிருந்தபோது அவருக்கு ஆதரவாக ஓ.பன்னீர்செல்வம் பேசினார்.

''கடன் வாங்குவது தவறு கிடையாது. வாங்கிய கடனை மூலதன செலவுதான் செய்யவேண்டும். அந்த நியதியை நீங்கள் கடைப்பிடித்தீர்களா? வாங்கிய கடனை நீங்கள் சரியாக செலவு செய்யவில்லை'' என்று பேசியிருந்தார். இப்படி ஓ.பன்னீர்செல்வம் திடீரென்று எடப்பாடி பழனிச்சாமிக்கு ஆதரவாகப் பேசியுள்ளார்.

முன்னாள் அமைச்சரும் எம்.எல்.ஏவுமான உடுமலை ராதாகிருஷ்ணன், ஓ.பன்னீர் செல்வத்துடன் சிரித்தபடி பேசிக்கொண்டி ருந்தார். அ.தி.மு.கவிலிருந்து ஓ.பன்னீர்செல்வம் நீக்கப்பட்ட பிறகு அவரிடமிருந்து அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் தூரத்தைக் கடைப்பிடித்தனர். ஆனால், இப்போது ஓ.பன்னீர்செல்வத்துடன் சட்ட சபையிலேயே அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் சகஜமாகப் பேசத் தொடங்கியுள்ளனர். எடப்பாடி எதுவிதமான எதிர்வினையையும் வெளிப்படுத்தவில்லை. இதனால் பன்னீரைச் சேர்க்க எடப்பாடி தயாராகி விட்டாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. எடப்பாடி, பன்னீர் ஆகிய இருவரின் கார்களும் அருகருகே நின்ற படமும் ஊடகங்களில் வைரலானது.

சபாநாயகர் பதவியிலிருந்து அப்பாவுவை நீக்கக் கோரி, அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கடந்த ஜனவரி மாதம் நோட்டீஸ் அளித்திருந்தார். இதையடுத்து இன்று அது விவாதத்துக்கு வந்தது. விவாதத்தை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டியை நடத்துமாறு கேட்டுக்கொண்ட அப்பாவு அந்த நிகழ்வில் பங்கேற்கவில்லை.

இதையடுத்து விவாதம் தொடங்கியது. விவாதத்தின்மீது எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பேசும்போது, சபாநாயகர் அப்பாவு மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை அடுக்கினார். குறிப்பாக, சபை நிகழ்வுகளை முழுமையாக நேரலை செய்ய சபாநாயகர் அனுமதிப்பதில்லை என்ற குற்றச்சாட்டையும் வைத்தார்.



இதற்கு முன்பு இருந்த சபாநாயகர்களைவிட இப்போதுள்ள சபாநாயகர் நடுநிலையுடன் செயற்படுகிறார். அரசு மீது குற்றம் குறை காண முடியாதவர்கள் சபாநாயகர் மீது குறை சொல்கிறார்கள். சபாநாயகர் அப்பாவு ஜனநாயக ரீதியாக செயற்படக்கூடியவர். அவர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அறிந்து நான் வருத்தமடைந்தேன் என்று கூறினார் முதல்வர். அதன்பின்னர் குரல் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. அதில் தீர்மானம் தோல்வியடைந்தது.

இந்நிலையில், தற்போது டிவிஷன் வாக்கெடுப்புக்கு அ.தி.மு.க. தரப்பு கோரிக்கை விடுத்தது. இந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு டிவிஷன் வாக்கெடுப்பு நடைபெற்றது. டிவிஷன் வாக்கெடுப்பு நடைபெற்ற நிலையில், தீர்மானத்துக்கு எதிராக 154 பேரும் ஆதரவாக 63 பேரும் வாக்களித்தனர். இதையடுத்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்ததாக அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து மீண்டும் சபாநாயகராக அப்பாவு இருக்கையில் அமர்ந்தார்.

தமிழ்நாடு சட்டசபையில் சபாநாயகருக்கு எதிராக அ.தி.மு.க. கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நடக்கும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் தவிர்க்கவே செங்கோட்டையன் திட்டமிட்டிருந்தாராம். ஆனால், கடைசி நிமிடத்தில் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தார்.

சட்டசபைத் தீர்மானத்தின்போது கட்சியின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வாக்களிக்கவேண்டும். இல்லையேல் பதவி பறிக்கப்படும் அபாயம் உள்ளது.

செங்கோட்டையன் மனம் இப்படி மாறியதற்கு கே.பி.முனுசாமி நடத்திய பேச்சுவார்த்தைதான் காரணம் என்கின்றனர். பேரவை கூடுவதற்கு முன்பு அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களுடன் எடப்பாடி நடத்திய ஆலோசனைக் கூட்டத்தை செங்கோட்டையன் புறக்கணித்தார். பேரவையில் கலந்துகொண்டார்.

கேள்வி நேரம் தொடங்கியது. அப்போது, கே.பி.முனுசாமி, வேலுமணி, தங்கமணி, கடம்பூர் ராஜு உள்ளிட்டவர்கள் செங்கோட்டையனிடம் பேசினர். அவரிடம் எந்தச் சலனமும் இல்லை. அதேசமயம், கேள்விநேரத்தில் தனக்கான வாய்ப்பின்போது பேசிவிட்டு வெளியேறினார் செங்கோட்டையன். அதாவது, கேள்வி நேரம் முடிந்ததும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்திலும் அதனைத் தொடர்ந்து நடக்கும் வாக்கெடுப்பிலும் கலந்துகொள்வதைத் தவிர்க்கும் பொருட்டே வெளியேறினார். கே.பி.முனுசாமி பின்தொடர்ந்து போய் செங்கோட்டையனைச் சாந்தப்படுத்தினார்.

கே.பி.முனுசாமியின் சமாதானத்தை ஏற்றுக்கொண்டு மீண்டும் அவைக்குத் திரும்பிய செங்கோட்டையன், தீர்மானத்தின் மீது நடந்த வாக்கெடுப்பில் கலந்துகொண்டு அ.தி.மு.கவுக்கு ஆதரவாக வாக்களித்தார் செங்கோட்டையன் என்கின்றனர். அதேசமயம், அ.தி.மு.கவின் கொறடா, அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென உத்தரவிட்டார். அதனை மீற விரும்பாமல் செங்கோட்டையன், ஓபிஎஸ் இருவரும் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்துள்ளனர். கொறடா உத்தரவை மீறினால் எம்.எல்.ஏ. பதவியை தகுதி நீக்கம் செய்ய அ.தி.மு.க. தரப்பில் வலியுறுத்தவும் முடியும்.

சமாதான அலை சட்ட சபைக்குள்ளே முடங்கிவிடுமா அல்லது பொதுவெளியிலும் தொடருமா என்பதை எடப்பாடிதான் முடிவு செய்யவேண்டும்.

# பூமிப் பந்தும் சிங்கப் பெண்ணும்

## - இது சுனிதாவின் விண் பயணக்கதை



விண்வெளியில், பூமிக்கு மேலே சுமார் 4,20,000 கிலோவுக்கு மேல் எடைகொண்ட அந்த இராட்சத உருவம் பூமியின் ஈர்ப்பு சக்தி மற்றும் சுற்றுப்பாதை இயக்கத்தைப் பயன்படுத்தி நொடிக்கு 8 கிலோமீற்றர் வேகத்தில் பூமியைச் சுற்றி வந்துகொண்டிருக்கிறது.

சொல்லும்போதே திகைப்பும் வியப்பும் ஒன்றுசேர நம்மை திகில்கொள்ள வைக்கிறதல்லவா? அத்தகைய திகைப்புறும் தகவலை இன்று நாம் தேடிச் சுவைக்க வாய்ப்பளித்திருக்கிறது 'விண் தேவதை' சுனிதா வில்லியம்ஸின் 286 நாட்கள் விண்வெளிப் பயணம்.

அனைத்து வசதிகளுமுள்ள ஆடம்பரமாளிகையேயானாலும் கூட, குறைந்தபட்சம் ஒரு வாரம் வெளியே வராமல் இருந்தால் பைத்தியம் பிடித்துவிடும். அவ்வாறான நிலையில், 9 மாதங்கள் சக விண்வெளி வீரர் புட்ச் வில்மோருடன் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் தங்கியிருப்பது சாதாரணமானதொரு விடயமல்ல. உடனிருப்பவரைத் தவிர, வேறெந்த மனித முகங்களையே காணமுடியாமல் அந்தரத்தில், அமானுஷ்யமான மனநிலையில் 286 நாட்கள் மனித முயற்சிகளுக்கு அப்பாற்பட்ட விடயம். இத்தனை நாட்களையும் நம் மனிதகுலம் பயன்பெறும் வகையான பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபடுத்தி கடந்த 19ஆம் திகதி (புதன்கிழமை) பூமிக்கு பத்திரமாகத் திரும்பினர் சுனிதா மற்றும் வில்மோர்.

சுனிதா உட்பட விண்வெளி வீரர்கள் அடங்கிய விண்கலம் அமெரிக்காவின் புளோரிடா கடற்பரப்பில் தரையிறங்கும் காட்சியை முழு உலகமும் உற்றுநோக்கிக் கொண்டிருந்தது. பத்திரமாக தரையிறங்கியது டிரகன் விண்கலம். உற்றுநோக்கிய அத்தனை கண்களிலும் அத்தனை ஆனந்தம். மகிழ்ச்சி ஆரவாரத்தில் பூரித்துப்போனது நாசா ஆய்வுமையம். ஆனந்த கண்ணீர்வழிய வாயடைத்து நின்றது வல்லரசு அமெரிக்கா.

விண்வெளி வீரர்கள் விண்வெளி நிலையத்துக்குச் சென்று வருதலென்பது ஒரு வழமையான விடயம்தானே. அவ்வாறான நிலையில், சுனிதா உள்ளிட்ட குழுவினரின் விண்வெளிப் பயணம் உலகம் முழுவதும் ஏன் இத்தனை பேசுபொருளானதென்பதுதானே உங்களின் கேள்வி. அதற்கான பதில் ஈற்றில் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் தொடர்கிறேன்...

### பூமியை வட்டமிடும் 'செயற்கை விண்மீன்'

விண்வெளியில், பூமிக்கு மேலே பூமியைச் சுற்றிக்கொண்டே இருக்கும் ஓர் ஆய்வு நிலையம்தான் சர்வதேச விண்வெளி நிலையம் (International Space Station). பூமியிலிருந்து 402 கிலோமீற்றர் தூரத்தில் நொடிக்கு 8 கிலோமீற்றர் (மணிக்கு 28,807 கிலோமீற்றர்) வேகத்தில் பறந்துகொண்டிருக்கிறது இந்த விண்கலம். இதுவரை மனிதன் உருவாக்கியதிலேயே மிகப் பெரிய விண்கலம். கால்பந்து மைதானமொன்றின் அளவு இருக்கும் என்கின்றனர். விண்வெளியிலேயே பாகங்கள் இணைக்கப்பட்டு இத்தனைப் பெரிய விண்கலம் உருவாக்கப்பட்டுள்ளது.

விண்வெளி வீரர்களுக்கு வீடாகவும் பல ஆராய்ச்சிகள் நடைபெறும் ஆய்வகமாகவும் இருக்கிறது. அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பா (The European Space Agency), ஜப்பான் மற்றும் கனடா ஆகிய நாடுகளின் விண்வெளி மையங்கள் இணைந்து இதனை உருவாக்கியிருக்கின்றன. இங்கு எதிர்காலத்தில் விண்வெளியில் மனித இனம் ஆதிக்கம் செலுத்துவதற்கான பல ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

1998ஆம் ஆண்டு சர்வதேச விண்வெளி மைய கட்டுமானம் தொடங்கியது. ரஷ்யாவின் கட்டுப்பாட்டுத் தொகுதி முதன்முதலாக ஆர்பிட்டில் ஏவப்பட்டது. அதைத்தொடர்ந்து பிற நாடுகள் விண்வெளி நிலையத்தின் பல பகுதிகளை விண்வெளிக்கு ஏவின. இரண்டு ஆண்டுகளில் விண்வெளி வீரர்கள் தங்குமளவுக்கு உருவானது. அன்று முதல் இன்று வரை விண்வெளியில் மனிதன் வாழாத நாட்கள் கிடையாது என்றே சொல்லவேண்டும். தற்போது 6 விண்வெளி வீரர்கள் மற்றும் சில பார்வையாளர்களும் தங்கிக்கொள்ளும் வசதியுடன் இருக்கிறது விண்வெளி நிலையம்.

2011ஆம் ஆண்டு முழுமையான விண்வெளி நிலையம் உருவானது. 2021ஆம் ஆண்டுவரை சர்வதேச விண்வெளி நிலையத்துக்குப் புதிய தொகுதிகள் அனுப்பப்பட்டன. விண்வெளி வீரர்கள் அவற்றைப் பொருத்தினர். பூமியிலிருந்து ஒரு விண்கலத்தை விண்வெளி நிலையத்துக்கு அனுப்ப 4 மணிநேரம்தான் ஆகுமாம். விண்வெளியில் வாழும்போது எலும்பு மற்றும் தசைகள் விரைவாகச் சுருங்கும் அபாயம் உள்ளது. இதனைத் தடுக்க விண்வெளி வீரர்கள் தினமும் 2 மணிநேரம் உடற்பயிற்சி செய்கின்றனர்.

தற்போது சர்வதேச விண்வெளி நிலையத்தின் எடை 4,20,000 கிலோவுக்கு மேல். அத்தனை பெரிய உருவம் பூமியின் ஈர்ப்பு சக்தி மற்றும் சுற்றுப்பாதை இயக்கத்தைப் பயன்படுத்தி 90 நிமிடத்தில் பூமியையே சுற்றி வருகிறது. அதனுள் 6 முதல் 7 பேர் பணிபுரிவதைக் கற்பனை செய்து பாருங்கள். விண்ணில் பறக்கும் சர்வதேச விண்வெளி நிலையத்தை நாம் பூமியிலிருந்தே பார்க்க முடியும். ஒரு நாள் விண்வெளி நிலையம் பயணிக்கும் தூரம், பூமியிலிருந்து சந்திரனுக்குச் சென்று திரும்பும் தூரத்துக்குச் சமமாகும்.

ஆராய்ச்சிகளுக்கான ஆய்வகம், மனிதர்கள் தங்கும் பகுதி எனப் பல பகுதிகள் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருக்கின்றன. சோலார் இறக்கைகள் (109 மீற்றர் நீளம்) மூலம் மின்சாரம் பெறப்படுகிறது. விண்வெளி நிலையத்தினுள் சாதாரணமாக இருக்கும் மனிதர்கள் விண்வெளி-உடை மாட்டிக்கொண்டு வெளியில் சென்று வேலை பார்க்கவேண்டிய சூழலில் அவர்களை அழைத்துச்செல்ல ரோபோ கைகள் உதவும்.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளை வேறெங்கும் செய்ய முடியாது. சில ஆய்வுகள் மருத்துவத்துறையில் முக்கிய மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளன. பூமியிலிருந்து 278 முதல் 460 கிலோ மீற்றர் உயரத்தில் சுற்றிவரும் விண்வெளி நிலையம், ஒருமுறை பூமியைச் சுற்றிவர 91 நிமிடங்களாகின்றன. தினமும் இந்த நிலையம் பூமியை 15.7 தடவைகள் சுற்றி வருகிறது. இந்த நிலையத்தில் தங்கும் விண்வெளி வீரர்கள் தினமும் 16 சூரியன் உதயத்தையும், மறைதலையும் காண்கின்றனர். இதுவரை 20 நாடுகளைச் சேர்ந்த 250இற்கும் மேற்பட்ட விண்வெளி வீரர்கள் இங்கு சென்று தமது ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டு திரும்பியுள்ளனர்.

### விண்ணுக்குச் சென்ற ஸ்டார்லைனர்

இந்நிலையிலேயே கடந்த 2024ஆம் ஆண்டு அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசாவும் போயிங் நிறுவனமும் இணைந்து தயாரித்த ஸ்டார்லைனர் என்ற புதிய விண்கலம் மூலம் அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் (வயது - 59) மற்றும் அமெரிக்க கடற்படை விமானியான புட்ச் வில்மோர் (வயது - 62) ஆகியோரை சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்புவதற்குத் தீர்மானித்திருந்தது. ஸ்டார்லைனர் மூலம் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பி சோதிக்கும் முயற்சியாக இப்பயணம் அமைந்திருந்தது.



டிரகன் விண்கலத்துள் சுனிதா உட்பட குழுவினர்....

அதன்படி கடந்த 2024ஆம் ஆண்டு மே 06ஆம் திகதியே சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோரின் விண்வெளிப் பயணத்துக்கான நாள் குறிக்கப்பட்டிருந்தது. வணிக ரீதியான விண்வெளி பயணத்தின் ஒரு பகுதியாக, ஸ்டார்லைனர் விண்கலத்துக்கான சோதனை ஓட்டம் இது என்பதால் வெறும் 8 நாட்கள் மட்டுமே பயணம் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், விண்கலத்தை ஏவும் ரொக்கெட்டிலிருக்கும் ஒட்சிசன் வால்வில் பிரச்சினை கண்டறியப்பட்டதால், இம்முயற்சி ஒத்திவைக்கப்பட்டது.

இதனையடுத்து மே 23ஆம் திகதி விண்கலத்தை இயக்கும் கருவிகள் அமைந்திருக்கும் சர்வீஸ் மாட்யூல் பகுதியில் ஹீலியம் வாயு கசிவு கண்டறியப்பட்டதாக நாசா அறிவித்தது. இதனால் விண்கலத்தை ஏவும் திட்டம் மீண்டும் தள்ளிப்போனது.

மேற்குறித்த சிக்கல்கள் சீர்செய்யப்பட்டு ஜூன் முதலாம் திகதி விண்கலத்தின் பயணம், ரொக்கெட் ஏவப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் கணினி மென்பொருளில் ஏற்பட்ட கோளாறு காரணமாக மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

இதனையடுத்து ஜூன் 05ஆம் திகதி பல கட்ட தாமதங்களுக்குப் பின்னர், புளோரிடாவின் கெப் கெனவெரல் விண்வெளி நிலையத்திலிருந்து ஸ்டார்லைனர் விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது. சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் வெறும் 8 நாட்கள் பயணத்துக்குப் பின்னர் ஜூன் 14ஆம் திகதி பூமிக்குத் திரும்ப திட்டமிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஸ்டார்லைனரில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கடந்த செப்டெம்பர் 07ஆம் திகதி விண்கலம் மட்டும் தனியாக பூமிக்குத் திரும்பியது. சுனிதாவும், வில்மோரும் பல மாதங்கள் விண்வெளி மையத்தில் தங்கவேண்டிய ஏற்பட்டது.

இதனையடுத்து 2024 செப்டெம்பர் 28ஆம் திகதி சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோரை அழைத்து வருவதற்கான மாற்றுத் திட்டம் செயற்படத் தொடங்கியது. இந்நாளில் சர்வதேச விண்வெளி நிலையத்தில் நாசா விண்வெளி வீரர் நிக் ஹாக் மற்றும் ரஷ்ய விண்வெளி வீரர் அலெக்சாண்டர் கோர்புனோவ் சர்வதேச விண்வெளி நிலையத்தைச் சென்றடைந்தனர். இவர்களை அழைத்துச் சென்றது ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிரகன் விண்கலமாகும். 'க்ரூ9' என்றழைக்கப்பட்ட இந்தக் குழு விண்வெளிக்குச் செல்லும்போது, மேலதிகமாக இரண்டு இருக்கைகளுடன் விண்கலம் பயணித்தது. இந்த இருக்கைகள் சுனிதா மற்றும் வில்மோருக்காக ஒதுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், ஒக்டோபர் 29ஆம் திகதி விண்வெளியில் இருந்தவாறே தீபாவளி பண்டிகையைக் கொண்டாடிய சுனிதா, தமது தந்தையை நினைவுகூர்ந்து பூமியிலுள்ள அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துகளைப் பகிர்ந்துகொண்டார். அதேபோன்று கடந்த 2024 நவம்பர் 05ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் விண்வெளியில் இருந்தவாறே தனது வாக்கைப் பதிவுசெய்திருந்தார். பூமியிலிருந்து 400 கி.மீ. தொலைவில் பயணித்துக் கொண்டிருக்கும் சுனிதாவின் வாக்கு மின்னணு முறையில் பதிவு செய்யப்பட்டது. இதற்கு முந்தைய காலங்களிலும் விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து பதிவுசெய்துள்ளனர்.

அதுமட்டுமன்றி, கடந்தாண்டு டிசம்பர் 25ஆம் திகதி விண்வெளியில் சுனிதா உள்ளிட்டோர் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடினர். அங்கிருந்து பூமியிலுள்ள தங்களின் அன்புக்குரியவர்களுக்கு கிறிஸ்மஸ் வாழ்த்தையும் அவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

மேலும், 2025 ஜனவரி மாதத்தின் நடுவே சுனிதா மற்றும் வில்மோர் ஆகியோர் 'ஸ்பேஸ் வோக்' எனப்படும் விண்வெளி நடையில் ஈடுபட்டனர். சக விண்வெளி வீரரான நிக் ஹாகையும் உள்ளடக்கிய இந்தப் பயணம் சர்வதேச விண்வெளி நிலையத்தில் பராமரிப்புப் பணிகளுக்கானதாக இருந்தது.

இந்நிலையில், மார்ச் 08ஆம் திகதி விண்வெளியிலுள்ள வீரர்களைப் பரிமாற்றம் செய்வதற்காக 'க்ரூ10' விண்கலம் ஏவப்படுவதற்குத் தயாரான நிலையில், சுனிதா உள்ளிட்டோர் பூமி திரும்புவதற்கான திட்டம் இறுதிக்கட்டத்தை எட்டியது.

இதன்படி மார்ச் 12ஆம் திகதி 'க்ரூ10' திட்டம் விண்கலம் ஏவப்படுவதற்கு 45 நிமிடங்களுக்கு முன்னர் நிறுத்தி வைக்கப் பட்டது. ஹைட்ரோலிக் அமைப்பில் ஏற்பட்ட கோளாறு இதற்குக் காரணமாகத் தெரிவிக்கப்பட்டது.

### டிரகனின் 17 மணிநேர பூமிப் பயணம்

இதனையடுத்து மார்ச் 14ஆம் திகதி புளோரிடாவிலுள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து 'க்ரூ10' திட்டத்தின்கீழ் ஸ்பேஸ் எக்ஸ் டிரகன் விண்கலம் விண்வெளியில் ஏவப்பட்டது. மார்ச் 16ஆம் திகதி 'க்ரூ10' குழுவினர் சென்ற விண்கலம் வெற்றிகரமாக சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைக்கப்பட்டது.

இதன் பின்னர் புதிய குழுவிடம் பணிகளை ஒப்படைத்த சுனிதா, வில்மோர் உள்ளிட்ட 4 வீரர்களும் பூமிக்குத் திரும்பத் தயாராகினர். அதன்படி, 9 மாதங்களாக விண்வெளியில் சிக்கிய சுனிதா வில்லியம்ஸ், வில்மோர் ஆகியோருடன் மற்ற 2 வீரர்கள் டிரகன் விண்கலம் மூலம் கடந்த 18ஆம் திகதி காலை 10.35 மணிக்கு சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து புறப்பட்டனர்.

சர்வதேச விண்வெளி நிலையம் பூமியிலிருந்து 408 கி.மீ. தொலைவில் இருந்தாலும், பூமியில் தனது இலக்கை துல்லியமாகவும் பாதுகாப்பாகவும் அடைய டிரகன் விண்கலம் 17 மணிநேரம் பயணம் மேற்கொண்டது. புளோரிடாவின் பான்ஹேண்டிலிலுள்ள டல்லாஹஸ்ஸி பகுதியில் அமெரிக்கன் வளைகுடா கடலில் டிரகன் கெப்ஸ்யூலை இறக்க ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் திட்டமிட்டது. இவ்வாறு விண்கலத்தைக் கடலில் இறங்கி தரையிறக்கும் செயல்முறை 'ஸ்ப்ளாஷ்டவுன்' எனப்படும். இதில், விண்கலங்கள் புவியின் வளிமண்டலத்துக்குள் நுழைகின்ற மறுநுழைவுதான் மிகவும் ஆபத்தான கட்டமாகும்.

### கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்த விண்கலம்

இந்த ஆபத்தான கட்டத்தைத் தாண்டி, சுனிதா மற்றும் வில்மோர் உள்ளிட்ட குழுவினர் பத்திரமாகப் பூமிக்குத் திரும்பவேண்டுமென ஒட்டுமொத்த உலகமும் வேண்டிக்கொண்டது. டிரகன் விண்கலத்தின் வருகையை நாசாவும் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனமும் நேரடியாக ஒளிபரப்பு செய்தன. இதன்படி கடந்த 19ஆம் திகதி அதிகாலை டிரகன் விண்கலத்தின் புவி வளிமண்டல மறுநுழைவு நிகழ்வுகள் தொடங்கின. அந்த சமயத்தில் 27,000 கி.மீ. வேகத்தில் இறங்கிய விண்கலத்தைச் சுற்றி சுமார் 1950 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை இருந்தது. இதனால் விண்கலத்துக்கும் கட்டுப்பாட்டு அறைக்குமான தொடர்பு சிறிதுநேரம் துண்டிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து பெரசூட் மூலம் விண்கலத்தின் வேகம் கட்டுப்படுத்தப்பட்டது. இறுதியாக அதிகாலை 3.27 மணிக்கு விண்கலம் நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் பத்திரமாக கடலில் மிதக்க வைக்கப்பட்டது. விண்கலத்தின் குளிர்விப்புக்காக சுமார் ஒரு மணிநேரம் காத்திருப்புக்குப் பின்னர், மீட்புப் படகிலிருந்த மீட்புப் படையினர் விண்கலத்தின் கதவைத் திறந்து வீரர்களை மீட்டனர்.

### பூமிக் காற்றை சுவாசித்த சுனிதா குழுவினர்

சுனிதா வில்லியம்ஸ் உட்பட 4 வீரர்களுடன் உற்சாகமாக வெளியில் வந்து பூமிக் காற்றை சுவாசித்தபடி கையசைத்தபடியே உற்சாகத்துடன் வந்தனர். பல மாதங்கள் விண்வெளியில் இருந்ததால் அவர்களால் உடனடியாக எழுந்து நடக்க முடியாது என்பதால் சக்கர நாற்காலி மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

### 45 நாட்கள் மருத்து கண்காணிப்பில் சுனிதா

அதைத் தொடர்ந்து சுனிதா உட்பட 4 வீரர்களும் டெக்சாஸ் மாகாணம் ஹூஸ்டனிலுள்ள ஜோன்சன் விண்வெளி மையத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டு, அங்கு 45 நாட்கள் மருத்துவ சிகிச்சைக்கு உட்பட்டுள்ளனர். நீண்டகால விண்வெளி பயணங்கள் உடலைப் பாதிக்கின்றன. எனவே, புவியீர்ப்பு விசையுடன் வாழ்வதற்கு மீண்டும் பழகுவதால் விரிவான உடற்பயிற்சிகள் அவசியம். இவை முடிந்த பின்னர் 4 வீரர்களும் வீடு திரும்புவார்கள்.

வெறும் 8 நாட்கள் பயணமாக விண்வெளிக்குச் சென்று, எதிர்பாராத விதமாக 286 நாட்கள் தங்கி ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு பத்திரமாகப் பூமிக்குத் திரும்பி புதிய சாதனை படைத்திருக்கும் சுனிதா வில்லியம் மற்றும் வில்மோர் உள்ளிட்ட குழுவினருக்கு ஒட்டுமொத்த உலகமும் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றது.

தொடர்ச்சியாக பல மாதங்கள் விண்வெளியில் இருந்துவிட்டதால் கை, கால் செயற்பாடுகளில் சிரமம், தலைச்சுற்றல், தசை சிதைவு உள்ளிட்ட பல்வேறு உபாதைகளுக்கு விண்வெளி வீரர்கள் ஆளாகக்கூடும் என்பதால் சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட 4 பேரும் ஹூஸ்டனிலுள்ள நாசா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இன்னும் ஓரிரு தினங்களில் குடும்பத்தினரைச் சந்திக்க அவர்கள் அனுமதிக்கப்படுவர். அதன் பின்னர் 45 நாட்கள் வரை அந்த மருத்துவமனையிலேயே தங்கி மறுவாழ்வு சிகிச்சைகளைப் பெறுவர்.

### சுனிதாவின் விண்குடில் வாழ்க்கை

கிரீன்விச் நேரத்தின்படி இயங்கும் விண்குடில் வாழ்க்கையில் நாளொன்றுக்கு எட்டு மணிநேரம் தூக்க நேரம். நாம் சாதாரணமாகப் படுப்பதுபோல் எங்காவது படுத்தால் விண்வெளியில் மிதந்து சென்றுவிடுவோம் என்பதால் 'ஷிப்'புடன் பைபோல இருக்கும் படுக்கைக்குள்தான் உறங்கவேண்டும்.

விழித்திருக்கும் நேரத்தில் 15 நிமிடத்துக்கு ஒரு வேலை என்கிறபடி தினசரி வேலைப்பட்டியல் கட்டளைகளாக பூமியிலிருந்து அனுப்பப்படும். அதன்படி பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். குடிலைச் சுத்தம் செய்யவேண்டும். அவ்வப்போது கட்டளைப்படி உடற்பயிற்சி மேற்கொள்ளவேண்டும். சில நேரம் புயல் போன்ற இயற்கைச் சீற்றம் உருவாகும்போது, விண்குடிலின் ஜன்னல் வழியே ஒளிப்படம் எடுத்து அனுப்பவேண்டும்.

இடையிடையே அவர்களுக்கான நேரம் இருக்கும். அதில் பாட்டு கேட்கலாம், புத்தகம் படிக்கலாம், திரைப்படம் பார்க்கலாம். தினமும் வீட்டிலுள்ள நெருங்கிய உறவினர்களோடு வீடியோ கோலில் பேச வாய்ப்புக் கிடைக்கும்.

மாதம் ஒருமுறை பூமியிலிருந்து உணவு, நீர், ஒட்சிசன், எரிபொருள், ஆய்வுக் கருவிகள் போன்றவற்றைத் தாங்கிய ஆளில்லா சரக்கு விண்கலம் செல்லும். அதிலுள்ள பொருட்களை எடுத்து பத்திரப்படுத்துவதும், குப்பைகளைச் சேகரித்து அழிப்பதும் பணிக்குழுவின் வேலைதான்.

பூமியிலிருந்து பதம் செய்து பற்பசைபோல (டூத்பேஸ்ட்) பாகு பதத்தில் டியூப்களில் அடைத்து அனுப்பப்படும் உணவு தவிர, காப்பி, ஜூஸ், பழங்கள், இறைச்சி போன்றவற்றை உண்ணலாம். வானலி போன்றவற்றில் இட்டு எதையும் சமையல் செய்ய முடியாது; மைக்ரோவேவ் மூலம் சூடாக்குவது அல்லது இறைச்சியை உலர் வறுக்கும் முறையில் வறுப்பது போன்ற வகையில் மட்டுமே சமையல் செய்யமுடியும். உணவு தயாரிப்பதும் பணிக்குழுவின் வேலையே.

விண்வெளியில் துணியைத் துவைக்க முடியாது. எனவே, உள்ளாடைகளை ஓரிரு நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே பயன்படுத்துவர். மற்ற ஆடைகளைச் சுமார் ஒரு வாரம் பயன்படுத்துவர். சரக்கு விண்கலத்தில் அவர்களுக்குத் தேவையான ஆடைகள் செல்லும்.

தனிமை, சிறு குழுவுடன் அடைந்த இடத்தில் வாழ்க்கை போன்றவை சிலரின் மனநிலையைப் பாதிக்கலாம். ஆனால், விண்வெளி வீரர், வீராங்கனைகளைத் தெரிவுசெய்யும்போதே தனிமை, சிறு குழு வாழ்க்கைக்குத் தயார்படுத்தித்தான் அவர்களை விண்வெளிக்கு அனுப்புவார்கள்.

### உடலில் ஏற்படும் மாற்றங்கள்:

பூமியில், ஈர்ப்பு விசை காரணமாக நமது உடலில் தலையை நோக்கிச் செல்வதைவிட கால் நோக்கி இரத்தம் கூடுதலாகப் பாயும். விண்வெளியில் ஈர்ப்பு விசை இல்லை என்பதால் உடலின் எல்லா பாகங்களுக்கும் இரத்தம் இயல்புக்கு மாறாகப் பாயும். எனவே, விண்வெளிக்குச் சென்ற சில நாட்களுக்குத் தலைவலி, கண் வலி போன்றவை ஏற்படும். நாளடைவில் நமது உடல் விண்வெளி நிலைமைக்குத் தகவமைத்துக்கொண்டுவிடும்.

இதேபோல ஆங்கில எழுத்து 'S' போல பூமியில் இயல்பாக வளைந்து இருக்கும் முதுகுத்தண்டு விண்வெளியில் நேராக நீண்டு, நமது உயரம் சில செ.மீ.வரை கூடிவிடும். பூமியில் ஈர்ப்பு விசைக்கு எதிராக உடலைத் தாங்கிப் பிடிக்கும் எலும்புக்கு விண்வெளியில் வேலை இல்லை.

எனவே, எலும்புச் செல் வளர்ச்சி குறைந்து நாளடைவில் எலும்பு அடர்த்தி குறையும். இது போன்ற உடலியல் மாற்றங்களைச் சரிசெய்ய ஆய்வுகளை மேற்கொள்வார்கள்; அதனடிப்படையில் புதிய புதிய உடற்பயிற்சியை உருவாக்குவார்கள். இவற்றால் உயிருக்கு ஆபத்து ஏதுமில்லை என்றாலும், பூமி திரும்பியதும் மறுபடி நிலைமை திரும்ப சில வாரங்கள் முதல் ஒரு மாதம்கூட எடுக்கலாம்.

### சாதனைப் பெண்

வெறும் 8 நாட்கள் விண்வெளிப் பயணம் 286 நாட்களான நிலையில் விண்வெளியில் நீண்டகாலம் தங்கிய முதல் பெண்மணி, சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு வெளியே அதிக மணிநேரம் செலவழித்த பெண் ஆகிய சாதனைகளை சுனிதா வில்லியம்ஸ் படைத்துள்ளார்.

இது சுனிதா வில்லியம்ஸின் 3ஆவது விண்வெளிப் பயணம். மூன்று பயணத்திலும் சேர்த்து மொத்தமாக 9 தடவைகள் அவர் விண்வெளியில் நடந்துள்ளார். அதாவது மொத்தம் 62 மணி 6 நிமிடங்களை அவர் விண்வெளி நடையில் செலவிட்டுள்ளார். இதன் மூலம் அதிக நேரம் விண்வெளியில் நடந்த பெண் என்ற சாதனையை சுனிதா படைத்துள்ளார்.

உலகளவில் விண்வெளியில் அதிக நாட்களைக் கழித்த வீரர்கள் பலர் உள்ளனர். அந்தப் பட்டியலில் முதல் இடத்தில் ரஷ்ய வீரர்கள் உள்ளனர். அவர்களைத் தொடர்ந்து அமெரிக்க வீரர்கள் உள்ளனர்.

அந்தவகையில் ரஷ்யாவைச் சேர்ந்த விண்வெளி வீரரான ஒலெக் கோனோனென்கோ 1,110 நாட்கள் விண்வெளியில் கழித்துள்ளார்.

அவரைத் தொடர்ந்து மற்ற ரஷ்ய வீரர்களான கென்னடி படல்கா (878 நாட்கள்), செர்கெய் க்ரிகலெவ் (803 நாட்கள்), அலெக்சாண்டர் கலேரி (769 நாட்கள்), செர்கெய் அவ்தெயெவ் (747 நாட்கள்) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, அமெரிக்க விஞ்ஞானியான பெக்கி விட்சன் 675 நாட்களை விண்வெளியில் கழித்துள்ளார். அவருக்கு அடுத்து ரஷ்ய விண்வெளி வீரர்களான ப்யோடர் யுர்சிகின் (672 நாட்கள்), யூரி மாலென்சென்கோ (641 நாட்கள்) ஆகியோர் உள்ளனர்.

இவர்களைத் தொடர்ந்து அமெரிக்க விஞ்ஞானியான சுனிதா வில்லியம்ஸ் (609 நாட்கள்) உள்ளார். இதனால், விண்வெளியில் அதிக நாட்களைக் கழித்த அமெரிக்க விண்வெளி வீரர்கள் வரிசையில் சுனிதா வில்லியம்ஸ் 2ஆவது இடம்பிடித்துள்ளார்.

### 6ஆவது இடத்தில் வில்மோர்

சுனிதா வில்லியம்ஸுடன் சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஒன்றாக பணிபுரிந்த பேர்ரி புட்ச் வில்மோர் (462 நாட்கள்) விண்வெளியில் அதிக நாட்களைக் கழித்த 6ஆவது அமெரிக்க விண்வெளி வீரராகவுள்ளார்.

உலகளவில் பேசப்படும் விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் அமெரிக்காவின் ஓஹையோ மாகாணத்தைச் சேர்ந்த இந்தியாவின் குஜராத்தை பூர்வீகமாகவும் கொண்ட தீபக் பாண்ட்யாவுக்கும் ஸ்லோவேனியாவைச் சேர்ந்த உர்சுலின் போனிக்கும் பிறந்த மூன்று குழந்தைகளில் கடைக்குட்டி. 1965இல் பிறந்தார் சுனிதா வில்லியம்ஸ். சிறு வயதிலேயே விண்ணில் பறக்க வேண்டுமென்ற ஆசை சுனிதாவின் கனவு பின்னாளில் அது நனவானது. அமெரிக்காவின் நீதம் என்ற இடத்தில் பாடசாலைக் கல்வியையும் புளோரிடாவில் பொறியியல் படிப்பையும் முடித்தள்ளார். பொறியியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

### எப்படிப்பட்டவர் சுனிதா?

சுனிதா சிறு வயதிலிருந்தே அறிவியலில் ஆர்வம் கொண்டவர். ஆனாலும், அவரது கனவு கால்நடை மருத்துவராக வேண்டும் என்பதுதான். ஒருசமயம், சகோதரர் ஜேவை பார்க்க அமெரிக்கக் கடற்படை எகெடமிக்குச் சென்றபோது, தானும் கடற்படை அதிகாரியாக வேண்டுமென ஆசை சுனிதாவுக்கு ஏற்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து கடின முயற்சியுடன் கடற்படை, விமானப்படை விமானியானார். சுனிதாவுக்குப் போர் விமானங்கள் ஓட்டுவதே இலட்சியமாக இருந்தது. ஆனால், அவருக்குக் கிடைத்ததோ கடற்படை ஹெலிகொப்டர்தான். 1989ஆம் ஆண்டு, அவர் வேர்ஜீனியாவின் நோர்போக்கிலுள்ள ஹெலிகொப்டர் கொம்பாட் சப்போர்ட் ஸ்குவாட்ரான் 8இல் பணியாற்றினார். துருப்புகளைக் கொண்டுசெல்வதிலும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதிலும் முக்கிய பங்கு வகித்தார்.

அவரது தலைமைத்துவத் திறன்கள், அர்ப்பணிப்பு ஆகியவை சுனிதாவை விண்வெளி வீரராக்கியது. இந்நிலையில், 1998ஆம் ஆண்டு நாசாவால் விண்வெளி வீரராக சுனிதா தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜோன்சன் விண்வெளி மையத்திலும் ரஷ்யாவின் மொஸ்கோவிலும் பயிற்சி பெற்றார்.

### முதல் விண் பயணம்

அதன்படி 2006ஆம் ஆண்டு டிசம்பர் 09இல் நாசாவின் பணிக்குழு 14இன் உறுப்பினராக விண்வெளிக்குச் சென்று விண்வெளி நிலையத்தில் சேர்ந்தார். பூமிக்குத் திரும்பாமல் அடுத்த பணிக்குழு 15இலும் நீடித்து பங்கெடுத்து மொத்தம் 192 நாட்கள் விண்வெளியில் பணியாற்றி 2007 ஜூன் 22இல் பூமிக்குத் திரும்பினார்.

இரண்டாவது தடவையாக மறுபடி பணிக்குழு 32இன் பகுதியாக 2012 ஜூலை 15இல் விண்வெளி நிலையத்துக்குப் பயணம் செய்த சுனிதா, மறுபடி அடுத்த பணிக்குழு 33இலும் இணைந்து 2012 நவம்பர் 19 அன்று பூமிக்குத் திரும்பினார்.

இதன் பின்னர் போயிங், ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனங்களுடன் இணைந்து அவர்களின் விண்கலங்களை ஓட்டும் பயிற்சியைப் பெற்றார். இதன் நீட்சியாகத்தான் ஸ்டார்லைனர் விண்கலத்தைச் சோதனையோட்டம் செய்ய மூன்றாவது தடவையாக 59 வயதான சுனிதா கடந்த ஜூன் 2024இல் விண்வெளிக்குச் சென்றார்.



சுனிதா வில்லியம்ஸ் - புர்ச் வில்மோர்

### நான்கு விண்கலங்களில் பயண சாதனை

இதுவரை விண்வெளி வீரர், வீராங்கனைகள் அதிகபட்சமாக இரண்டு வெவ்வேறு விண்கலங்களில் மட்டுமே பயணம் செய்துள்ளனர். ஆனால், சுனிதா வில்லியம்ஸ் ஸ்பேஸ் ஷட்டில், சோயூஸ், போயிங் ஸ்டார்லைனர், ஸ்பேஸ்எக்ஸ் க்ரூ டிராகன் ஆகிய நான்கு வெவ்வேறு விண்கலங்களில் பயணம் செய்த அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்.

### விண்வெளியில் என்ன செய்தார் சுனிதா?

★ எதிர்காலத்தில் நீண்ட நாட்கள் விண்வெளிப் பயணம் மேற்கொண்டால் விண்வெளியில் பயிர்த்தொழில் செய்து உணவை உற்பத்திசெய்ய முடியுமா என ஆய்வுசெய்ய லெட்யுஸ் எனப்படும் கீரைச் செடியை வளர்த்து ஈர்ப்பு விசையின் இழுவையற்ற விண்வெளியில் தாவர வளர்ச்சி குறித்து ஆய்வுகளை மேற்கொண்டார்.

★ ஆவி பறக்கும் சூடான உணவிலிருந்தும் வியர்வை மூலம் ஆவியாகும் நீர் விண்வெளி நிலையத்தின் காற்றில் கலந்துவிடும். இந்த நீரைப் பிரித்து எடுக்கும் புதிய கருவியொன்றை வடிவமைத்துள்ளனர். இந்தக் கருவியைப் பரிசோதனை செய்துபார்த்தார்.

★ ரோடியம் உயிரி உற்பத்திப் பரிசோதனையில் விண்வெளி நிலையத்தில் ஈஸ்ட் போன்ற பாக்றீரியா வளர்ச்சி குறித்த ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இதில் பங்கு கொண்டார். விண்வெளி நிலையத்தின் உள்ளே சுவர்களில் வாழும் நுண்ணுயிரிகளை இனங்கண்டு சோதனை செய்தார்.

★ பதப்படுத்தி நீண்ட நாட்கள் வைக்கப்பட்ட உணவில் ஊட்டம் குறையும். ஈஸ்ட் போன்ற நுண்ணுயிரிகளைப் பயன்படுத்தி உணவிலுள்ள விற்றமின்கள் போன்ற ஊட்டச்சத்துகளைத் தயாரிக்கும் உயிரித் தொழில்நுட்ப ஆய்வுகளில் ஈடுபட்டார்.

★ இப்படிச் சிறிதும் பெரிதுமாக 150இற்கும் மேற்பட்ட அறிவியல் தொழில்நுட்பப் பரிசோதனைகளில் சுமார் 900 மணிநேர ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கிறார்.

அதுமட்டுமன்றி சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் இருவரும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் பல்வேறு ஆராய்ச்சி பணிகளுக்கு உதவியுள்ளனர். விண்வெளி ஆய்வு மையத்தை பராமரிப்பதிலும் சக பணியாளர்களுக்கு அன்றாட நடவடிக்கைகளில் உதவுவதிலும் தொழில்நுட்ப சிக்கல்களைச் சரிசெய்வதிலும் முக்கிய பங்காற்றினர்.

மொத்தம் 900 மணிநேரம் ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளார். இதில் 150 பரிசோதனைகளைச் செய்துள்ளார். ஜனவரி நடுப்பகுதியில் சக விண்வெளி வீரர் நிக் ஹேக்குடன் சுனிதான வில்லியம்ஸ் பழுதுபார்க்கும் பணிக்காக விண்வெளி நிலையத்தைவிட்டு வெளியே சென்றார். அதே மாதத்தின் இறுதியில் சுனிதாவும் வில்மோரும் இணைந்து விண்வெளி நடையை மேற்கொண்டனர்.

அதுமட்டுமன்றி ஈர்ப்பு விசையே இல்லாத விண்வெளியில் எதிர்பாராதவிதமாக நீண்ட காலம் தங்க வேண்டிய சூழல் ஏற்பட்டதால், அதற்காக உடல் ரீதியாக தயார்படுத்துவதற்கான விண்வெளி உடற்பயிற்சிலும் தினமும் சுனிதா ஈடுபட்டார்.


### 4,576 தடவைகள் பூமியைச் சுற்றிய சுனிதா

விண்வெளியில் சுனிதா தங்கியிருந்த 286 நாட்களில் பூமியை 4,576 தடவைகள் சுற்றி வந்துள்ளார். சர்வதேச விண்வெளி நிலையம் ஒரு நாளில் 16 தடவைகள் பூமியைச் சுற்றி வரும். இதனால் ஒவ்வொரு ஒன்றரை மணி நேரத்துக்கு ஒரு தடவை சூரிய உதயம் அல்லது சூரிய அஸ்தமனத்தைப் பார்த்துள்ளார். ஸ்ப்ளாஷ்டவுன் நேரத்தில் மட்டுமே 195 மில்லியன் கி.மீ. பயணம் செய்துள்ளார். மேலும், 8 நாட்களில் முடிக்கவேண்டிய பணியை 9 மாதமாக நீடிக்கவேண்டிய சவாலை நாசா வெற்றிகரமாக நிறைவுசெய்திருக்கிறது. இதற்காக சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் தங்கள் உயிரையே பணயம் வைத்து மகத்தான முன்னுதாரணமாகியுள்ளனர்.

உலகின் ஒவ்வொரு கடைக்கோடியிலும் எத்தனையோ பெண்களின் கனவுகள், ஆசைகள் வன்கொடுமை எனும் அரக்கனால் ஆட்கொள்ளப்பட்டு அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில்தான் இன்று சுனிதா என்ற பெண்ணின் விண் கனவும் நிறைவேறியுள்ளது.

"பூமி மேல் பறக்கவேண்டும்" என்ற தனது சிறுவயது ஆசையை இன்று நிறைவுசெய்துள்ளார் சுனிதா என்ற 'விண் தேவதை'. இது நாளைய சுனித்தாக்களின் கனவுகளுக்கு நல்லதொரு அடித்தளமாகட்டும்.

◙ கே.சுபானி





# சர்வதேச நாணய நிதியமின்றி பொருளாதார ஸ்திரத்தன்மையா?

இம்தியாஸ் ஹுசன்

இலங்கையின் பொருளாதார நெருக்கடி நாட்டைப் பல தடவைகள் சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) உதவி பெற நிர்ப்பந்தித்துள்ளது. IMF கடன்கள் உடனடி நிவாரணம் அளித்தாலும், அவை பெரும்பாலும் கடுமையான நிபந்தனைகளுடன் காணப்படுகின்றன. அவை சிக்கன நடவடிக்கைகளை ஆழப்படுத்தி சாதாரண குடிமக்களிடையே துன்பத்தை ஏற்படுத்துகின்றன.

கேள்வி என்னவென்றால் IMFஇன் உதவியின்றி இலங்கை பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைய முடியுமா? நிலையான வளர்ச்சியை உறுதிசெய்யும் அதேவேளை, இலங்கை பொருளாதார இறையாண்மையை மீட்டெடுக்க உதவும் சாத்தியமான மாற்றுகள் மற்றும் மூலோபாய சீர்திருத்தங்களை இந்தக் கட்டுரை ஆராய்கிறது.

**இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் சர்வதேச நாணய நிதியத்தின் பங்கு**

வரலாற்று ரீதியாக இலங்கை நிதி நெருக்கடியின்போது சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடியுள்ளது. அரசாங்க செலவினங்களைக் குறைத்தல், வரிகளை அதிகரித்தல், மானியங்களைக் குறைத்தல் மற்றும் கடனை மறுசீரமைத்தல் ஆகியவை சர்வதேச நாணய நிதியத்தின் வழக்கமான பரிந்துரைகளாகும். இவை குறுகிய காலத்தில் பொருளாதாரத்தை நிலைப்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், இந்த நடவடிக்கைகள் பெரும்பாலும் பணவீக்கம், குறைக்கப்பட்ட சமூக நலன் மற்றும் தொழிலாள வர்க்கத்தினருக்குப் பொருளாதார கஷ்டங்களை அனுபவிக்க வழிவகுக்கின்றன. சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகள் நீண்டகால வளர்ச்சியை விட நிதி ஒழுக்கத்துக்கு முன்னுரிமை அளிப்பதாக விமர்சகர்கள் வாதிடுகின்றனர். இது இலங்கையை வெளிப்புற அதிர்ச்சிகளுக்கு மேலும் பாதிக்கப்படக்கூடியதாக ஆக்குகிறது.

**சர்வதேச நாணய நிதியத்தை சார்ந்திருப்பதன் குறைபாடுகள்**

***பொருளாதார இறையாண்மை இழப்பு –*** சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் அரசாங்கத்தின் சுதந்திரமான பொருளாதாரக் கொள்கைகளை செயற்படுத்தும் திறனைக் கட்டுப்படுத்துகின்றன.

***சிக்கன நடவடிக்கைகள் ஏழைகளைப் பாதிக்கின்றன*** – பொது சேவைகளைக் குறைப்பதும் வரிகளை அதிகரிப்பதும் குறைந்த வருமானம் உள்ளவர்களைப் பாதிக்கிறது.

***கடன் பொறி சுழற்சி –*** பொருளாதார ஸ்திரமின்மையின் மூல காரணங்களை ஆராயாமல் அல்லது கண்டறியாமல் சர்வதேச நாணய நிதிய கடன்களைச் சார்ந்திருப்பது அடிக்கடி கடன் வாங்குவதற்கு வழிவகுக்கிறது.

***வெளிநாட்டு முதலீட்டாளர் சந்தேகம்–*** சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்புகளுக்கான நிலையான தேவை பலவீனமான பொருளாதார அடிப்படைகளைக் குறிக்கிறது. இது வெளிநாட்டு முதலீடுகளை ஊக்கப்படுத்துகிறது.

**பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான மாற்று உத்திகளை ஆராய்தல்**

சர்வதேச நாணய நிதியத்தின் சார்பிலிருந்து விடுபட இலங்கை உள்நாட்டுப் பொருளாதார சீர்திருத்தங்கள், வர்த்தக பல்வகைப்படுத்தல், பிராந்திய கூட்டாண்மைகள் மற்றும் மூலோபாய முதலீடுகள் உள்ளிட்ட பல முனைப்பு அணுகுமுறைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**கவனம் செலுத்தவேண்டிய சில முக்கிய பகுதிகள்:**

***உள்நாட்டு வருவாய் ஆதாரங்களை வலுப்படுத்துதல்***

இலங்கை பொருளாதார ஸ்திரமின்மையை எதிர்கொள்வதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று அதன் பலவீனமான வருவாய் சேகரிப்பாகும். ஏழைகளின் மீது வரிச்சுமையைக் குறைக்கும் அதேவேளை, அதிக இணக்கத்தை உறுதிசெய்யும் பயனுள்ள வரிவிதிப்புக் கொள்கைகளை அரசாங்கம் செயற்படுத்தவேண்டும்.

சில நடவடிக்கைகள் பின்வருமாறு:

- ***வளர்வீத வரிவிதிப்பு:*** நடுத்தர வர்க்கத்தினருக்குச் சுமை ஏற்படுத்துவதற்குப் பதிலாக உயர் வருமானம் பெறுவோர் மற்றும் பெரிய நிறுவனங்களுக்கு வரிகளை அதிகரித்தல்.
- ***வரி வசூல் திறனை மேம்படுத்துதல்:*** வரி ஏய்ப்பு மற்றும் ஊழலைக் குறைப்பதற்காக வரி வசூல் முறைகளை இலத்திரனியல் மயமாக்குதல்.
- ***வரி தளத்தை விரிவுபடுத்துதல்:*** எளிமைப்படுத்தப்பட்ட வரிப் பதிவு செயல்முறைகள் மூலம் முறைசாரா துறைகளை வரி வலைக்குள் கொண்டுவருதல்.

**ஏற்றுமதி சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல்:**

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்காக ஏற்றுமதியை அதிகரிப்பதைச் சார்ந்துள்ளது.

நாடு பின்வருவனவற்றைச் செய்யவேண்டும்:

- ***ஏற்றுமதியைப் பல்வகைப்படுத்துதல்:*** தேயிலை, இறப்பர் மற்றும் ஆடைகள் போன்ற பாரம்பரிய ஏற்றுமதிகளுக்கப்பால் தகவல் தொழில்நுட்ப சேவைகள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் மருந்துகள் போன்ற உயர் மதிப்புள்ள தொழில்களில் முதலீடு செய்தல்.
- ***வர்த்தக ஒப்பந்தங்களை வலுப்படுத்துதல்:*** வளர்ந்துவரும் சந்தைகளுடன் வர்த்தக கூட்டாண்மைகளை விரிவுபடுத்துதல், மேற்கத்தேய பொருளாதாரங்களைச் சார்ந்திருப்பதைக் குறைத்தல்.
- ***உற்பத்தித் துறையை மேம்படுத்துதல்:*** இறக்குமதியை மாற்றுவதற்கும் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கும் உள்ளூர்த் தொழில்களை உருவாக்குதல், வர்த்தகப் பற்றாக்குறையைக் குறைத்தல்.

**பிராந்திய கூட்டாண்மைகளை மேம்படுத்துதல்:**

மாற்று நிதி மற்றும் வர்த்தக வாய்ப்புகளைப் பெறுவதற்கு இந்தியா, சீனா மற்றும் ஆசியான் நாடுகள் போன்ற பிராந்திய சக்திகளுடன் தனது பொருளாதார உறவுகளை இலங்கை வலுப்படுத்த வேண்டும்.

- ***சீனாவின் பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சி :*** நீண்டகால பொருளாதார நன்மைகளை உறுதிசெய்வதற்காக உட்கட்டமைப்பு திட்டங்களில் இலங்கை சிறந்த விதிமுறைகளை நம்பகமான, வெளிப்படைத் தன்மையுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தலாம்.
- ***இந்தியாவின் பொருளாதார கூட்டு:*** தொழில்நுட்பம் மற்றும் எரிசக்தித் துறைகளில் கூட்டு முயற்சிகள் உட்பட இந்தியாவுடனான வர்த்தக உறவுகளை மேம்படுத்துதல்.
- ***ஆசியான் ஒருங்கிணைப்பு:*** பெரிய சந்தைகளை அணுகவும் ஏற்றுமதியை அதிகரிக்கவும் பிராந்திய வர்த்தக ஒப்பந்தங்களில் ஈடுபடலாம்.

**நேரடி வெளிநாட்டு முதலீட்டை ஈர்த்தல் :**

முக்கிய துறைகளில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பது சர்வதேச நாணய நிதியத்தின் கடன்களுக்கு நிலையான மாற்றாக அமையும்.

- ***வணிகம் செய்வதை எளிதாக்குதல்:*** முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக விதிமுறைகளை எளிதாக்குதல் மற்றும் அதிகாரத்துவத்தைக் குறைத்தல்.
- ***பொது-தனியார் கூட்டாண்மைகள்:*** உட்கட்டமைப்பு, எரிசக்தி மற்றும் தொழில்நுட்பத் திட்டங்களில் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல்.
- ***சிறப்பு பொருளாதார மண்டலங்கள்:*** சர்வதேச நிறுவனங்களை ஈர்ப்பதற்காக வரிச்சலுகைகளுடன் கூடிய மண்டலங்களை நிறுவுதல்.

**விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துதல்**

உணவு இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைத்து விவசாயத்தை வலுப்படுத்துவது பொருளாதார மீள்திறனை மேம்படுத்தும்.

- ***விவசாயத்தை நவீனமயமாக்குதல்:*** உற்பத்தியை அதிகரிக்க நவீன விவசாய தொழில்நுட்பங்களைச் செயற்படுத்துதல்.
- ***வேளாண் தொழில்களை ஊக்குவித்தல்:*** ஏற்றுமதி சந்தைகளுக்கான மதிப்புக் கூட்டப்பட்ட உணவு பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவித்தல்.
- ***உள்ளூர் விவசாயிகளுக்கு ஆதரவு:*** உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க மானியங்கள் மற்றும் நிதி உதவி வழங்குதல்.

**சுற்றுலாத் துறையை மேம்படுத்துதல்**

சுற்றுலாத்துறை இலங்கையின் முக்கிய அந்நியச் செலாவணி வருவாய் ஈட்டும் துறையாகும். மேலும் அதன் புத்துயிர் பொருளாதார ஸ்திரத்தன்மைக்குக் கணிசமாக உதவும்.

- ***சூழல் சுற்றுலாவை ஊக்குவித்தல்:*** நிலையான சுற்றுலா மாதிரிகள் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அதேவேளை, அதிக மதிப்புள்ள பார்வையாளர்களை ஈர்க்க முடியும்.
- ***உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்:*** சிறந்த இணைப்பு மற்றும் வசதிகள் சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தை மேம்படுத்தும்.
- ***நிறுவன அடையாளத்தை வலுப்படுத்துதல்:*** மூலோபாய விளம்பர பிரசாரங்கள் மூலம் இலங்கையை ஒரு சிறந்த உலகளாவிய வணிகத் தளமாகச் சந்தைப்படுத்துதல்.

**புலம்பெயர் தொழிலாளர்களின் பணப்பரிமாற்றத்தை மிகவும் திறம்பட பயன்படுத்துதல்:**

இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் பணப்பரிமாற்றம் அந்நியச் செலாவணியின் ஒரு முக்கியமான ஆதாரமாகும்.

அரசாங்கம் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- ***முறையான பணப்பரிமாற்ற வழிகளை ஊக்குவித்தல்:*** அதிகாரபூர்வ பணப்பரிமாற்ற வரவுகளை அதிகரிக்க பரிவர்த்தனை கட்டணங்களைக் குறைத்தல்.
- ***வெளிநாட்டினருக்கான முதலீட்டு ஊக்கத்தொகைகளை வழங்குதல்:*** வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை தொழிலாளர்களை சொத்து வணிகம் (Real estate), புதிய தொழில் முனைவு மற்றும் அரசு பத்திரங்களில் முதலீடு செய்ய ஊக்குவித்தல்.

**தொழில்மயமாக்கல் மூலம் இறக்குமதிச் சார்பைக் குறைத்தல்**

உள்நாட்டுத் தொழில்களை மேம்படுத்துவதன் மூலம் இறக்குமதி மாற்றீட்டில் இலங்கை கவனம் செலுத்த வேண்டும்.

- ***உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்தல்:*** உள்நாட்டில் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழில்களை வளர்ப்பதன் மூலம் இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைத்தல்.
- ***புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மேம்படுத்துதல்:*** எண்ணெய் இறக்குமதி செலவுகள் மற்றும் எரிசக்தி சார்புநிலையை குறைக்க சூரிய, காற்று மற்றும் நீர் மின்சக்தி ஆகியவற்றில் முதலீடு செய்தல்.
- ***சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ஆதரவு:*** உள்ளூர் உற்பத்தித் திறன்களை அதிகரிக்க நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

**நாணயத்தை நிலைப்படுத்த நாணயக் கொள்கை**

***சீர்திருத்தங்கள்***

பொருளாதார சுதந்திரத்துக்கு நிலையான நாணயம் இன்றியமையாதது. அரசாங்கம் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- ***வட்டி வீத மாற்றங்கள் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல்:*** மத்திய வங்கி பண விநியோகத்தைத் திறமையாக ஒழுங்குபடுத்த வேண்டும்.
- ***அந்நியச் செலாவணி இருப்புகளை பல்வகைப்படுத்துதல்:*** பல நாணயங்களில் இருப்புகளை வைத்திருப்பதன் மூலம் அமெரிக்க டொலரைச் சார்ந்திருப்பதைக் குறைத்தல்.
- ***இலத்திரனியல் கட்டணங்களை ஊக்குவித்தல்:*** மூலதன வெளியேற்றத்தைக் குறைக்கவும் நிதி வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கவும் இலத்திரனியல் பரிவர்த்தனைகளை ஊக்குவித்தல்.

**சர்வதேச நாணய நிதியத்தின் கடன்களைத் தவிர்ப்பதிலுள்ள சவால்கள் மற்றும் அபாயங்கள்**

சிக்கன நடவடிக்கைகள், இறையாண்மை மற்றும் நீண்டகால பொருளாதார சார்புநிலை பற்றிய கவலைகள் காரணமாக பல நாடுகள் சர்வதேச நாணய நிதியம் (IMF) கடன்களைத் தவிர்க்க விரும்புகின்றன. இருப்பினும், IMF உதவியைத் தவிர்ப்பது குறிப்பிடத்தக்க சவால்கள் மற்றும் அபாயங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது.

**IMF கடன்களைச் சார்ந்திருக்க விரும்பாத நாடுகள் எதிர்கொள்ளும் முக்கியமான சிக்கல்கள்**

***குறுகிய கால பணப்புழக்க சிக்கல்கள்***

IMF கடன்கள் பெரும்பாலும் கட்டண சமநிலை நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நாடுகளுக்கு நிதி பாதுகாப்பு வலையாகச் செயற்படுகின்றன. இந்த கடன்களைத் தவிர்ப்பது, குறிப்பாக, பலவீனமான அந்நியச் செலாவணி கையிருப்புள்ள நாடுகளில் கடுமையான குறுகிய கால பணப்புழக்க சிக்கல்களுக்கு வழிவகுக்கும்.

**முக்கிய பணப்புழக்க சவால்கள்**

***அந்நியச் செலாவணி பற்றாக்குறை:***

குறைந்து வரும் அந்நியச் செலாவணி கையிருப்புள்ள நாடுகள் உணவு, எரிபொருள் மற்றும் மருந்துகள் போன்ற அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு பணம் செலுத்தப் போராடுகின்றன. IMF உதவி இல்லாமல், அவர்கள் மூலதனக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டியிருக்கும். இது வர்த்தகம் மற்றும் வணிக நடவடிக்கைகளை சீர்குலைக்கும்.

***அதிகரிக்கும் வெளிப்புற கடன் சுமைகள்:***

IMF கடன்களைத் தவிர்க்கும் நாடுகள் இறையாண்மைப் பத்திரங்களை வெளியிடுவது அல்லது தனியார் கடன் வழங்குபவர்களிடமிருந்து கடன் வாங்குவது போன்ற மாற்று கடன் விருப்பங்களுக்கு மாறலாம். இது பெரும்பாலும் அதிக வட்டி வீதத்தில் கடன்களைப் பெறவேண்டிய நிலைக்குத் தள்ளும். இது இயல்புநிலை அபாயத்தை அதிகரிக்கிறது மற்றும் பொருளாதார நிலையற்ற தன்மையை மோசமாக்குகிறது.

***அதிக பணவீக்கம் மற்றும் நாணய மதிப்பு குறைதல்:***

IMFஇன் நிதி ஆதரவு இல்லாமல், அரசாங்கங்கள் அதிகப்படியான பணத்தை அச்சிட வேண்டியிருக்கும். இது பணவீக்கம் மற்றும் நாணய மதிப்பு குறைவதற்கு வழிவகுக்கும். பலவீனமான நாணயம், இறக்குமதிகளை அதிக விலைக்கு மாற்றுகிறது. இது பொருளாதாரக் கஷ்டங்களை மோசமாக்குகிறது.

***கடன் சேவை செய்வதில் சிரமம்:***

கணிசமான வெளிப்புற கடன் உள்ள நாடுகள் IMF பணப்புழக்க ஆதரவில்லாமல் திருப்பிச் செலுத்தப் போராடலாம். இது இறையாண்மை இயல்புநிலை அபாயத்தை அதிகரிக்கிறது, இது மேலும் நிதி கொந்தளிப்பை ஏற்படுத்தும்.

***எடுத்துக்காட்டுகள்:***

இலங்கை (2022) IMF உதவியை நாடுவதைத் தாமதப்படுத்தியபோது கடுமையான அந்நியச் செலாவணி நெருக்கடியை எதிர்கொண்டது. இது எரிபொருள் பற்றாக்குறை, மின்வெட்டு மற்றும் 50%ஐ தாண்டிய பணவீக்கத்துக்கு வழிவகுத்தது.

ஆர்ஜென்ரீனா (2019-2022) IMF கடன்கள் இல்லாமல் அதன் பொருளாதாரத்தை நிர்வகிக்க முயன்றது. இதன் விளைவாக மூலதன வெளியேற்றம் மற்றும் 100% ஐ தாண்டிய பணவீக்கம் ஏற்பட்டது.

***முதலீட்டாளர் நம்பிக்கை***

IMF திட்டங்களைத் தவிர்ப்பது முதலீட்டாளர் நம்பிக்கையை அசைக்கலாம். இது வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI) குறைதல், மூலதன வெளியேற்றம் மற்றும் கடன் வாங்கும் செலவுகள் அதிகரிப்பதற்கு வழிவகுக்கும்.

**முதலீட்டாளர் நம்பிக்கைக்கு முக்கிய ஆபத்துகள்**

***பொருளாதார நிலையற்ற தன்மை பற்றிய கருத்து:***

IMF ஒரு நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஸ்திரத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை வழங்குகிறது. அதன் ஆதரவில்லாமல், முதலீட்டாளர்கள் பொருளாதாரத்தை அதிக ஆபத்துள்ளதாகக் காணலாம்.இது பங்குச் சந்தை வீழ்ச்சி மற்றும் FDI குறைவதற்கு வழிவகுக்கும்.

***கடன் மதிப்பீடு குறைதல்:***

மூடிஸ் (Moody's) மற்றும் ஸ்டாண்டர்ட் & புவர்ஸ் (Standard & Poor's) போன்ற மதிப்பீட்டு நிறுவனங்கள் ஒரு நாட்டின் கடன் தகுதியை மதிப்பிடுகின்றன. IMF கடன்களைத் தவிர்த்து, உறுதியான பொருளாதாரக் கொள்கைகளைச் செயற்படுத்தத் தவறினால், நாடுகள் பெரும்பாலும் கடன் மதிப்பீடு குறைவை எதிர்கொள்கின்றன. இது கடன் வாங்குவதைப் பாதிக்கின்றது.

***கடன்களுக்கான அதிக வட்டி வீதங்கள்:***

IMF ஆதரவு இல்லாத நாடுகளுக்கு சர்வதேச கடன் வழங்குபவர்கள் அதிக வட்டி வீதங்களை வசூலிக்கிறார்கள். ஏனெனில், அவை ஆபத்தான கடன் வாங்குபவர்களாகக் கருதப்படுகின்றன. இது கடன் சேவை செலவுகளை அதிகரிக்கிறது மற்றும் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புகளைக் கட்டுப்படுத்துகிறது.

***மூலதன வெளியேற்றம்:***

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் நம்பிக்கையை இழந்தால், அவர்கள் தங்கள் முதலீடுகளைத் திரும்பப் பெறுகிறார்கள். இது விரைவான நாணய மதிப்பு குறைதல் மற்றும் நிதி நிலையற்ற தன்மைக்கு வழிவகுக்கிறது.

***எடுத்துக்காட்டுகள்:***

கானா (2015-2023) ஆரம்பத்தில் IMF உதவியைத் தவிர்த்தது. ஆனால், பின்னர் முதலீட்டாளர் பீதி மற்றும் மூலதன வெளியேற்றத்தை எதிர்கொண்டது, இது பிணை எடுப்புக்காக IMFக்குத் திரும்பவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது.

துருக்கி (2018-2022) IMF ஈடுபாட்டை எதிர்த்தது, ஆனால், நிலையற்ற பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக முதலீட்டாளர் நம்பிக்கை இழந்ததால் அதன் நாணயம் வீழ்ச்சியடைந்தது.

**கட்டமைப்புச் சீர்திருத்தங்களைச் செயற்படுத்துவதிலுள்ள சவால்கள்**

***மெதுவான கொள்கை அமுலாக்கம்:***

நிதிப் பற்றாக்குறையைக் குறைத்தல், வரி வசூலை மேம்படுத்துதல் மற்றும் அரசாங்க செலவினங்களைக் குறைத்தல் போன்ற பொருளாதாரச் சீர்திருத்தங்களை செயற்படுத்த காலம் எடுக்கும். IMF அழுத்தம் இல்லாமல், அரசியல் தாமதங்கள் பெரும்பாலும் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கும்.

IMF கடன்களைத் தவிர்க்க முயற்சிக்கும் அரசாங்கங்கள் பெரும்பாலும் மானிய வெட்டுகள் மற்றும் வரி உயர்வுகளைப் போன்ற கடுமையான பொருளாதார நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டும். இது வெகுஜன போராட்டங்கள் மற்றும் அரசியல் நிலையற்ற தன்மைக்கு வழிவகுக்கும்.

***தொழில்நுட்ப உதவி இல்லாமை:***

அரசாங்கங்கள் பயனுள்ள பொருளாதாரத் திட்டங்களை வடிவமைக்க உதவும் தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் கொள்கை பரிந்துரைகளை IMF வழங்குகிறது. இந்த ஆதரவில்லாமல், நாடுகள் உறுதியான பொருளாதார உத்திகளை உருவாக்கவும் செயற்படுத்தவும் போராடலாம்.

***நிச்சயமற்ற பொருளாதார மீட்பு:***

கட்டமைப்பு சீர்திருத்தங்கள் இருந்தபோதிலும், பொருளாதாரங்கள் ஒரே இரவில் மீட்கப்படுவதில்லை. IMF நிதியுதவி இல்லாத நிலையில், சீர்திருத்தங்கள் நேர்மறையான முடிவுகளைத் தருவதற்கு முன்பு நாடுகள் நீண்டகால கஷ்டங்களைத் தாங்க வேண்டும்.

***எடுத்துக்காட்டுகள்:***

பாகிஸ்தான் (2019-2023) கட்டமைப்பு சீர்திருத்தங்களைச் செயற்படுத்தும்போது IMF ஆதரவை நாடுவதை தாமதப்படுத்தியது. இது நீண்ட கால பொருளாதாரப் பின்னடைவு மற்றும் மெதுவான மீட்புக்கு வழிவகுத்தது.

வெனிசுலா (2014-இன்று வரை) IMF ஈடுபாட்டை மறுத்தது. இது பொருளாதார வீழ்ச்சி, அதிவேக பணவீக்கம் மற்றும் மனிதாபிமான நெருக்கடிகளுக்கு வழிவகுத்தது.

ஒட்டுமொத்தமாக, IMF நெருக்கடியான காலங்களில் முக்கியமான நிதி உதவியை வழங்கினாலும் அதன் நீண்ட கால தாக்கம் பெரும்பாலும் சவாலாகவே காணப்படுகிறது.

பொருளாதார இறையாண்மையையும், நிலையான வளர்ச்சியையும் பராமரிக்க நாடுகள் தங்கள் பொருளாதாரக் கொள்கைகளை வலுப்படுத்துதல், வருவாய் ஆதாரங்களைப் பன்முகப்படுத்துதல் மற்றும் வெளிப்புற கடன்களைச் சார்ந்திருப்பதை குறைப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

இதற்கான ஒரு தெளிவான வரைபடம் IMF இல்லாமல் இலங்கையின் பொருளாதார மீட்பு சாத்தியமாகும். ஆனால், தைரியமான சீர்திருத்தங்கள், வலுவான தலைமை மற்றும் மூலோபாயத் திட்டமிடல் போன்றவை தேவைப்படுகிறது.

அரசாங்கம் உள்நாட்டு வருவாயை அதிகரிப்பது, ஏற்றுமதியை பல்வகைப்படுத்துவது, பிராந்திய ஒத்துழைப்பை வளர்ப்பது மற்றும் முதலீடுகளை ஈர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும். IMF கடன்கள் குறுகிய கால நிவாரணத்தை வழங்கினாலும் சுய-சார்புக்கான நீண்ட கால பார்வை எதிர்கால சந்ததியினருக்கு பொருளாதார இறையாண்மையையும் செழிப்பையும் உறுதி செய்யும். அர்ப்பணிப்பு, ஊழலற்ற நிர்வாகம், அரச செலவீனங்களைக் குறைத்தல் மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் இந்த உத்திகளை செயற்படுத்துவதன் மூலம், IMF சார்பு இல்லாமல் நிலையான பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு இலங்கை வழிவகுக்க முடியும்.



# அஷ்ரப்புடன் ஒரு நடைவண்டிப் பயணம்

அத்தியாயம் 02

கங்கத்தியப்பா

இஸ்லாமிய சோஷலிச முன்னணி கல்முனையில் நடத்திய அந்த பேச்சுப்போட்டியில் அஷ்ரப் சம்பிரதாயபூர்வமாக சபையையும் நடுவர்களையும் விழித்துவிட்டு தனது உரையை ஒரு பீடிகையுடன் தொடர்ந்தார். அன்றைய போட்டியில் அவருக்கான தலைப்பு 'இஸ்லாமும் சோஷலிசமும்' என்று இருந்ததால் அவரின் விவாத ஒழுங்குக்கு அந்தப் பீடிகை அவசியத் தேவையாகவே இருந்தது.

அஷ்ரப்பின் அந்தப் பீடிகை பின்வருமாறு இருந்தது. "நடுவர்களே, இஸ்லாமும் சோஷலிசமும் என்ற இந்தத் தலைப்போடு ஒத்துப்போவதில் எனக்குப் பயங்கரமான முரண்பாடு இருக்கிறது. கருத்தியல் மற்றும் கோட்பாட்டு ரீதியான முரண்பாடான எனது நிலைப்பாட்டோடு உங்களுக்கு அநேகமாக ஒத்துப்போக முடியாமல் இருக்கவும் முடியும். ஆனால், இது குர்ஆனை அடியொற்றிய இஸ்லாமிய தத்துவார்த்த நிலைப்பாடாகும். இதில் சமரசம் காண்பதற்கு நாம் யாருமே இறைவனால் அனுமதிக்கப்படவில்லை. அதேவேளை, எனது பேச்சாற்றலை முதன்மைப்படுத்தி எனக்குப் புள்ளியிட இப்போட்டியை ஏற்பாடுசெய்த இந்த அமைப்பால் நீங்கள் அனுமதிக்கப்படவும் மாட்டீர்கள் என்பதையும் நான் புரிந்து கொள்வேன். நான் அதற்காக வருத்தப்படவும் மாட்டேன்'' எனக்கூறி தனது பேச்சின் முக்கிய புள்ளியை நோக்கி அஷ்ரப் நகர்ந்தார்.

"அன்புள்ள நடுவர்களே, நீங்களும் நமது அப்பாவி மக்களும் ஏற்கனவே இன்றைய அரசியல்வாதிகளால் ஊட்டப்பட்டு இருப்பதுபோல இஸ்லாம் வெறுமனே சோஷலிசமுமல்ல தொரு கோட்பாடல்ல. அதேபோல் சோஷலிசம் எனப்படுவது இஸ்லாமும் அல்ல. இஸ்லாம் வட துருவம் என்றால் சோஷலிசம் தென்துருவம்" என அவரது பேச்சு உச்ச இலக்கை நோக்கி திசை திரும்பியது.

மேலும் அவர் தொடர்கையில்,

"...ஏனெனில், சோஷலிசத்தின் மூலவரான கார்ல் மார்க்ஸ் (Karl Marx) 'மதம் அபின் போன்றது' என்று வெளிப்படையாகவே தன்னுடைய மூலதனம் (Das Kapital – A Critique of Political Economy) நூலில் கூறியுள்ளார்.

"நாம் இஸ்லாமியக் கண்கொண்டு சோஷலிசத்தை நோக்கினாலும் அல்லது ஒரு மார்க்ஸிஸ்டாகத்தானும் நின்று இஸ்லாத்தை நோக்கினாலும் நான் முதலில் கூறிய ஒரே விடைதான் அனைத்துத் தரப்பினரின் அறிவுக்கும் கிடைக்கப்போகின்றது. அவர் 'எல்லா மதங்களும்' (விசேடமாக இஸ்லாம் உட்பட) அபினைப்போன்று மக்களுக்கு மயக்கத்தையே ஏற்படுத்தவல்லது என்று அறுதியிட்டுக் கூறிவிட்டார்.

"ஆனால், நாம் 'அபினின் செயற்பாடு' என்பதற்கு கீழைத்தேயத்துக்கும் மேலைத்தேயத்துக்கும் இடையிலான 'கலாசார ரீதியான பொருள் கோடலை' வைத்து தப்பிக் கொள்ள (escapism) முயல்கின்றோம்.

"இது இஸ்லாத்தின் அடிப்படைத் தூண்களோடு சம்பந்தப்பட்ட விடயம். இதில் யாரும் தங்களுக்கு ஏற்றவகையில் பயன்படுத்திக்கொள்ள அதிகாரம் வழங்கப்படக் கூடாது. அப்படி அதிகாரத்தை அவர்களுக்கு வழங்குவது நம்முடைய மார்க்கத்தோடு நாமே தொடுக்கும் யுத்தமாகும்.

"அத்தோடு மார்க்ஸின் இயக்கவியல் பொருண்முதல் வாதமும் ((Dynamical Materialism) வரலாற்றுப் பொருண்முதல் வாதமும் (Historical Materialism) எல்லா மதங்களையும் நிர்த்தாட்சண்யமாக மறுதலிக்கின்றன. மார்க்ஸ் நாஸ்தீக வாதத்தையே தனது கோட்பாடாகக் கொண்டவர்.

"கார்ல் மார்க்ஸ் ஏனைய மதங்களைப் போன்று இஸ்லாத்திலும் பகுத்தறிவுக்கும் விஞ்ஞானத்துக்கும் புறம்பான 'புராண மயமான' தன்மை உள்ளதாகவே கருதுகின்றார். அவர் தன்னுடைய கருத்தை ஒப்பியல் சமயம் என்ற Comparative Relogion அடிப்படையில் பரிசீலனை செய்யும் நடவடிக்கையில் இறங்கவில்லை. 'மதம் அபின் போன்றது' என்ற அந்தக் கூற்றை விஞ்ஞான அடிப்படையில் கூறாது பொத்தாம் பொதுவாக மட்டுமே அவர் கூறியுள்ளார். comparative religion என்ற எண்ணக்கருவே அவருக்கு அவசியப்படவில்லை.

"ஆனால் இஸ்லாத்தில் comparative religion என்ற அறிவுத்துறை கி.பி.1058ஆம் ஆண்டில் பிறந்த இமாம் புஹாரி அவர்கள் காலத்திலேயே சமூகவியல் பின்புலத்தோடு இஸ்லாமியப் பல்கலைக்கழகங்களில் தோன்றிவிட்டது. பின்னாட்களில் வந்த இமாம் கஸ்ஸாலி முதலியோர் சூபித்துவத்தை விஞ்ஞானத்தின் ஒளியில் நிறுவிக்காட்ட முயன்றனர். ஒரு சமூகவியல் அறிஞரான கார்ல் மார்க்ஸ் ஏனைய மதங்களோடு சமாந்திரத்தன்மையோடுதான் இஸ்லாத்தையும் பார்த்துள்ளார் என்பது நகைப்புக்கு இடமானதாகும்.

"மறுதலையாக இஸ்லாத்தில் சோஷலிசம் உள்ளதாகக் குறிப்பிட்ட ஒரு வசனத்தைத் தானும் அவரின் நூல்களிலிருந்து உங்களால் கோடிட்டுக் காட்ட முடியுமா?

"மேலும், பிரபஞ்சத்தைப் படைத்தது இறைவன் அல்ல என்றும் டார்வினின் உயிரினங்களின் தோற்றம் பற்றிய கூர்ப்புக் கோட்பாடே மனிதனின் தோற்றம் பற்றிய கோட்பாடும் என்றும் முடிந்த முடிபாக மார்க்ஸ் 'விஞ்ஞானமயமாக்கி' கூறுகின்றார். கூர்ப்புக் கொள்கையின் அடிப்படையில்தான் கார்ல் மாக்ஸ் தன்னுடைய மூலதனம் என்ற கோட்பாட்டைக் கட்டமைத்துள்ளார். சமூக அறிவியலுக்கு நாம் ஒருபோதும் விஞ்ஞான கூடத்தின் பரிசோதனைக் குழாய்களைத் தேடக்கூடாது. ஆகவே, இஸ்லாமிய சோஷலிசம் என்பது எத்தனை அபத்தமான கருதுகோள் என்பதை நீங்கள் இதிலிருந்து புரிந்துகொள்வீர்கள்.

"அத்தோடு, இஸ்லாமிய சோஷலிசம் என்ற எண்ணக்கரு 'அகீதா'வுக்கு முற்று முழுவதுமாகவே முரண்பட்டதுமாகும்" என்று பதினைந்து நிமிடங்களில் தன்னுடைய நிலைப்பாட்டை நிறுவிவிட்டு அஷ்ரப் தனது உரையை முடித்து வெளியேறினார்.

தன்னுடைய உரையில் குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றின் ஆதாரங்களையும் மௌலானா மௌதூதி அவர்களின் கூற்றுகளையும் அல்லாமா இக்பாலையும் பல இடங்களில் மேற்கோள் காட்டினார்.

அன்றுவரை நான் அறிந்த பேச்சுப் போட்டிகளில் நடுவர்களை விரல் நீட்டிய ஒரேயொரு பேச்சாக இதுவே அமைந்திருந்தது. அதன் அர்த்தம் புரியாத அன்றைய பிரபல அரசியல்வாதியின் அல்லக்கைகள் கொட்டிலுக்கு வெளியே உறுமிக்கொண்டு திரிந்தனர்.

அந்தப் போட்டி முடிவில் அஷ்ரப்புக்கு மூன்றாம் இடங்கூட கிடைக்கவில்லை என்பதற்காக அவர் வருத்தப்பட்டிருக்க மாட்டார். அத்தனை முதிர்ச்சி அந்த இளைஞனில் பிரகாசித்தது.

அஷ்ரப்புடனான இந்த அறிவார்ந்த அறிமுகத்தின் பின்னர் கல்முனை நகர ஜும்ஆப் பள்ளியில் இடையிடையே நடைபெற்றுவந்த இஸ்லாமிய பயிற்சிமன்றக் கூட்டங்களுக்கும் வருமாறு எனது நண்பரும் அஷ்ரப் அவர்களின் ஒன்றுவிட்ட தம்பியுமான சலீம் எனப்படும் சாதிக் மூலம் எனக்கு செய்தி அனுப்புவார். அப்போது நான் ஆண்டு ஒன்பது. வாப்பாவின் அனுமதியுடன் நானும் சில கூட்டங்களுக்கு எனது சைக்கிளில் போய் வருவதுண்டு.

இவ்வாறு சிறுவயது முதலே குடும்ப அமைப்பிலும் கருத்தியல் அடிப்படையிலும் அஷ்ரப் அவர்களுடனான கவர்ச்சி என்னுள் வேர்விடத் தொடங்கிற்று.

மேலும், பத்திரிகைகளில் அவரின் ஆக்கங்கள் வருகின்றபோது அவற்றைப் பலமுறை வாசித்து மகிழ்வேன். இது எனது நனவிலி மனதில் ஒரு கதாநாயக வழிபாட்டைத் தோற்றுவித்திருக்கவும் கூடும். எனது இந்த நிலைப்பாடானது அறிவார்ந்த நோக்கினால் உருவான மனவெழுச்சியென அறிவுலகம் இனம் கண்டால் அதனை நான் சரி காண முடியும்.

எனது இரண்டாவது ராத்தா தஹிறாவின் திருமணம் நான் நான்காம் வகுப்புப் படிக்கின்றபோது நடைபெற்றது. அப்போது ஆசிரியராகவும் பின்னர் கிராமசேவையாளராகவும் பணிபுரிந்த எம்.எல்.முஹைதீன் பாவா அவர்களே மாப்பிள்ளை. அவர்களின் திருமணம் எங்கள் பழைய வீட்டிலேயே நடைபெற்றது. மாப்பிள்ளை வீட்டாரின் குடும்பம் மேட்டுக்குடி குணங்களைக்கொண்டது. தங்களுடைய பிள்ளைகளை புனித மைக்கல் மற்றும் சிசிலியா கான்வென்ட் ஆகிய கல்லூரிகளுக்கு அனுப்பி படிப்பிப்பவர்கள். அத்தகைய கலாசாரத்தில் வளர்ந்த அவர்கள் தங்களின் திருமண வைபவங்களில் நாதஸ்வரம் வித்துவான்களை வருவித்து இசைக்கும் வழக்கத்தையும் கொண்டிருந்தனர்.

எனது சகோதரியின் திருமணத்திலும் மாப்பிள்ளை வீட்டில் நாதஸ்வர வித்துவான்கள் வரவழைக்கப்பட்டிருந்தனர். மாப்பிள்ளை ஊர்வலத்தில் கூட தவில் மற்றும் நாதஸ்வர வித்துவான்களும் கலந்து கொண்டனர்.

வாப்பாவுக்கு இது பிடிக்காமல் போனாலும் அவர் மணப்பெண்ணின் தந்தை என்பதால் சூழ்நிலைக்கு அவர் 'adopt'ஆகிப் போகவேண்டிய நிலை இருந்தது என்பதைப் பின்னாட்களில் நான் அறிந்துகொண்டேன்.

ஆனால், ஏ.ஏ.ரஹீம் மாஸ்டர் என்ற எனது கடைசி மாமாவின் திருமணத்தின்போதும் தவில் மற்றும் நாதஸ்வர வித்துவான்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அப்போது வாப்பாவின் பூரண அதிருப்தி அங்கே வெளிப்பட்டது. அப்போதே இந்த கலாசார முரண்பாட்டின் உருவு மற்றும் உள்ளடக்கத்தை மேட்டுக்குடிக்கான சமூக அடையாளம் என நான் அறிந்து கொண்டேன்.

1965இல் ஒரு பாராளுமன்றத் தேர்தல் இலங்கையில் நடைபெற்றது. எங்களூர் சம்மாந்துறை அப்போது பொத்துவில் தொகுதியினுள் சேர்க்கப்பட்டிருந்தது. இது அன்றைய அரசியல் அதிகாரத்தில் மிகைத்திருந்த எம்.எஸ்.காரியப்பர் தனது ஆசனத்தை உறுதிப்படுத்த உண்டாக்கிய ஏற்பாடென எனது ஊர் மக்கள் பிரஸ்தாபித்துக்கொள்வர்.

அந்தத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர் எங்களூர் மேட்டுக்குடியைச் சேர்ந்த எம்.ஏ.அப்துல் மஜீத் அவர்களுக்கு போட்டியாக சம்மாந்துறை பட்டினசபையின் முன்னாள் தவிசாளராக இருந்தவரும் பின்னர் சம்மாந்துறை பள்ளிவாசல்களின் பிரதம நம்பிக்கையாளருமான யூ.எம்.சலைமாலெவ்வை ஐ.தே.கவில் போட்டியிட்டார்.

எனது தந்தை எம்.ஏ.அப்துல் மஜீத் எம்.பி. அவர்களுடன் தனிப்பட்ட முறையில் அபிமானம் இருந்ததே தவிர, எத்தகைய முரண்பாடும் அவர்களிடையே இருக்கவில்லை. எனினும், யூ.எம்.சலைமாலெவ்வை அவர்களின் ஆதரவாளராக இருக்கவேண்டிய தர்மசங்கடம் அவருக்கு ஏற்பட்டிருந்தது.

ஏனெனில், அப்போது அவரும் நம்பிக்கையாளர் சபையின் முக்கிய உறுப்பினராக இருந்தார். மேலும் ஐ.தே.கவில் ஒரு கருத்தியல் ரீதியான கவர்ச்சியும் அவருக்கு ஏற்கனவே இருந்துள்ளது. குறித்த சலைமாலெவ்வை அவர்கள் சேர்மன் என்றும் ஆலிமுத்தம்பி என்றும் ஊரவர்களால் அழைக்கப்பட்டார். எங்கள் மாமா யூசுப் வட்டானையின் வட்டார தேர்தல் தோல்விக்கு மஜீத் எம்.பியே காரணம் என்றவொரு கருத்தும் அப்போது நிலவிற்று.

யூ.எம்.சலைமாலெவ்வை என்பவர் தலைவர் அஷ்ரப் அவர்களின் தாய் மாமன். அதாவது, அவரின் உம்மாவின் தமையன். எனவே, அஷ்ரப் தன் தாய்மாமனின் தேர்தல் வேலைகளுக்குத் தவிர்க்க முடியாமல் இழுத்துவிடப்பட்டிருந்தார். இது அழகியல் கலைகளில் நாட்டமுள்ள அந்தக் கம்பீரமான டீன்ஏஜ் இளைஞனுக்கு பேரழகிகளான தனது மச்சிமாரை அடிக்கடி காணும் வாய்ப்பையும் கொடுத்தும் இருக்கலாம்.

எங்கள் வாப்பாவின் அரசியல் நிலைப்பாட்டால் சிலவேளை சலைமாலெவ்வை அவர்களின் கூட்டங்களுக்கு மஹரகம கபூரியா அரபுக் கல்லூரியில் ஓதிக்கொண்டிருந்த எனது காக்கா ஏ.ஸீ.ஏ.எம்.புஹாரி கிராஅத் ஓதுவார். இந்தத் தேர்தல்தான் ஏ.ஸீ.ஏ.எம்.புஹாரி அவர்களையும் அஷ்ரப் அவர்களையும் ஆத்ம நண்பர்களாக்கிற்று.

இருவரும் யூ.எம்.சலைமாலெவ்வையின் வெற்றிக்கு அயராது பாடுபட்டு உழைத்தனர். அஷ்ரப், புஹாரி மற்றும் சலைமாலெவ்வையின் மகன் நிஸார் (GS) ஆகிய மூவரும் சகல வேலைகளிலும் ஒன்றாகப் பயணித்தனர். இருந்தும் சலைமாலெவ்வை என்ற ஐ.தே.க. வேட்பாளர் தோல்வியைத் தழுவினார். தேர்தலின் பின்னரும் அஷ்ரப் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வரத் தொடங்கினார். அவரையும் நாங்கள் காக்கா என்றே அழைப்போம். அவர் அமைச்சராகும் வரை நானும் அவ்வாறே அழைத்தேன்.

அமைச்சரானதும் அவர் அந்த அமைச்சுக் கதிரையில் எவ்வாறு அமர்ந்திருக்கின்றார் என்பதை அழகு பார்க்க ஏ.எல். புள்ளியிடும் வேலைக்காக கொழும்பில் நின்ற நானும் மாலைவேளையில் துறைமுகங்கள் அமைச்சுக்குச் சென்றிருந்தேன்.

அப்போது நீலன் திருச்செல்வம் முதலிய அவரின் நண்பர்கள் வாழ்த்துத் தெரிவிக்க வந்திருந்தனர்.

அத்தனை பாதுகாப்புக் கெடுபிடிக்கு மத்தியில் என்னை அடையாளம் கண்டு உள்ளே அழைத்த தலைவர், நீலன் திருச்செல்வம் ஆகியோருக்கு என்னை அறிமுகப் படுத்தினார். நான் நல்ல கவிஞன் என்றும் மகாகவியின் மகன் சேரனின் நண்பர் என்றும் என்னைப் பெருமையுடன் அறிமுகப்படுத்தினார். அப்போது நான் கல்விக் கல்லூரியின் உப பீடாதிபதியாகக் கடமை புரிந்தேன் என்பதையும் அவர்களுக்கு ஞாபகப்படுத்தினார்.


அப்போது முதன்முதலாக காக்கா என்று விழிப்பதற்குப் பதிலாக "சேர்" என நான் தலைவரை அழைத்தேன். "ஏன் அப்படி என்னை அழைக்கின்றீர்கள். வழக்கம்போல உறவு முறையில் அழைக்கலாமே'' என்றார். நானோ, "You are an executive Minister, the same time I am an academic. As a government servant with accountability. And I am a teacher for future teachers." ஆகவே எனது code ethicsஇன்படி நான் Sir என அழைப்பதே முறை'' என்றேன். அஷ்ரப் பூரித்துப்போய் 'அவரின் வளர்ப்பு அப்படி' என நீலன் முதலிய நண்பர்களிடம் கூறினார்.

காக்கா புஹாரி மௌலவி கபூரிய்யா, அரபுக் கல்லூரியின் அதிபர் உமர் ஹஸ்ரத் அவர்களின் சிந்தனைகளின் பிரயோக உதாரணமாகத் திகழ்ந்தார். முற்போக்காளவராகவும் சமூக அரசியல் அக்கறை உள்ளவராகவும் மார்க்கத்தை விஞ்ஞான அடிப்படையில் பார்க்கத் தெரிந்தவராகவும் இனங்களின் கலாசார பொழுதுபோக்குக்கும் இஸ்லாமியக் கருத்தியலுக்கும் இடையிலுள்ள துல்லியமான வேறுபாடுகளை அச்சொட்டாகப் புரிந்தவராகவும் காணப்பட்டார். அதனால் அக்காலத்து இஸ்லாமிய இளைஞர்களின் கருத்தியல் நம்பிக்கை நட்சத்திரமாகவும் அவர் திகழ்ந்தார்.

அஷ்ரப் அவர்களின் காதல் சம்பந்தமாக திருமணத்துக்கு முன்னரும் பின்னரும் அவர்களின் குடும்ப விவகாரங்களில் எனது காக்கா ஏ.ஸீ.ஏ.எம்.புஹாரி அவர்களுக்கு முக்கிய பங்குகள் இருந்தன. அவரின் திருமணத்துக்கு கிழக்கிலிருந்து சென்ற ஒருசிலருள் காக்காவும் கல்முனை ஸ்கௌட் முஸ்தபாவும் முக்கியமாக அடங்கியிருந்தனர். பிற்காலங்களில் அஷ்ரப்பின் வாப்பாவை சமாதானப்படுத்துவதில் காக்காவினதும் ஸ்கௌட் முஸ்தபாவினதும் பங்களிப்புகள் அளப்பரியன. அத்தோடு சிலர் மேற்கிலிருந்தும் திருமணத்துக்கு வருகை தந்தனர். அவர்களில் பலர் கிழக்கைச் சேர்ந்த இளைஞர்கள். திருமணத்துக்கான அழைப்புக்கடிதம் எனக்கும் அஷ்ரப்பின் கையெழுத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு வந்திருந்தது. அதனை நான் விடிவெள்ளியில் எழுதிய கட்டுரைத் தொடரில் இணைத்திருந்தேன்.

என் இளமைக்கால வாழ்வில் 1975ஆம் ஆண்டு முக்கியமானதும் பரபரப்பானதுமான ஒரு காலகட்டமாகும். பல்கலைக்கழகக் கனவுடன் நான் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்காக இறுதி ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தேன். அந்தப் பரபரப்பான ஆண்டின் முற்பகுதியில் ஒரு நாளில் முக்கியமான சம்பவமொன்று நிகழ்ந்தது.

# பேரீச்சம்பழத்தின் மகிமை



அரபு நாடுகள் என்றால் நினைவுக்கு வருவது பேரீச்சம்பழம் தான். ஈச்சம்பழம் என்றால் நினைவிலே நிழலாடுவது ரமழான் மாதம்தான்.

ரமழான் எனும் நோன்பு மாதம் வந்தாலே முஸ்லிம்கள் மாத்திர மின்றி ஏனைய மக்கள் மத்தியிலும் - குறிப்பாக, அனைத்து சமூக வியாபாரிகள் மத்தியிலும் அதிகமாக உச்சரிக்கப் படுகின்ற வார்த்தை பேரீச்சம்பழம் தான்.

முக்கனிகளுள் ஒன்றாக இடம் பெறாவிட்டாலும் முழு உலகிலும் பிரசித்திபெற்ற பழம்தான் இது. இப்பழத்தின் தனித்துவமும் சிறப்புகளும் ஏராளம் உள்ளன.

பசுமையான நிலங்களிலேதான் ஏனைய கனிகள் எல்லாம் செழித்து வளரும். ஆனால், பாலைவனத்தில் பழுத்து சோலை வனங்களுக்கு ஏற்றுமதியாகும் ஒரே கனி பேரீச்சம்பழம்தான்.

கனி என்ற சொல்லுக்கு இலக்கணமாக கனிந்து தேன்போல் பாணி விடும். இது முக்கனிக்குள் இடம் பெறாததற்குக் காரணம், தமிழகத்தை அடிப்படையாக வைத்து முக்கனி என்ற சொல் உருவானதாக இருக்கலாம்.

அதிக சக்தி தரும் கனியாகவும் அதிக ஆயுள் கொண்ட கனியாகவும் திகழ்வது இது. பசிக்கு உணவாகும் அதே நேரத்தில் பசியால் வறண்டு போன வயிற்றிலே வாயுக் கோளாறு எனும் நோய் வராமல் தடுக்கும் நிவாரணியாகவும் திகழும் அற்புதத்தன்மை இப்பழத்துக்குண்டு.

மாம்பழத்தை வெட்டிச் சாப்பிட வேண்டும். வாழைப்பழத்தை உரித்துச் சாப்பிட வேண்டும். ஆனால், இதுவோ எடுத்த எடுப்பிலேயே சாப்பிடக்கூடிய இலகுவான பழம். ஏனைய பழங்களை சாப்பிட்டவுடன் தண்ணீர் அருந்தக்கூடாது. ஆனால், இப்பழத்தைச் சாப்பிட்டவுடன் தண்ணீர் குடிக்கலாம், குடிக்க வேண்டும்.



நோன்பு காலத்தில் உலகமெலாம் வாழும் முஸ்லிம்கள் நோன்பு துறப்பதற்கு பேரீச்சம்பழத்தை விரும்புவதற்குக் காரணம் நபி (ஸல்) அவர்களின் வழிமுறையும் அப்பழத்தின் தனித்தன்மையுமாகும். அதனால் முழுத் தேவைகளையும் அரபு நாட்டுப் பாலைவனங்களிலேயே இறைவன் அபிவிருத்தி செய்துள்ளான் போலும். அரபு நாடுகள், முஸ்லிம்கள் வாழ்கின்ற எல்லா நாடுகளுக்கும் நோன்பை முன்னிட்டு இலவசமாகப் பேரீச்சம் பழங்களை தாராளமாக அனுப்பி வைக்கின்றன.

-புரவலர் ஹாஷிம் உமர்-

# சம்பள உயர்வு தருவதாகக் கூறி ஏமாற்றப்படும் தோட்டத் தொழிலாளர்கள்

**சந்தனம் சத்தியநாதன்**

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படுமென முன்னாள் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்க கூறினார். அது வெறும் தேர்தல் வாக்குறுதியாகவே மட்டும் இருந்தது. அது நடைமுறைக்கு வரவில்லை.

வரலாற்றுக் காலம் முதல் கூட்டு ஒப்பந்த அடிப்படையிலேயே சம்பள அதிகரிப்புகள் தொடர்ந்து பேசப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப் பட்டதோடு, சலுகைகளும் கூட வழங்கப்பட்டன. இருப்பினும், கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் இப்பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வை எட்ட முடியாத நிலையிலேயே கடந்த காலங்களில் சம்பள நிர்ணய சபை இரண்டு தடவைகள் கூடியபோதும் அதற்கு முதலாளிமார் சம்மேளனம் சமுகமளிக்கவில்லை.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் தீர்மானமொன்றை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை தொழில் ஆணையாளருக்கும் தொழில் அமைச்சருக்குமே வழங்க முடியும். அந்த வகையிலேயே அடிப்படைச் சம்பளம் 1,350 ரூபாவும் ஏனைய கொடுப்பனவாக 350 ரூபாவும் சேர்த்து 1,700 ரூபாவாக வழங்குவதற்குத் தீர்மானித்து வர்த்தமானியும் வெளியிடப்பட்டது. அதாவது, 2024ஆம் ஆண்டு தொழிற்சங்கங்கள் 2000 முதல் 2300 ரூபா சம்பள அதிகரிப்பைக் கோரியதுடன், போராட்டங்களையும் மேற்கொண்டு வந்தன.

இதனடிப்படையில் நாட்டில் ஏனைய துறைகளுடன் பெருந்தோட்டத் தொழிலாளர்களை ஒப்பிடும்போது வேதனம் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. 1929ஆம் ஆண்டு பெருந்தோட்ட மக்களின் வேதனம் தொடர்பாக ஆய்வுசெய்ய 'வேயிட்' என்பவரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அக்குழு தொழிலாளர்களின் வேதனம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு நியாயமான வேதனத்தை சிபாரிசு செய்தது.

அக்காலத்தில் தொழிலாளர்களுக்குச் சரியாக வேதனம் வழங்கப்பட்டபோதிலும் அவ்வப்போது சிறு ஊக்குவிப்புகள் கிடைத்தன. அது எவ்விதத்திலும் போதுமானதாக இருக்கவில்லை. நாட்டில் வறுமை, பொருளாதார நெருக்கடி எது ஏற்பட்டபோதிலும் அதில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பெருந்தோட்ட மக்கள்தான் என்பதை இன்றும் உணரக்கூடியதாகவுள்ளது.

தற்போது உலகில் தொழிலாளர்களின் சம்பளம் வழங்கும் முறைகளில் 'வாழ்வதற்கான சம்பளம்' என்ற அடிப்படையில் பேசப்படுகிறது. இது என்ன வாழ்வதற்கான சம்பளம்! இதனை ஆராய்கின்றபோது வாழ்வதற்கான சம்பளக் கருத்தியல் ஒவ்வொரு நாட்டினதும் பொருளியல் அடிப்படையில் தொழிலாளர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் கௌரவமான வாழ்க்கை நடத்துவதற்கான வழியை அமைத்துக் கொடுப்பதாகக் கூறப்படுகிறது. வாழ்க்கைச் சம்பளம் தொழிலாளர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் வறுமையின் விளைவாக அவர்களின் தேவைகள் மறுக்கப்படாது எனவும் கௌரவமான வாழ்க்கையை உறுதிசெய்வதை இலக்காகக்கொண்டதாகும் எனவும்



குறிப்பிடப்படுகிறது.

அதேவேளை, அது தொழிலாளர் குடும்பத்தினருக்கு வறுமையற்ற வாழ்க்கையை வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதுடன், அவர்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதாகவும் சொல்லப்படுகிறது. உணவு, கௌரவமான குடியிருப்பு, நல்ல கல்வி, போதிய சுகாதார கவனிப்பு மற்றும் தேசிய தரத்துக்கமைவான நாட்டின் நிகழ்கால சமூக, பொருளாதார அபிவிருத்திக்கமைவான திருப்திகரமான சமூக கலாசார வாழ்க்கை வாய்ப்புகளை உள்ளடக்கிய அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வருமானத்தை தொழிலாளர் குடும்பங்கள் பெற்றுக்கொள்வரென நம்பப்படுவதாகக் கூறப்படுகிறது.

வழமையான வேலை நேரத்தில் மேலதிக வேலை அல்லது மிகைக் கட்டணத்துக்கான வேலை செய்யாது உரிய நிபந்தனைகளின்கீழ் செய்யும் வேலை மூலம் பெற்றுக்கொள்ளும் சம்பளத்தை வாழ்வதற்கான சம்பளம் எனக் கருதுகின்றனர். சம்பளம் பற்றிய மேற்குறிப்பிட்ட கருத்தியல் உலக அளவில் பேசப்படுகிறது.

அனைத்துத் தொழிலாளர்களும் கௌரவமான நியதி நிபந்தனைகளுடன் வாழ்க்கைச் சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நடத்தும் போராட்டம் சமூக நீதியை மையமாகக்கொண்டதாகும் எனக் குறிப்பிடப்படுகிறது. அனைத்துத் தொழிலாளர்களுக்கும் அவர்களின் பொருளாதார சந்தர்ப்பத்துக்கேற்றவாறு வாழ்வதற்கான சம்பளம் வழங்கப்பட வேண்டியது அடிப்படை உரிமையென சர்வதேச சமூகம் அக்கறை கொண்டாலும் பெருந்தோட்டச் சமூகத்தின் இன்றைய நிலை என்ன?

வாழ்வதற்கான சம்பளமும் இல்லை. அவர்களின் உழைப்புக்கேற்ற ஊதியமும் கிடைக்கவில்லை. தேங்காய் ஒன்று 250 ரூபா, அரிசி 245 ரூபா. இப்படி வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகிறது. ஆனால், அதற்கு நிகரான சம்பள உயர்வு வழங்கப்படுவதில்லை. அப்படியென்றால் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைப் பிரஜைகள் இல்லையா என்ற கேள்வி எழுகிறது. உண்மையில் இது ஒரு பாகுபாட்டையே காட்டுகிறது.

இவ்வருட வரவு-செலவுத் திட்டத்தை அண்மையில் வாசித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 1700 ரூபாவாக அதிகரிக்கப்படுமெனக் குறிப்பிட்டார். நல்ல விடயம், நாம் சந்தோஷப்படலாம்.

ஆனால், அந்தச் சம்பள அதிகரிப்பை எந்த அடிப்படையில் வழங்கப்போவதாகக் கூறவில்லை. ஏனென்றால், அது அடிப்படைச் சம்பளமா, இல்லை கொடுப்பனவா என்பதில் விளக்கமில்லை. அத்தோடு, தோட்டங்களின் முகாமைத்துவம் தனியார் கம்பெனிகளிடம் இருக்கின்றபோது கம்பனிகள் மௌனமாக இருக்கும் இந்நேரத்தில் இந்தச் சம்பள உயர்வு எப்படிச் சாத்தியமாகும் என்ற கேள்வி எழுகின்றது. ஒவ்வொரு முறையும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு என்று வந்தபோதெல்லாம் தோல்வியையே கண்டுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு பார்க்கின்றபோது பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்கவேண்டிய காலத்தின் கட்டாயத்தை யாராலும் மறுக்க முடியாது. நாட்டின் ஏனைய துறைகளிலுள்ள தொழிலாளர்கள் தமது சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட தமது பிரச்சினைகளுக்குப் போராடி வெற்றி காணும் இந்நேரத்தில் ஏன் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டங்கள் மட்டும் தோல்வியில் முடிகின்றன. அப்படியென்றால் தொழிலாளர்களைத் தலைமை தாங்கும் தொழிற்சங்கங்கள் பலவீனமாக உள்ளனவா என்று எண்ணத் தோன்றுகிறது.

இத்தனை பிரச்சினைகளையும் தாங்கிக்கொண்டு வாழும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வை இன்றைய அரசாங்கம் பெற்றுக்கொடுக்கும் என்ற நம்பிக்கையோடு வாக்களித்த மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுமா இந்த அரசாங்கம்?

பொறுத்திருந்து பார்ப்போம்!

# கொழும்பு விவேகானந்தா கல்லூரிக்கு வயது 99




இலங்கைத் தலைநகரில் ஆங்கிலேய காலனித்துவத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது சைவ பாடசாலையான கொழும்பு விவேகானந்தா கல்லூரி தமது 99ஆவது அகவையில் நாளை (24.03.2025) தடம் பதிக்கின்றது.

தமிழ் மக்கள் கல்வி நடவடிக்கைகளில் மேம்படவேண்டும் என்ற உயர் நோக்கத்துடன் தமிழை வளர்ப்பதில் அருந்தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் அடியொற்றி வடகொழும்பில் விவேகானந்தா சபையினரால் 1926ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி நிறுவப்பெற்ற விவேகானந்தா கல்லூரிக்கு அப்பெயர் கிடைக்கக் காரணம், இந்தியாவின் தலைசிறந்த சமயத் தலைவரான சுவாமி விவேகானந்தர் காலடி தடம் விவேகானந்தா சபையில் பதிந்ததை கௌரவப்படுத்தும் நோக்கிலாகும்.

''மனிதனை சிறந்தவனாக ஆக்குவதே கல்வியின் நோக்கம்'' என்ற சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிக்கமைய "ஆகுக ஆக்குக" என்ற குறிக்கோள் வாசகத்தைக் கல்லூரி தன்னில் கொண்டுள்ளதுடன், இதுவரை இக்கல்லூரியிலிருந்து 45 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வெளியேறியுள்ளனர்.

கொழும்பு-13, புதுச்செட்டித்தெருவில் அமைந்துள்ள பாடசாலையில் ஆண்களும் பெண்களும் இணைந்தே கல்வி பயில்கின்றனர். வெறும் ஆரம்பப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட விவேகானந்தா கல்லூரி, 1953இல் க.பொ.த. (சா/த) வகுப்புகள் வரை தரமுயர்த்தப்பட்டது. கல்லூரியை 1962ஆம் ஆண்டு அரசாங்கம் தனது பொறுப்பில் எடுத்தது. அரசாங்கம் கல்லூரியைப் பொறுப் பேற்று ஓராண்டு நிறைவடைவதற்குள் - அதாவது, 1963இல் மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டு க.பொ.த. (உ/த) வகுப்பு வரை மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை எவ்வித இடையூறுமின்றி மேற்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.



அதிபர் திரு. மூக்கப்பிள்ளை மூவேந்தன்



பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் திரு. மீனாட்சி சுந்தரம்

1996இல் தேசிய பாடசாலையாக தரமுயர்த் தப்பட்டு இன்று 2,292 மாணவர்களையும் 102 ஆசிரியர்களையும் கொண்டுள்ளது. தற்போதைய அதிபராக மூக்கப்பிள்ளை மூவேந்தன் பணியாற்றுகின்றார். கல்லூரியின் 99ஆவது அகவையை முன்னிட்டு அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்,

"நீண்டகால நல்ல பாரம்பரியங்களுக்கு அடிப்படையாக எமது கல்லூரி விளங்குகின்றது. இக்கல்லூரியில் பயின்று வெளியேறிய மாணவர்கள் சமுதாயத்தில் சிறப்பான நிலையிலும் சிறந்த பிரஜைகளாகவும் உள்ளனர். 2026இல் கொண்டாடப்படவுள்ள எமது நூற்றாண்டு விழாவானது ஐந்து நாட்களுக்கான மாபெரும் விழாவாக கொண்டாடப்படும். அதற்கான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இப்பாடசாலை எமது சமூகத்தின் மேம்பாட்டுக்கு தொடர்ந்தும் பணியாற்றும்" எனக் குறிப்பிட்டார்.

கல்லூரியின் 99ஆவது அகவை தொடர்பாக கருத்துத் தெரிவித்த பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் மீனாட்சிசுந்தரம்,

"கடந்த 99 ஆண்டுகளாக எமது பாடசாலை யானது எமது சமுதாயத்துக்கு ஆற்றிய தொண்டு தன்னலமற்றது. நூற்றாண்டை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில் எமது பழைய மாணவர் சங்கமும் பல்வேறு வகையான செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது. பாடசாலை மாணவர் களின் கல்வி, விளையாட்டு உள்ளிட்ட அனைத்துச் செயற்பாடுகளுக்கும் கடந்த பல தசாப்தங்களாக எமது சங்கம் வழங்கிய பங்களிப்பை புது உத்வேகத்துடன் வழங்கு வோம். அத்துடன், எமது கல்லூரியின் நூற்றாண்டை வரவேற்க நாம் ஆவலாக உள்ளதுடன், பல்வேறு திட்டங்களை முன்வைத்து அதற்காக நாம் காத்திருக்கின்றோம்" - எனத் தெரிவித்தார்.

**சுரேஸ் குமார் பேனா**
**- பழைய மாணவர்**



# ஆருப்பையா கங்காணி

**த.யுவராஜ்**

''எட்டுமணி சங்கு அடிச்சு இவளோ நேரம் ஆகியும் இந்த புள்ளைங்கள இன்னும் வர காணோமே'' என முணுமுணுத்தவாறு மலையிலிருந்த முற்றிய கொழுந்துகளைப் பறித்தவாறு நொந்துகொண்டார் கங்காணி''

**லெச்சுமி** – என்ன கங்காணி என்னத்த நெனச்சி இப்படி பொழம்பிக்கிட்டு இருக்கீங்க.

**கங்காணி** – எல்லா நீங்க வேலைக்கு வார நேரத்த நெனச்சித்தா. வேலைக்கு வார நேரமா இது?

**லெச்சுமி** – இல்ல கங்காணி என்னோட பேரப்புள்ள இன்னக்கி மொத நாள் இஸ்குலுக்கு போறான். அதா அனுப்பிட்டு வர சொனங்கிருச்சி.

**கங்காணி** – அப்படியா சங்கதி.

**லெச்சுமி** – ஆமா கங்காணியண்ணே.

**கங்காணி** – அது சரி இந்த காலத்துல ஒரு புள்ளைய இஸ்குலுக்கு அனுப்புறது எவ்வளவு கஸ்டம் எனா.

**லெச்சுமி** – அதுனா உண்ம தா அண்ணே. நம்ம காலத்துல மாதிரி இல்ல இப்ப ரொம்ப கஸ்டம். இப்ப ஒரு கொப்பி நூறு ரூபாவுக்கு கொரஞ்சி இல்ல. அதே புள்ளைய புதுசா இஸ்குலுக்கு சேக்குறதுக்கு ஒரு பெரிய லிஸ்டயே தாரங்க.

அதுல கொப்பி. பென்சில்ல ஆரம்பிச்சி கிலே, கலர் மணல் வரைக்கும் ஒரு எழுவத்தஞ்சி சாம லிஸ்ட் இருக்கு.

அத ஒன்னு ஒன்னையும் பாத்து பாத்து தேடி தேடி வாங்குறதுக்குள்ள போதும் போதுன்னு ஆகிடுது.

ஒரு கடையில ஒரு சாமான் இருந்த ஒரு சாமான் இருக்குறது இல்ல. இது தா பெரிய கஸ்டம்.

நாம படிக்கிறப்ப இதெல்லா கேக்கலயே. ஏ அண்ணே இப்போ மட்டும் இதெல்லா கேக்குறாங்க.

**கங்காணி** – நாம படிக்கிறப்ப அரசாங்கமே இந்த அவளோ பொருட்களையும் கொடுத்துச்சி.

நாம படிக்கிறதுக்கான அவ்வளோ செலவையும் அரசாங்கமே பாத்துக்குச்சு.

ஆனா இப்போ அப்படி இல்லையே. நம்ம அரசாங்கம் என்னதா நம்ம புள்ளைகளுக்கு கல்விய இலவசமாக கொடுத்தாலும் நம்ம காலத்துல அர்ப்பணிப்போட ஆர்வமா படிக்கிற புள்ளைகள் இப்போ இல்ல.

நம்ம காலத்துல சேர்மார், டீச்சர்மார் வந்தாலே பயந்துபோய் இருப்போம்.

ஆனா இப்போ இருக்க புள்ளைங்க அப்படி இல்லயே. சேரும் புள்ளைங்களும் ஒன்னு மண்ணா பழகுறாங்க. சேர்மாரும் பிரன்ஸ்மாதிரி பழகுறாங்க. ஆனா அப்படி இருந்தும் இப்போ இருக்க புள்ளைங்க அவங்க சொல்றத கேட்டு படிக்கிறது இல்லையே.

**லெச்சுமி** – அதுனா உண்ம தாண்ணே. அத இப்போ இருக்க புள்ளைங்க கிட்ட போன் வந்துருச்சே. அது ஒன்னு போதுமே அவங்க வீணா போறதுக்கு.

**கங்காணி** – ஆமா லெச்சுமி நீ சொல்றதும் சரிதா.

இப்ப இருக்க புள்ளைங்க இந்த போன வச்சிக்குட்டு காட்டுற கூத்து இருக்கே கொஞ்சநஞ்சம் இல்ல.

இஸ்குலுக்கும் போன கொண்டு போகுதுங்க. பேஸ்புக்கு. டிக்டொக்குனு கண்ட கண்ட விசியத்தையும் வச்சிக்கிட்டு இதுங்க ஆடுர ஆட்டம் இருக்கு பாரு யப்பப்பா சொல்லி மாலாது.

**லெச்சுமி** – அது மட்டும் இல்ல கங்காணி. இப்ப இருக்க சின்ன புள்ளைகளும் இந்த போன வச்சிக்கிட்டு தா ஆடுதுங்க.

அது மட்டு இல்லாம இப்ப இருக்க அம்மாமாருங்க புள்ளைகளுக்கு இந்த போன காட்டி சோறு ஊட்டுறாங்க.

நம்ம காலத்துல இப்படி எதுவுமே இல்லையே கங்காணி. புள்ளைக்கு சாப்பாட போட்டு கொடுத்தா அது பாட்டுக்கு தின்னுட்டு போகும். ஆனா இப்ப இருக்க புள்ளைக்கு சோற போட்டு கொடுக்க முன்ன போன கைல கொடுக்கனும்.

அதுக்கு பெறகு டிவில கார்டுன் போடனும். இத ரெண்டையும் பாத்துக்கிட்டு தா சாப்புடுது. இப்படி இருக்கு இப்ப இருக்க புள்ளைங்க.

**கங்காணி** – இந்த போன் நால எவ்வளோ பிரச்சினைகள் வருது தெரியுமா.

சின்னத்துலயே கண் பிரச்சன. நரம்பு தளர்ச்சி. காது கேக்காம போறது, இப்படி பல பிரச்சினைகள் வருது. இப்படியே போனா நம்மளோட அடுத்த சந்ததி என்ன ஆகுமோ தெரியல லெச்சுமி.

**லெச்சுமி** – நீங்க சொல்றது நூத்துக்கு நூறு உண்மையான விசியம் தாண்ணே.

நாம இப்ப இருக்க புள்ளைங்களுக்கு எவ்வளவோ செலவளிச்சி படிக்க வைக்கிறோம். அதுக்காக நாம காடு மேடெல்லா அலஞ்சி திரிஞ்சி பாடுபட்டு காசு தேடி படிக்க வைக்கிறோம். ஆனா அத எதையுமே கண்டுகாத இந்த காலத்துப் புள்ளைங்க அவங்கப்பட்டுக்கு கேட்டுது கெடைக்குதுனு சல்லிய கண்டமேனிக்கு செலவுபண்ணிக்கிட்டு நம்ம பேச்சிக்கு அடங்காம திரியுதுங்க. இதெல்லா எங்க போய் நொந்துகுறதுனுதா தெரியல கங்காணி.

(தொடரும்...)

# பிழையற்ற தமிழ் அறிவோம்

### எழுத்துகளா, எழுத்துக்களா? அண்ணாதுரையா, அண்ணாத்துரையா?

இலக்கண விளக்கம் எழுதிக்கொண்டே போனால் அது விரிந்துகொண்டே செல்லும். எளிதாகவும் சுருக்கமாகவும் சிலவற்றை அறியுமாறும் எழுதினோம்.

ஒற்றுமிகுதல் தொடர்பாக அறியத்தக்க மற்றும் இரண்டு செய்திகளையும் தருகிறோம். உவமைத் தொகை என்பது ஒன்று. ஒன்றை மற்றதற்கு உவமையாகச் சொல்லும்போது உவமை உருபு (போல, ஒத்த, அனைய, நிகர்த்த) மறைந்திருப்பது உவமைத் தொகை. (எ-டு) முத்துப்பல் என்பது முத்து போன்ற பல் எனும் பொருளது. இங்கே உவமைத் தொகையில் சந்தி 'ப்' மிகுந்தது. உவமை விரியில் மிகவில்லை.

குற்றியலுகரம் என்பதும் அறியவேண்டிய ஒன்று. இதை விளக்கவே பல பக்கங்கள் எழுத வேண்டியிருக்கும். இயன்றவரை சுருக்கமாகச் சொல்வோம். குறைந்த ஓசையுடைய 'உ' எனும் எழுத்து. உகரத்துக்கு ஒரு மாத்திரை. குறைந்த உகரத்துக்கு அரை மாத்திரை. தொடர் வகையான ஆறு வகைப்படும், சொல்லின் ஈற்றில் வல்லொற்றின் மீது உகரம் ஏறி (சேர்ந்து) வருதல் இதன் இயல்பு (எ-டு) குரங்கு - இச்சொல்லின் 'கு'வில் உள்ள உகரம் குறைந்து ஒலிக்கும். முழுமையான உகரம் எது? அது முற்றியலுகரம். பசு - 'சு'வில் உள்ள உகரம் முழுமையானது.

வன்தொடர்க் குற்றியலுகரம் முன் வல்லொற்று மிகும் என முன்னர் சொல்லியிருக்கிறோம். பத்து - இதிலுள்ள 'உ' (த்+உ) அயலில் 'த்' என்ற வல்லெழுத்தை நோக்க வன்தொடர்க் குற்றியலுகரமாம். பத்துப்பாட்டு இங்கே வல்லொற்று மிகுதலைக் காண்கிறோம். எட்டுத் தொகையும் இவ்வாறே.

எழுத்து என்பதில் வன்தொடர்க் குற்றியலுகரம் உள்ளது. 'கள்' எனும் பன்மை விகுதி சேரும்போது வல்லொற்று மிகுமா? 'கள்' ஒரு தனிச் சொல் அன்று; பன்மை காட்டும் விகுதி. ஆதலின் எழுத்துகள் என்பதே இயல்பானது.

இவ்வாறே 'தலைப்புகள்', 'இனிப்புகள்' என்று இயல்பாக எழுதுவதே பொருத்தம். ஆயினும் பழந்தமிழ்ப் புலவர் (பரிமேலழகர் உள்ளிட்டவர்) 'எழுத்துக்கள்' என்று எழுதியுள்ளார்கள். ஆதலின் இருவேறு முறையிலும் எழுதலாம். ஆயினும், 'இனிப்புக்கள்' வழங்கப்பட்டன எனும்போது இனிப்புச் சுவையுடைய 'கள்' எனும் பொருள் காணக்கூடும். ஆதலின் 'இனிப்புகள்' என்றே எழுதுக.

**வலி மிகுதல் - மிகாமை சில குறிப்புகள்:**

**தமிழ் பேசு, தமிழ்ப் பேச்சு:**

மேற்காணும் இரண்டிலும் தமிழ் என்பது நிலைமொழி. பேசு, பேச்சு என்பன வருமொழி. ஒன்று இயல்பாகவும் ஒன்று வலி மிகுந்தும் வந்திருப்பது ஏன்? தமிழ் பேசு என்பது தமிழில் பேசு என விரியும். ஆதலின் ஐந்தாம் வேற்றுமைத் தொகை. தமிழ்ப் பேச்சு என்பது தமிழில் ஆகிய பேச்சு அல்லது தமிழில் பேசப்பட்ட பேச்சு என விரியும். இதனில் 'இல்' உருபோடு பிறிதொரு சொல்லும் மறைந்திருப்பதால் உருபும் பயனும் உடன் தொக்க தொகை. தமிழ் படி- தமிழைப் படி - இரண்டாம் வேற்றுமைத் தொகை, தமிழ்ப்படி - தமிழில் உள்ள படி - உருபும் பயனும் உடன் தொக்க தொகை. தமிழ்ப் படம், தமிழ்ப்பாடம், தமிழ்ப் பேராசிரியர் என்பவற்றை விரித்துப் பொருள் காண்க.

ஊர்ப் பெயர்களின் முன் க, ச, த, ப வந்தால் வல்லெழுத்து மிகும்.

(எ-டு) திருவாரூர்த் தமிழ்ச்சங்கம்

அம்பத்தூர்த் தொழிற்பேட்டை

ய், ர், ழ் ஈறாக வரும் சொற்கள் முன் வல்லெழுத்து பெரும்பாலும் மிகும். (எ-டு) தாய்ப்பாசம், வேர்க்கடலை, யாழ்ப்பாணம், நாய்க்குட்டி, நீர்ச்சோறு, கூழ்ச்சட்டி

காய்கதிர்-வினைத்தொகையில் மிகவில்லை (காய்ந்த கதிர், காய்கின்ற கதிர், காயும் கதிர்)

மோர் குடி - வேற்றுமைத் தொகையில் மிகவில்லை (மோரைக் குடி)

தாழ் சடை - இதுவும் வினைத் தொகை - மிகவில்லை.

வேய்ங்குழல் என்று வல்லொற்று மெல்லொற்றாகத் திரிதலும் உண்டு (வேய்- மூங்கில்)

இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும் என்பது பொதுவிதி. உயிரோசை இறுதியில் சொற்கள் முன் வரும். க, ச, த, ப 'க்கள்' மிகும்.

(எ-டு) வரச் சொன்னான் (ர்+அ=ர)

எதிர்மறைப் பெயரெச்சத்தில் (வலி) மிகாது.

**அண்ணாதுரையா? அண்ணாத்துரையா?**

துரை என்பது (Durai) வட சொல். மெல்லொலி கொண்டது. ஆதலின் 'த்' மிகாது. ஆனால் துரை (Thurai) என்று அழுத்தி ஒலித்தால் தமிழ் வல்லெழுத்தாகி அண்ணாத்துரை என்று வரும். ஒலிக்கும் முறையை ஒட்டி வலி மிகுதலும் மிகாமையும் ஏற்படுகின்றன.

**(தமிழ் வளரும்)**
**(நன்றி தினமணி)**

## குறுக்கெழுத்துப் போட்டி - 60

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | | | 4 | | |
| | ■ | | 5 | ■ | 6 | ■ | | ■ | |
| 7 | | | ■ | 8 | | ■ | 9 | | 10 |
| | ■ | | ■ | | ■ | 11 | | ■ | ■ |
| ■ | | | | 12 | ■ | | ■ | 13 | |
| | ■ | ■ | ■ | | 14 | ■ | | | 15 |
| 16 | | | | ■ | | 17 | ■ | ■ | ■ |
| ■ | ■ | ■ | 18 | ■ | | ■ | 19 | | |
| 20 | | | | | ■ | ■ | | ■ | |
| | ■ | ■ | ■ | 21 | ■ | ■ | | ■ | 22 |

**இடமிருந்து வலம்**
01. பாகம் ஒத்த சொல்
03. எப்பொருளும் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள்........காண்பதறிவு
07. இலங்கைக்கான ஒரு பேச்சுவார்த்தை (குழம்பியுள்ளது)
08. கண்ணின் ஒரு பகுதி
09. ஓர் ஆயுதம்
11. எறியலாம், வீடும் கட்டலாம்
13. கணிப்பீடு
16. பழி தீர்க்கும் செயற்பாடு
19. பெண்ணைக் குறிக்கும்
20. ஹொக்கி விளையாட்டில் இருபக்க அணிகளிலுள்ள எண்ணிக்கை

**மேலிருந்து கீழ்**
01. கற்புடைய மனைவி
02. குறும்புத்தனமானவனை இப்படிக் கூறுவர்
04. இந்துக்களின் பெருநாளில் இது செய்வர்.
08. பிணங்களைப் புதைக்குமிடம்.
11. ஆண் ஆடு
13. முட்டை
14. ஒரு பூச்சியினம்
18. செல்வம் (குழம்பியுள்ளது)
19. வாசனை எண்ணெய்
20. விரோதம் கொள்

**கீழிருந்து மேல்**
06. உண்மை (குழம்பியுள்ளது)
10. உருண்டையாக்கல்
15. படையெடுப்பு
16. பழித்தல்
21. வாட்டல்
22. கெட்ட நாற்றம்

**வலமிருந்து இடம்**
05. எதிர்த்துப் பேசுதல்
12. பாதுகாப்பவன் (குழம்பியுள்ளது)
14. பிஞ்சு
15. இறைவனைப் பக்தியோடு வணங்கினால் ......கிடைக்கும்
17. புசித்தல்

**குறுக்கெழுத்துப் போட்டிக்கான சரியான விடையை எழுதி அனுப்பும் இருவருக்கு தலா 1000 ரூபா பணப்பரிசு வழங்கப்படும்**

**சரியான விடையை**
thamilanweekly@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி அனுப்பலாம்.
வாட்ஸ்அப் இல: 0761393805

## குறுக்கெழுத்துப் போட்டி - 59க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வெ | டி | ■ | 2 த | 3 வி | ல் | ■ | 4 ம | ழ | லை |
| ற் | ■ | பு | ■ | ர | ■ | 5 ந | தி | ■ | 6 வி |
| றி | ■ | ப் | 7 க | ல் | 8 ப | ■ | த் | ■ | ■ |
| ■ | 9 நா | டு | ■ | ■ | ரி | ■ | ■ | ம் | ■ |
| ழ் | க | 10 இ | ■ | ■ | 11 சீ | ம | ந் | த | ம் |
| ■ | ம் | ■ | 12 த | ம் | ல | ■ | ■ | க | ■ |
| 13 கூ | ■ | ■ | ற் | ■ | னை | 14 சி | ச் | ர | 15 பி |
| ச் | ச | ய் | 16 கா | ல் | ■ | ந் | ■ | 17 ம | டி |
| ச | ■ | ■ | ப் | ■ | ந் | 18 த | தி | ■ | ■ |
| ம் | லி | க | 19 பு | ட | ■ | னை | ■ | 20 பி | றை |

# 3 வகை வரிக்குதிரைகள்



**வரிக்குதிரைகளில் மூன்று முக்கிய வகைகள் உள்ளன. ஒவ்வொன்றும் அவற்றின் சூழலில் உயிர்வாழ உதவும் சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளன. வரிக்குதிரைகள் அவற்றின் தனித்துவமான கறுப்பு மற்றும் வெள்ளை கோடுகளுக்கு அறியப்பட்ட கண்கவர் விலங்குகள்.**

**பொதுவான அம்சங்கள்:**

**அனைத்து வரிக்குதிரைகளும் ஒரே மாதிரியான உடல் வடிவம் கொண்டவை. குதிரை போன்ற உடல் மற்றும் நீண்ட கழுத்தும் உள்ளன. அவற்றின் குளம்புகள் கடினமானவை. கெரட்டின் எனப்படும் கடினமான புரதத்தாலானது. இது கால்களை தரையிலிருந்து பாதுகாக்கவும் ஓடும்போது சமநிலையில் இருக்கவும் உதவும். நீண்ட வால் மற்றும் நெற்றியில் வளரும் கூர்மையான கொம்பு வேட்டையாடுபவர்களிடமிருந்து தங்களைத் தற்காத்துக்கொள்ள உதவும்.**


**வரிக்குதிரைகளின் வரிகள் தனித்தன்மை பெற்றவை. ஒவ்வொரு வரிக்குதிரையின் வரியும் இன்னொரு வரிக் குதிரையைப்போல இருப்பதில்லை. மனிதர்களின் கை விரல் ரேகைகளைப்போல ஒன்றுபோல் ஒன்று இல்லாத தனித் தன்மையான கறுப்பு-வெள்ளை வரிக்கோடுகள் கொண்டவை. வரிகள் முன்புறம் நெடுக்குக் கோடுகளாகவும் பின்புறமும் கால்களிலும் கிடைக்கோடுகளாகவும் இருக்கின்றன.**

### சமவெளி வரிக்குதிரைகள் (Plains Zebras)

**தனித்தன்மை;** சமவெளி வரிக்குதிரைகள் மிகவும் பொதுவான வகை வரிக்குதிரைகள். கிழக்கு மற்றும் தென் ஆபிரிக்காவில் காணப்படுகின்றன. அவற்றின் உடலில் பரந்த கறுப்பு மற்றும் வெள்ளை கோடுகள் உள்ளன. ஒவ்வொரு சமவெளி வரிக்குதிரையும் மனித கைரேகைகளைப்போலவே வெவ்வேறு கோடுகளைக் கொண்டுள்ளது. எந்த இரண்டு வரிக்குதிரைகளுக்கும் ஒரே மாதிரி கோடுகள் இல்லை. முதுகில் கிடைமட்டமாகவும் வயிற்றில் செங்குத்தாகவும் கால்கள் மற்றும் தலையில் குறுக்காகவும் கோடுகள் இருக்கலாம். இந்த தனித்தன்மை, இவற்றை வேட்டையாடும்' சிங்கங்கள் மற்றும் ஹைனாக்கள் போன்ற விலங்குகளைக் குழப்புகின்றன.

**நிறம்:** அவற்றின் முகம், கால்கள் மற்றும் வயிறு பழுப்பு-சிவப்பு நிறத்தைக்கொண்டுள்ளன. அவை சூரிய வெப்பத்திலிருந்து பாதுகாக்கின்றன.

**வேகம்:** சமவெளி வரிக்குதிரைகள் சிறந்த ஓட்டப்பந்தய வீரர்களாகும். ஆபத்தை உணரும்போது வேகமாக ஓடக்கூடியவை. அவை 65 km/h (40 mph) வேகத்தை எட்டும்.



### மலை வரிக்குதிரைகள் (Mountain Zebras)

இவை நமீபியா, தென்னாபிரிக்கா மற்றும் தென்மேற்கு ஆபிரிக்காவின் மலைப்பகுதிகளில் வாழ்கின்றன.

**தனித்துவமான அம்சங்கள் :**

இவை சமவெளி வரிக்குதிரைகளைப்போலவே இருந்தாலும் மலைகளில் வாழ உதவும் சில சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளன. அவற்றின் முதுகில் கட்டம் போன்ற வடிவமைப்புடன் ஒரு தனித்துவமான பட்டை வடிவத்தைக் கொண்டுள்ளன. இது வெப்பத்தைப் பிரதிபலிக்க உதவுகிறது மற்றும் கடுமையான வெயிலில் கூட குளிர்ச்சியாக வைக்க உதவுகிறது. அவற்றின் கோடுகள் ப்ளைன்ஸ் ஜீப்ராக்களை விட மெல்லியதாகவும் மிகவும் கச்சிதமாகவும் இருக்கும்.

**உடலமைப்பு:** இவற்றின் தொண்டைக்குக் கீழே உள்ள தோலில் மடிப்புப் பகுதியைக்கொண்டுள்ளன. இது தண்ணீரை எளிதாகக் குடிக்க உதவுகிறது மற்றும் குளிர்ந்த மலைக் காற்றில் அவற்றின் கழுத்தை சூடாக வைத்திருக்க உதவுகிறது. பெரிய, கூர்மையான காதுகளைக் கொண்டுள்ளதால் தன்னை வேட்டையாட வரும் விலங்குகளின் சத்தத்தை தூரத்திலிருந்து கேட்கும் திறனை மேம்படுத்துகின்றது.

**சமூக நடத்தை:** இவை பெரும்பாலும் பெரிய மந்தைகளை விட சிறிய குடும்பக் குழுக்களை உருவாக்குகின்றன.



### கிரேவியின் வரிக்குதிரைகள் (Grevy's Zebras)

மூன்று வகைகளில் கிரேவியின் வரிக்குதிரைகள் மிகப்பெரிய இனமாகும். இவை கிழக்கு ஆபிரிக்காவின் வறண்ட புல்வெளிகளில் காணப்படுகின்றன.

**தனித்துவமான அம்சங்கள் :** அவை மிக மெல்லிய, குறுகிய நேர்த்தியான கோடுகளைக்கொண்டுள்ளன. அவை ஒன்றோடொன்று நெருக்கமாக உள்ளன. அவற்றின் முதுகுத்தண்டில் ஒரு தனித்துவமான கறுப்பு பட்டையுடன் வெண்மையான அமைப்பு இருக்கும்.

**உடல் அமைப்பு:** கிரேவியின் வரிக்குதிரைகள் 450 கிலோ (990 பவுண்ட்) வரை எடையும், 5 அடி உயரமும் இருக்கும். முக்கோண வடிவில் பெரிய, அழகான கண்கள் மற்றும் காதுகள் உள்ளன. ஆபத்தை உணரும்போது மிக வேகமாக ஓடும்.

**சமூக அமைப்பு:** மற்ற இரண்டு வகைகளைப் போலல்லாமல், கிரேவியின் வரிக்குதிரைகள் பெரும்பாலும் ஆண் ஆதிக்கம் இல்லாமல் தனியாகவோ அல்லது சிறு குழுக்களாகவோ வாழ்கின்றன.

# சூர்யா, தனுஷ் படங்களில் மமிதா பைஜூ



மலையாள நடிகையான மமிதா பைஜூ, 'பிரேமலு' படம் மூலம் பிரபலமானார். தமிழில் ஜி.வி.பிரகாஷ் ஜோடியாக 'ரெபல்' படத்தில் நடித்தார். அடுத்து விஷ்ணு விஷால் ஜோடியாக 'இரண்டு வானம்' என்ற படத்தில் நடித்துள்ளார். விஜய்யின் 'ஜனநாயகன்' படத்திலும் நடித்து வருகிறார்.

இந்நிலையில் அவர், தனுஷ் ஜோடியாக நடிக்க இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. நடிகர் தனுஷ், 'இட்லிக் கடை' என்ற படத்தை நடித்து இயக்கியுள்ளார். 'குபேரா' படத்தின் படப்பிடிப்பும் முடிவடைந்துவிட்டது. இப்போது ஆனந்த் எல். ராய் இயக்கும் 'தேரே இஷ்க் மேன்' என்ற ஹிந்திப் படத்தில் நடித்து வருகிறார். இதையடுத்து 'போர் தொழில்' இயக்குநர் விக்னேஷ் ராஜா படத்தில் நடிக்கவிருக்கிறார். இதில் தனுஷ் ஜோடியாக, மமிதா பைஜூ ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், வெங்கி அட்லூரி இயக்கத்தில் சூர்யா நடிக்கவிருக்கும் படத்திலும் மமிதா பைஜூ நாயகியாக நடிக்கவிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.




# இளையராஜாவைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்த பிரபல இயக்குநர்கள்





'அன்னக்கிளி' படத்தின் மூலம் அறிமுகமானவர் இசைஞானி இளையராஜா. இவர் பல்வேறு மொழிகளில் 1,000க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளார். 10,000க்கு அதிகமான பாடல்களை உருவாக்கியுள்ளார். அவர் இசைஞானி என்றும் அழைக்கப்படுகிறார். இவர் கடந்த 08ஆம் திகதி லண்டனில் வேலியண்ட் (Valiant) சிம்பொனியை அரங்கேற்றம் செய்தார். இதன்மூலம், முழு அளவிலான மேற்கத்தேய சிம்பொனி இசையை அரங்கேற்றம் செய்த முதல் இந்தியர் என்ற சாதனையை இளையராஜா படைத்தார். இந்தியாவுக்கே பெருமை பெற்றுத்தந்த இளையராஜாவுக்கு பல்வேறு தரப்பிலிருந்தும் வாழ்த்துகள் குவிந்தன. மேலும், தமிழக அரசு சார்பில் பாராட்டு விழா நடத்தப்படவுள்ளது. இந்நிலையில், தமிழ் சினிமாவின் பிரபலமான இயக்குநர்களான ஆர்.வி. உதயகுமார், பி.வாசு, கே.எஸ்.ரவிகுமார், பேரரசு மற்றும் ஆர்.கே.செல்வமணி ஆகியோர் லண்டனில் சிம்பொனியை அரங்கேற்றம் செய்த இசைஞானி இளையராஜாவை நேரில் சந்தித்து ரோஜா பூமாலையை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். இதேவேளை, சிவகுமார், சூர்யாவும் இளையராஜாவை நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

# உலக சாதனை படைத்த திரிஷாவின் படம்



'மௌனம் பேசியதே' திரைப்படத்தின் மூலம் 2002இல் தமிழ்ச் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமானார் திரிஷா. கதாநாயகியாக அறிமுகமாகி 22 ஆண்டுகள் கடந்தும் தமிழ்ச் சினிமாவில் இவருக்கு தனியாக ரசிகர்கள் பட்டாளமே இருக்கின்றனர். தமிழ் மட்டுமின்றி தெலுங்கிலும் பிசியாக நடித்து வருபவர் திரிஷா. இந்நிலையில், நடிகை திரிஷா நடித்த தெலுங்கு படமொன்று உலக சாதனை படைத்துள்ளது. அதுவும் தொலைக்காட்சியில் அதிக தடவைகள் ஒளிபரப்பான படம் என்கிற சாதனையை அப்படம் படைத்துள்ளது. அதாவது, திரிஷா தெலுங்கில் நடித்த 'அத்தடு' என்ற படம் இதுவரை தொலைக்காட்சியில் 1,500 தடவைகள் ஒளிபரப்பாகி உள்ளதாம். உலகளவில் எந்தப் படமும் இத்தனை தடவைகள் ஒளிபரப்பப்பட்ட தில்லையாம். 20 ஆண்டுகளுக்கு முன்பு வெளியான 'அத்தடு' படம் தொலைக்காட்சிகளில் அதிக தடவைகள் ஒளிபரப்பான படம் என்ற உலக சாதனையை நிகழ்த்தியிருப்பதை திரிஷா ரசிகர்கள் வலைத்தளத்தில் பதிவுகள் வெளியிட்டுக் கொண்டாடி வருகிறார்கள்.

# காலத்தை வென்ற பாடல்களை எழுதிய தஞ்சை ராமையாதாஸ்!



சினிமா பாடலாசிரியர்களில் கவிஞர் தஞ்சை ராமையாதாஸுக்கு தனியிடம் உண்டு. எம்.ஜி.ஆர். நடித்த 'குலேபகாவலி' (1955) படத்துக்கு ''மயக்கும் மாலைப் பொழுதே நீ போ போ...இனிக்கும் இன்ப இரவே நீ வா வா....'' பாடலும் தந்தவர். 'மாயா பஜார்' படத்துக்கு ''கல்யாண சமையல் சாதம்...'' பாடலும் தந்தவர். காதலை நெஞ்சில் பதிக்கும் 'மணாளனே மங்கையின் பாக்கியம்' படப் பாடலான ''அழைக்காதே! நினைக்காதே! அவைதனிலே என்னை நீ ராஜா'வும் தருவார். நாட்டு நடப்புக்கு என்றும் பொருந்தும்.

'மலைக்கள்ளன்' (1954) படப்பாடலான ''எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே...!'' பாடலும் தந்தவர். புரியாத மொழியில் 'ஜிகினா' வார்த்தைகளைக் கோர்க்கும் இன்றைய கவிஞர்களுக்கும் இவர் அன்றே முன்னோடியாக இருந்திருக்கிறார். 'அமரதீபம்' (1954) படத்தில் ''ஜாலியோ ஜிம்கானா'' பாடலை எழுதியதும் இவரே.

தென்னிந்தியாவில் இப்போதும் கூட இவர் எழுதிய ஒரு பாடல் கிராமத்து திருமண வீடுகளில் ஒலிக்கிறது. மணப்பெண்ணுக்கு அவள் அண்ணன் புத்திமதி சொல்கிற மாதிரி அமைந்த ''புருஷன் வீட்டில் வாழப்போகும் பெண்ணே! தங்கச்சி கண்ணே....'' பாடலைப் போடுவார்கள். 'பானை பிடித்தவன் பாக்கியசாலி' படத்துக்காக இந்தப் பாடலை எழுதியதும் இவர்தான். இப்படி காலத்தால் அழியாக பாடல்களைத் தந்து தமிழ் ரசிகர்களின் நெஞ்சில் நின்றுகொண்டிருப்பவர் தஞ்சை ராமையாதாஸ்.

1939இல் வெளிவந்த 'மாரியம்மன்' படத்தில் இவர் எழுதிய பாடல்தான் சினிமா உலகில் இவரை கவிஞராக அறிமுகம் செய்தது. தொடர்ந்து 250 படங்களுக்கு மேல் எழுதியவர். எழுதிய பாடல்கள் அத்தனையும் அன்றுதொட்டு இன்றுவரை விதந்து பேசப்படுகிறது. தஞ்சை கரந்தை தமிழ்ச் சங்கத்தில் படித்து 'புலவர்' பட்டம் பெற்றார். அத்தோடு, ஆசிரியர் பயிற்சிப் படிப்பையும் முடித்தார். பாடசாலை ஆசிரியராக இருந்தவர். சினிமாவுக்குப் பாட்டெழுத வந்தது எப்படி?

அக்காலத்தில் இவருக்குப் பாட்டெழுதும் ஆர்வம் இருந்திருக்கிறது. அதற்கு எடுத்துக்காட்டாக ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அப்போது தஞ்சை சரஸ்வதி மஹாலில் அடிக்கடி புலவர்கள் கூடி பாடல்கள் பற்றி விவாதிப்பது வழக்கம். அதில் ராஜாவின் அரண்மனைப் புலவர்களாக இருந்தவர்களும் கலந்துகொண்டிருக்கிறார்கள். இந்தச் சபையில் நடந்த பாட்டுப் போட்டியில் அரண்மனைப் புலவர்களும் ஆச்சரியப்படும் விதத்தில் முதல் பரிசாகப் பதக்கம் பெற்றிருக்கிறார். அன்று இவர் சுதந்திரப் போராட்டக் காலத்தில் கட்சியின் கட்டளையை ஏற்று போராட்டத்திலும் கலந்துகொண்டார்.

சுதந்திரம் கிடைத்த பிறகு 'சுதந்திரப் போராட்டத் தியாகி' என்ற வகையில் கிடைத்த பட்டம், பதக்கம் இரண்டையும் வேண்டாம் என்று கூறிவிட்டார். ஆசிரியர் பணியைத் தொடரும்போதே நாடகத் துறையிலும் நாட்டம் ஏற்பட, ஒரு நாடகக் குழு அவரை தன் சபாவில் வாத்தியராக ஏற்றுக்கொண்டது. நாடக கதை வசன பாடலாசிரியருக்கு 'வாத்தியார்' என்ற பெயர் நிலைத்துவிடும். இந்த வகையில் நாடகத் துறையில் 'வாத்தியார்' ஆனார். 'மச்ச ரேகை', 'பகடை பவளக்கொடி', 'விதியின் வெற்றி', 'அல்லி அர்ஜுனா', 'வள்ளி திருமணம்' போன்ற நாடகங்களையும் நடத்தி வந்தார்.

அதே ஊரில் அறிஞர் அண்ணாவின் 'வேலைக்காரி', 'ஓர் இரவு' போன்ற நாடகங்களை கே.ஆர்.ராமசாமி நடத்தி வந்தார். இரண்டு குழு நாடகங்களுக்கும் ரசிகர்களின் ஆதரவு அமோகமாக இருந்தது. இவரின் வசனமும் பாடல்களும் மேடையில் பிரபலம் என்பதால் இவரது புகழ் சினிமாத் துறையிலும் பரவ ஆரம்பித்தது. இதனால் இவருக்கு சினிமாவில் பாட்டெழுத வாய்ப்பு வந்தது. இவரை சிறந்த கவிஞராக கண்டுகொண்ட சேலம் மொடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனம் அப்போது தயாரித்து வந்த ''ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி' படத்துக்குப் பாடல் எழுத வாய்ப்புக் கொடுத்தது. அந்தப் படத்துக்கு ''வெச்சேனா வெச்சதுதான்...'' என்று ஒரு பாடலை எழுதிக் கொடுக்க அப்பாடல் ஹிட்டானது.

இவர் மொடர்ன் தியேட்டர் கவிஞராகவே மாறிவிட்டார். இவரின் பாட்டெழுதும் திறமையைக் கண்டுகொண்ட நாகிரெட்டியாரின் விஜயா – வாகினி நிறுவனம் 1951 முதல் 1960 வரை அந்த நிறுவனம் தயாரித்த 'பாதாள பைரவி', 'மிஸ்ஸியம்மா', 'மாயா பஜார்' போன்ற பல படங்களுக்கு வசனம், பாடல்கள் எழுதி ஆஸ்தான கவிஞர் என்ற தகுதியிலும் நிலைத்தார்.

அன்று இசையுலகில் கொடி கட்டிப் பறந்த இசை மேதைகள் சி.ஆர்.சுப்பராமன், எஸ்.எம்.சுப்பையாநாயுடு, ஜி.ராமநாதன், எஸ்.வி.வெங்கட்ராமன், கே.வி.மகாதேவன், விஸ்வநாதன் ராமமூர்த்தி, கண்டசாலா, எஸ்.நாகேஸ்வரராவ், ஆதிநாராயணராவ் ஆகியோரின் இசையமைப்பில் இவர் பாடல்கள் எழுதிக் குவித்தார். ஸ்ரீதரின் முதல் படமான 'அமரதீபம்' (1956) படத்துக்காக ஒரு பாடல் கேட்க இவர், ''ஜாலிலோ ஜிம்கானா டோலியோ கும்கானா'' என்று எழுதிக் கொடுத்தாராம். இதற்கு என்ன அர்த்தம் என்று ஸ்ரீதர் கேட்க, ''கதைப்படி இது குறவன் குறத்தி பாடும் பாட்டு, குறவர்கள் பாஷை எனக்கும் தெரியாது, உனக்குப் புரியாது, போய் தைரியமாக ரிக்கார்டிங் செய்'' என்றாராம். அப்படம் ஸ்ரீதருக்கு வெற்றியைக் கொடுத்தது. இப்பாடலால் தஞ்சை ராமையாதாஸுக்கு 'டப்பாங்குத்து பாடலாசிரியர்' என்ற பெயரும் வந்துசேர்ந்தது.

கலைஞர் மு.கருணாநிதி அவரின் மேகலா பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்து வந்த 'குறவஞ்சி' (1959) படத்துக்கு ஒரு பாடல் எழுதச் சொன்னாராம். உடனே, ''ரா.. ரா.. ரா..'' என்ற மெட்டு வர ஒரு பாடலைக் கொடுத்தாராம். ஒரு முறை இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன் தனது 'தங்கரத்தினம்' படத்துக்கு ஒரு பாட்டு கேட்டார். பல்லவியில் 'உதயசூரியன்' என்ற வரி வரும்படி கேட்டுக்கொண்டார்.

உடனே தஞ்சை ராமையாதாஸ், ''எதையும் தாங்கும் மனசு. என்னை ஏமாத்தப் பாக்கும் வயசு என் இதயவானிலே உதயசூரின் எழுந்ததுதான் புதுசு'' என்று எழுதிக் கொடுத்தார். சினிமாவில் கேட்டது கிடைக்கும் என்பது இவரிடம்தான். இயக்குநர்கள் எந்த மாதிரி விரும்புகிறார்களோ அந்த மாதிரி பாடல்களை கொடுப்பார். இவர் பிஸியான கவிஞராக இருந்த நேரத்தில் கவிஞர் கண்ணதாசனும் பாட்டெழுத வந்துவிட்டார். அவர் அப்போது 'மாலையிட்ட மங்கை' படத்தையும் தயாரித்தார். அந்தப் படத்துக்கு பாட்டு எழுத இவரை கேட்டுக்கொண்டார்.

அன்று இவர் பிஸியாக இருந்தபடியால் எழுதிக்கொடுக்க முடியவில்லை. இதனால் தஞ்சை ராமையாதாஸோடு கண்ணதாசனுக்கு ஒரு மனக்கசப்பு ஏற்பட்டதாம். அந்தக் காலத்தில் 'கதை வசனம் பாடல்கள் ஒருவரே' என்ற நிலையைத் தொடங்கி வைத்த முதல் கவிஞர் தஞ்சை ராமையாதாஸ் என்பதில் ஐயமில்லை.

**கலாபூஷணம்**
**கல்லொளுவை பாரிஸ்.**

# வீர அபிமன்யு

## ஸ்வீட் கிக்ஸ்டி

ச.சுந்தரதாஸ்

மகாபாரதத்தில் அபிமன்யு, வத்சலா காதல் மிகவும் பிரசித்தமானது. இந்தக் காதலை அடிப்படையாகக்கொண்டு மூன்று தடவைகள் அபிமன்யு கதை தமிழில் படமானது. 1940களில் ஜூபிடர் தயாரிப்பில் அபிமன்யு படமாகி வெற்றி கண்டது. தொடர்ந்து 1950களில் விஜயா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் மாயா பஸார் வெளிவந்து பெரும் வரவேற்பைப் பெற்றது. 1960களில் இதே அபிமன்யு, வத்சலா காதலும் அபிமன்யுவின் வீரமும் வீர அபிமன்யு என்ற பெயரில் படமானது.

முதல் அபிமன்யுவின் யூ.ஆர்.ஜீவரத்தினம் - குமரேசன் ஜோடியாக நடிக்க, எம்.ஜி.ஆர். அர்ச்சுனனாக நடித்தார். இரண்டாவதில் ஜெமினி - சாவித்திரி ஜோடியாக நடிக்க, எஸ்.வி.ரங்கராவ் கடோஜ்கஜானாக நடித்தார். மூன்றாவதில் ஏவி.எம்.ராஜன் - காஞ்சனா ஜோடி சேர்ந்தார்கள்.

மாயா பஸாரில் அபிமன்யுவாக நடித்த ஜெமினி இதில் கிருஷ்ணராக நடித்தார். படத்தில் அவருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் விதத்தில் காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. இதனால் இரண்டு ஹீரோக்களைக்கொண்ட படமாக வீர அபிமன்யு அமைந்தது.

அபிமன்யுவை வயிற்றில் சுமந்தபடி அரைத் தூக்கத்தில் கதை கேட்கிறாள் அர்ச்சுனன் மனைவி சுபத்திரை. போர் நடக்கும்போது பத்ம வியூகத்தை உடைத்துக்கொண்டு அதனுள் நுழைந்து போரிடுவது எப்படி என்பதை அர்ச்சுனன் சொல்ல, தாயின் கர்ப்பத்தில் இருக்கும் அபிமன்யு அதனைக் கேட்டு 'உம்' கொட்டுகிறான்.



உள்ளே நுழைந்த பத்ம வியூகத்திலிருந்து வெளியேறுவது எவ்வாறு என்பதை



அர்ச்சுனன் சொல்லத் தொடங்க, திடீரென அங்கு வரும் கிருஷ்ணா பகவான் இடையூறு செய்து அவ்வாறு சொல்வதைத் தடுத்து விடுகிறார். அபிமன்யு வளர்ந்து உத்திரையை சந்தித்து இருவரும் காதலில் மூழ்குகிறார்கள் . கல்யாணமும் நடைபெறுகிறது. அஞ்ஞானவாசம் முடித்து நாடு



திரும்பும் பாண்டவர் தங்களுக்கு ஐந்து கிராமங்களையாவது தருமாறு கேட்டு கிருஷ்ணரை கௌரவர்களிடம் தூது அனுப்புகிறார்கள். கிருஷ்ணா தூது தோல்வியில் முடிகிறது.

பாண்டவர், கௌரவர்களிடையே குருஷேத்திர போர் வெடிக்கிறது. போரில் புயல் என கலந்து கொள்ளும் அபிமன்யு பத்ம வியூகத்துக்குள் ஊடுருவிச் சென்று போரிடுகிறான். ஆனால், பத்ம வியூகத்தைத் தகர்த்து வெளியேறும் வித்தை அவனுக்குத் தெரியாமல் போகிறது. எதிரிகளால் சூழப்படுகிறான் அவன்.

மகாபாரதத்தில் காதலும் வீரமும் கலந்து சுவை சேர்க்கும் அபிமன்யு கதையை ஓரளவு பிரம்மாண்டமாக படமாகத் தயாரித்தார் சுந்தராவ் நஹதா. அரங்க அமைப்புகள், காட்சி ஜோடனைகள், தந்திரக் காட்சிகள் என்று படம் உருவாகி யிருந்தது. அபிமன்யுவாக ஏவி.எம்.ராஜன், உத்தரையாக காஞ்சனா இருவரும் நடித்தனர். இருவரும் தோன்றும் காதல் காட்சிகள் ரசனையுடன் படமாக்கப்பட் டிருந்தன. அதேபோல் அபிமன்யுவை போருக்குப் போகாது அவனை சிற்றின் பத்தில் ஈடுபடச் செய்யும் நோக்கில் பாடும் பாட்டில் காஞ்சனாவின் நடிப்பு மிளிர்ந்தது. ஏவி.எம்.ராஜனும் இளமையுடன் காட்சியளித்தார்.

கிருஷ்ணராக வரும் ஜெமினி, பாத்திரத் துக்கு பங்கம் வராமல் நடித்திருந்தார். அவருடைய வசன உச்சரிப்பு, பாவனை, நடிப்பு எல்லாம் கிருஷ்ணராக அவரை நிரூபித்தது. அர்ச்சுனனாக வரும் பாலாஜி இடையில் பெண் வேடம் அணிந்து வரும் கட்சியில் நம்மைக் கவருகிறார். நாகேஷ் இல்லாத படமா! இதிலும் இருக்கிறார். முடிந்த வரை சிரிக்க வைக்கிறார். ஆனால், வீர கடோஜகஜானாக வரும் ஓ.ஏ.கே.தேவர் நடிப்பும் கவரத்தான் செய்கிறது. இவர்களுடன் டி.கே.பகவதி, எஸ்.வி.சகஸ்ரநாமம், எஸ்.வரலஷ்மி, எம்.கே.முஸ்தபா, ஈ.ஆர்.சகாதேவன், கீதாஞ்சலி ஆகியோரும் நடித்திருந்தனர்.

படத்துக்கான வசனங்களைப் புது வசனகர்த்தா எஸ்.ஐ.பெருமான் எழுதியிருந்தார். ஆங்காங்கே அவரின் வசனங்கள் பளிச்சிட்டன. படத்தை ரவி ஒளிப்பதிவு செய்தார். பசுமர்த்தி கிருஷ்ணமுர்த்தி, வெம்பட்டி சத்யம் இருவருடைய நடன அமைப்புகள் சிறப்பாக அமைந்தன. கிருஷ்ணாராவின் அரங்க அமைப்புகளும் தரமாக இருந்தன. புராண படங்களுக்கு இந்தத் தகுதிகள் தேவைதானே.

வீர அபிமன்யுவுக்கு மகுடமாக அமைந்தது அதில் இடம்பெற்ற பாடல்கள்தான். கண்ணதாசன் கண்ணதாசன் தான் என்பதை நிரூபிக்கும் விதத்தில் பாடல்களைப் புனைந்திருந்தார் அவர். ''பார்த்தேன் சிரித்தேன் பக்கம் வரத் துடித்தேன்'' பாடல் தேனாய் இனித்தது. ''போவோம் புது உலகம்'', ''வேலும் வில்லும் விளையாட'' பாடல்கள் இலக்கிய சுவையை சொரிந்தன. ''நீயும் ஒரு பெண்ணானால் நிலவே மறையாதே'' பாடல் சிருங்கார சுவையில் உத்திரையின் மனக்குமுறலை வெளிப்படுத்துவதுவதாக ஒலித்தது.

கள்ளத்தனமே உருவாய்கொண்ட ''காரியக் கண்ணா வா'' பாடல் கண்ணனை சிறுமைப்படுத்துவதாகத் தொடங்கி பின்னர் மேன்மைப்படுத்துவதாக கவிஞரால் எழுதப்பட்டது. படத்துக்கான இசை திரை இசைத்திலகம் கே.வி.மகாதேவன்.



உண்மையில் 'மகா'தேவன்தான்!

படத்தை பிரபல தெலுங்கு பட இயக்குநர் கே.காமேச்வரராவ் இயக்கியிருந்தார். தமிழிலும், தெலுங்கிலும் ஒரேசமயத்தில் படம் தயாரானது. தெலுங்கில் அபிமன்யுவாக சோபன்பாபு நடிக்க, கிருஷ்ணராக என்.டி.ராமராவ் நடித்தார். இரு படத்திலும் காஞ்சனாதான் ஹீரோயின். தெலுங்கில் நூறு நாட்கள் ஓடி வெற்றி கண்ட படம் தமிழில் ஏனோ வெற்றி பெறவில்லை. ஆனாலும் படத்தின் பாடல்கள் இன்றும் ரசிகர்களால் சிலாகிக்கப்படுகின்றன!

suntheradas@hotmail.com

# சுவனத்தைத் தரிசிக்கும் ரமழான்

ஊர் உறங்கி விழித்தெழும்
வைகறைப் பொழுதினில்
அல்லாஹ்வின் ஆணைக்கு அடிபணி
"ஸஹர்" செய்து
பகலவன் அஸ்தமிக்கும் வரை
உண்ணாமல், பருகாமல்
ஐம்புலன்களையும் அடக்கியாளும்
சங்கை மாதம் ரமழான்..!

அகிலத்தின் அருட்கொடையாம்
அறிவுக்கருவூலம்
அல் குர் ஆனை ஓதி
ஏழைகளின் துயர் துடைக்கும்
ஸகாத், ஸதக்காவை
வாரி வழங்கிடச் செய்யும்
இனிய மாதம் ..!

சிரம் தாழ்த்தி
பர்ளு, சுன்னத்தான தொழுகைகளை
உள்ளச்சத்துடன் தொழுதிடும் மாதம்..
இறையோனிடம் இருகரமேந்தி
பாவக் கறைகளை
கல்பினில் அகற்றி
தெளபாச் செய்திடும் மாதம்..

ஆயிரம் மாதங்களுக்கும் மேலான
மகத்துவமிக்க நன்னாள்
"லைலத்துல் கத்ர்" இரவின்
கண்ணியமிக்க மாதமாக
கிரீடம் சூடிய
அருள் மிகு மாதம் ரமழான்..!

நோன்பாளிகள்
" றையான்" எனும்
சுவனத்தைத் தரிசிக்கும்
புகழ் நிறைந்த மாதம் ரமழான்..!

**கிண்ணியா
ஜெனீரா தெளபீக் ஹைருல் அமான்**



# இயந்திரப் பறவை!

நாஸா தொட்டிலுக்குள் நீந்தும் நீ
ஓர் உயிர் ஊதப்பட்ட
இயந்திரப் பறவை..!

வியந்து நோக்கும் இன்றைய
விண்ணின் வினோதம் நீ
இலத்திரனை வெல்ல எத்தனை
தந்திரங்கள் உன்னிடம்..!

மரணத்தை மிஞ்ச மட்டும் உன்
நுட்பங்கள் எல்லாம்
அற்பங்களாகிப் போனதே..!

உயிர் பிச்சை மட்டும் அந்த
ஒருவனால்தான் சாத்தியம்
இதுதான் சத்தியம்
இரும்புத்தாயே..!

சாதிப்புக்கிரீடம் சூடியே
சமாதியாகும் சவால்களோடு
இயந்திர இறக்கைகள் விண்ணை
கிழிக்க விரைந்தாயே வீரத்தாயே..!

உனின் ஒருமை ஒப்பீட்டுக்கு
உலகில் ஏதுமில்லை நீ
தரைக்குத் திரும்பும் தகவல்

கோடை மழை குளிரு போல
எம் மனதுகளுக்குள்
நுழைகிறது..!

தரணியே - உன் தீரத்
திருவிழாவை கொண்டாடக்
காத்துக் கிடக்கிறது

காற்று கனமாய் அடித்தாலோ
கழன்று விழுந்து விடப்பார்க்கிறது
எங்கள் இதயம் ..!

மின்தூக்கியில் மின்
துண்டிப்பானாலோ வெடித்து
விடப்பார்க்கிறது இதயம்..!

உ(வி)ன் கலம் செயல் இழப்புக்
குள்ளும் உன் புன்னகையில்
வியந்து நிற்கிறது வையம் !

இரும்பால் படைத்தானோ உன்
இதயத்தை இறைவன் என
எனக்குள் தொக்கி நிற்கிறது ஒரு
வினா..!

உடற்பயிற்சி
உளப்பயிற்சிகள்தான்
இருநூற்றெழுபது பொழுதுகள்
உயிர்வாழ்வதாய் சொன்னாயே..!

நாளைய நம் பிள்ளைகளுக்காய்
இலத்திரனியல் பாடம் கற்க
உயிரை உரமாக்குகிறாயே..!

நீ ஒரு புதுமைப்பெண் பாரதி
இருந்திருந்தால் உலகுக்குக்கொரு
கவி உன்னால் கிட்டியிரும்...!

அடுப்பங்கரைக்கு செல்லவும்
ஆள்தயவு தேடும் ஐம்பத்தொன்பது
அகவை ஆச்சிகளுக்குள் ஆளுமை
சிங்கம் தான் ...வாழும்
தங்கம்தான்..!

வெட்டி வீசிய வாழைமரமாய்
வாழ்ந்து போனார் சிலர்
வீழ்ந்து போனது முகவரிகள்..!

நீயோ சரித்திர
நூலாகிப்போனாயே
ஒவ்வொரு பக்கங்களும்
மீண்டும் மீண்டும்
சுவாரஸ்யங்கள்தானே..!

சாதிப்புகளை எழுதலாம் உனை
எழுத செந்தமிழால் இயலாது
தொலைதூரம் உனக்கு தொழில்
தூரம் தொல்லை தூரமாச்சோ..

பல் துலக்குகிறாய் பகல்
இரவும் கணிக்கிறாய் படுக்கை
அறையையும்
பள்ளி மாணவர்களுக்கு
பாடமாய் கற்பிக்கிறாய்...!

இவைகள் விண்வெளி
வினோதங்கள் இல்லையா..
உன் தாயகத் திரும்பலுக்கு முன்..

என் சின்னச்சின்ன ஆசை
உன்னோடு விண்ணில்
சிறகடிக்க ஆசை !

**- இல்மி அஹமட் லெப்பை-**

# மனிதனை புனிதனாக்கும் ரமழான்

மனிதனை புனிதனாக்கும் ரமழான்!
மாண்புடன் வாழ வைக்கும் ரமழான்!

முப்பது நோன்பினை
முழுமையாய் நோற்று
மனிதனை புனிதனாய் மாற்றும்
மாண்புமிகு ரமழான்!
ஐம்பெரும் கடமைகளில்
மூன்றாம் கடமையினை
முனைப்புடன் ஏற்று
முழுமையாய் நோற்று
வாழ்வினை மாற்றும்
வல்லல் நபியின் போதனையிது!

நோன்பினை நோற்பதால்
வாழ்க்கையில் வசந்தம் வீசும்
நோய் நொடிகள் நீங்கி
நோயற்ற வாழ்வு கிடைக்கும்
நோய்களுக்கு நிவாரணமளிக்கும்
உயரிய செயல் நோன்புக்குண்டு
முப்பது நாள் நோன்பிருந்து
இறைவணக்கம் இனிதே செய்து
புனித கடமையினை
மனிதா நிறைவேற்று
பாவங்கள் அழிந்துவிடும்
பாலகனாய் மீண்டெழுவாய்!

மனிதப்புனிதனாய் ஆகிவிட்டால்
அத்தோடு முடிந்துவிடாது
அதன் பின்னும் உன் வாழ்வு
செழிப்பாக இருப்பதற்கு
செல்வங்களை அள்ளிக் கொடு
இல்லாத ஏழைகளுக்கு
சக்காத் என்னும் கடமையுண்டு
உழைக்கும் பணத்தில்
கழிவகற்றும் வேலையிது!
கறைபடிந்த பணத்தை வைத்து
மறைசொன்ன சக்காத்தினை
மறவாது கொடுத்து விடு!

நோன்போடு சக்காத்தும்
இணைந்த கடமை
இரண்டையும் நிறைவேற்று
இனிய வாழ்வு உனக்குண்டு
பணம் படைத்தவன் பாவியாகாமல்
மறைசொன்ன சக்காத்தினை
மறவாது கொடுக்க வேண்டும்
மறுமை வாழ்வு சிறப்பாகும்
ரமழானோடு இணைந்த
ரம்மியமான வாழ்கையினை
வாழ்ந்து கொள்ளென்று
வாய்மொழிகிறது ரமழான் .

**எச். எம். இக்பால் கான்,
காத்தான்குடி.**




# அழுக்காறு

அழுக்காறு கொண்டவர்கள்
நிதம் அழிவது திண்ணம்

வழுக்காது இது அவர்கள்
வாழ்வில் நடக்கும்

இழுக்கு அவரை என்றும்
இழுத்து உறவாடும்

பழியெல்லாம் தலை மேல்
பாழாய் சூழும்

விழி கெட்டு குருடாகி
வீழ நேரும்

வழி இன்றி வாழ்வில்
பால்மிடி சூழும்

உலகம் எல்லாம் கூடி
உமிழ்ந்து தூற்றும்

விலகாக் கொடிய நோயும்
விரைந்து அண்டும்

உளலும் கடும் துன்பத்தில்
உருகிக் கரைவான்

பழகும் மக்கள் கண்டு
பயந்து ஒதுங்குவர்

வலி அறியாது கால்கள்
வலிமை குன்றும்

சூழலிலும் பகை சூழ்ந்து
சுட்டு எரிக்கும்.

**-அஜீரா கலீல்தீன்-**

---

# நல்ல மனசு

''எதுக்குடி அறுந்த செருப்போடவே இருக்கே? அந்த மரத்தடியில செருப்புத் தைக்கிற பெரியவர்கிட்ட போய் தச்சுக்க வேண்டியதுதானே. பெரியவர் பெண்ணுங்கனா காசு கேக்க மாட்டார். சரியான ஜொள்ளு பார்ட்டி. சுமாரா இருக்குற எனக்கே நேத்து ஓசியில தச்சுக் குடுத்தார்... நீ பாக்கறதுக்கு அப்படியே தமன்னாவாட்டம் பளபளனு இருக்கே. உன் காலைப் பார்த்துக்கிட்டே மடமடனு செருப்பைத் தைச்சுக் குடுத்துடுவார் பார்.''

அவளும் வேறு வழியின்றி, அந்த பெரியவரிடம் போக, செருப்பை வாங்கிய பெரியவர் மளமளவென வேலையை ஆரம்பித்தார்.



தைத்த செருப்பைக் காலில் அணிந்ததும், ''கூலி எவ்வளவு?'' என்றாள்.

''என்னம்மா இது? உன்கிட்ட காசு வாங்குவனா கண்ணு! கிளம்பு'' என்றார் பெரியவர்.

''பாத்தியாடி? நான் சொல்லலை... பெருசு ஜொள்ளு பார்ட்டிடி!'' என்று கிசுகிசுத்தாள் தோழி.

''உஷ்...'' என அவளை அதட்டி விட்டு, ராஜீ ஒரு நூறு ரூபா நோட்டை எடுத்துப் பெரியவர் முன் வைத்தாள்.

''எடுத்துக்கங்க. இனி யாருக்கும் ஓசில செருப்பு தச்சிக் குடுக்கக் கூடாது. கூலியைக் கறாரா கேட்டு வாங்கிடணும். அப்பத்தானே உங்க பெண்ணைக் காலேஜ்ல படிக்க வைக்க முடியும்? நம்ம பொண்ணு கூட காலேஜ்ல படிக்கிற பொண்ணுங்கதானேனு ஒரு பிரியத்தில யாருக்கும் ஓசில தச்சுக் குடுக்காதீங்க அப்பா!'' என்றாள் அவள் கண்ணீருடன்.

இந்த உலகில் நாம் செய்யும் உதவி, சிலருக்கு ஏளனமாகத் தெரியலாம், தேவையானவர்களுக்கு மட்டுமே உதவுவோம், தேவையற்றவர்களுக்கு அல்ல...




# பீர்பாலின் சமயோசித புத்தி

அக்பருக்கு பீர்பால் மேல் மரியாதை இருந்தாலும் அவருக்கும் மனிதர்களுக்கே உரிய பொறாமை இருந்தது. (அரசர் என்றாலும் மனிதர்தானே) எப்படி அனைவரையும்விட புத்திசாலியாக இருக்கிறார். இவரை எப்படி மட்டம் தட்டுவது என்று யோசித்தார்.

நாம்தான் அரசர் ஆயிற்றே. அந்த அதிகாரத்தில் அனைவர் முன்னிலையிலும் அடிப்போம் என்ன செய்துவிடுவார் என்று நினைக்கிறார் அக்பர்.

அதன்படி அரசவை கூடியதும் பீர்பாலை அழைக்கிறார். ஒன்றும் பேசாமல் அனைவர் முன்னிலுயிலும் கன்னத்தில் ஓங்கி அறைகிறார்.

அனைவருக்கும் படு அதிர்ச்சி. பீர்பால் அப்படி என்ன தவறு செய்துவிட்டார் என்று.

பீர்பால் ஒரு கணம் மட்டுமே யோசித்தார். மறுவினாடி பக்கத்தில் இருந்த அமைச்சர் ஒருவரை ஓங்கி கன்னத்தில் அறைந்தார்.

அவருக்கு பொறி கலங்கியது.

பீர்பால் சொன்னார். நீங்கள் உடனே மற்றவர் கன்னத்தில் அறையுங்கள். பின் அவர் மற்றவர் கன்னத்தில் அறையவேண்டும். இது அரசர் ஆரம்பித்து வைத்த விளையாட்டு.



உடனே அந்த அமைச்சர் மற்ற அமைச்சரை அறைய இப்படியே நாடு முழுவதும் ஒருவர் மாற்றி ஒருவர் அறைந்துகொள்கின்றனர்.

கடைசியாக அரண்மனை அந்தப்புரத்தில் விளையாட்டு நுழைகிறது. ராணியின் தோழிகள் ஒருவர் மாற்றி ஒருவர் அறைந்து கடைசியாக ராணி அடி வாங்குகிறார்.

ராணி அதிர்ச்சியடைந்து விபரம் கேட்க, தோழிகள் இது அரசர் ஆரம்பித்த விளையாட்டாம். இதை நீங்கள் அவரிடமே முடித்து விடுங்கள் என்கிறார்கள்.

இரவு மன்னர் ஆசையாய் ராணியை பார்க்க வர ராணி அக்பர் கன்னத்தில் ஓங்கி அறைகிறார்.

மன்னர் பொறி கலங்கி நிற்க ராணி சொன்னாராம்.

''இது பீர்பாலிடம் நீங்கள் காலையில் ஆரம்பித்த விளையாட்டாம். நான் அதை உங்களிடமே முடித்துவிட்டேன்'' என்று.

இதுதான் சமயோசித புத்தி



# மனிதன் விரும்பிய வயது

கடவுள் ஒரு நாள் கழுதையைப் படைத்து அதனிடம், "நீ ஒரு கழுதை. காலை முதல் மாலை வரைக்கும் நீ உழைக்க வேண்டும். உன் மேல் சுமைகள் இருக்கும். நீ புல்தான் சாப்பிட வேண்டும். உனக்கு அவ்வளவாக அறிவு இருக்காது. நீ 50 வருடங்களுக்கு வாழ்வாய்'' என்று சொன்னார்.

இதற்கு கழுதை, ''நான் கழுதையாக இருக்கிறேன். ஆனால் 50 வருடம் ரொம்ப அதிகம். எனக்கு 20 வருடம் போதும்" என்றது.

கடவுள் கழுதையின் ஆசையை நிறைவேற்றினார்.

அடுத்து ஒரு நாயைப் படைத்து அதனிடம், "நீ மனிதனின் வீட்டைக் காக்கும் காவலன். அவனுடைய அன்பு தோழனாக இருப்பாய். மனிதன் உண்ட பிறகு உனக்கு கொடுப்பான். நீ 30 வருடங்களுக்கு வாழ்வாய்" என்று சொன்னார்.

இதற்கு நாய் கூறியது,

"கடவுளே, 30 வருஷம் ரொம்ப அதிகம். எனக்கு 15 வருஷம் போதும்."

கடவுள் நாயின் ஆசையை நிறைவேற்றினார்.

அடுத்து கடவுள் குரங்கைப் படைத்து அதனிடம், "நீ ஒரு குரங்கு. மரத்துக்கு மரம் தாவ வேண்டும். நீ வித்தைகள் காட்டி மற்றவர்களை மகிழ்விப்பாய். நீ 20 வருடங்களுக்கு வாழ்வாய்" என்று சொன்னார்.

இதற்கு குரங்கு கூறியது, "20 வருஷம் ரொம்ப அதிகம். 10 வருஷம் போதும்."

கடவுளும் குரங்கின் ஆசையை நிறைவேற்றினார்.

கடைசியாக மனிதனைப் படைத்து அவனிடம், "நீ ஒரு மனிதன். உலகிலுள்ள ஆறு அறிவு ஜீவன் நீ மட்டுமே. உன் அறிவை கொண்டு மற்ற மிருகங்களை ஆட்சி செய்வாய். உலகமே உன் கையில். நீ 20 வருடங்களுக்கு வாழ்வாய்" என்று சொன்னார்.

இதற்கு மனிதன் கூறினான்.

"20 வருஷம் ரொம்ப குறைவு. கழுதை வேண்டாம் என்ற 30 வருடங்களையும் நாய் வேண்டாம் என்ற 15 வருடங்களையும் குரங்கு வேண்டாம் என்ற 10 வருடங்களையும் எனக்குக் கொடுத்து விடு."

மனிதனின் ஆசையை கடவுள் நிறைவேற்றினார்.

அன்று முதல் மனிதன் முதல் 20 வருடங்களை ஜாலியாக வாழ்கிறான் மனிதனாக.

கல்யாணம் செய்து கொண்டு அடுத்த 30 வருடங்களை கழுதைபோல் எல்லாம் சுமைகளைத் தாங்கிக்கொண்டு, அல்லும் பகலும் உழைக்கிறான்.

குழந்தைகள் வளர்ந்த பிறகு, அடுத்த 15 வருடங்களுக்கு அவன் வீட்டின் நாயாக இருந்து, அனைவரையும் பாதுகாத்துக் கொள்கிறான். மிச்ச மீதி உள்ளதைச் சாப்பிடுகிறான்.

வயதாகி, ஓய்வுபெற்ற பிறகு குரங்குபோல் 10 வருடங்களுக்கு மகன் வீட்டிலிருந்து மகள் வீட்டுக்கும் மகள் வீட்டிலிருந்து மகன் வீட்டுக்கும் தாவி தன் பேரக்குழந்தைகளுக்கு வித்தைகள் காட்டி மகிழ்வித்து மரணிக்கின்றான்.



# நம்ம தோட்டம் 07

## “சீனி சாடியும் கருப்பட்டி துண்டுகளும்”

அருணா

வீடுகளுக்கு விருந்தாடியோ பக்கத்து வீட்டுக்காரவங்களோ வந்திட்டா தேத்தண்ணி கொடுக்கிறது வழக்கம்.

யார் வீட்டுக்குப் போனாலும் பால்தேத்தண்ணிதான் கொடுப்பாங்க. ஏன்னா எல்லா வீட்லயும் மாடு இருக்கிறனால பால் தட்டுப்பாடெல்லாம் இருக்காது.

ஒருசில வீட்லதான் பக்கட் மா பாவிக்கிறது வழக்கமா இருக்கும். ‘விட்டாமில்க்’ அப்பிடின்னு ஒருவகையான பால்மா இருந்திச்சி.

தேத்தண்ணி சும்மா சிறப்பா இருக்கும். தேயிலை வாசம், கறுப்பான சாயம், தேத்தண்ணி கோப்பையில முக்கால்வாசி பால் கலந்திருக்கும்.

இப்பிடி ஒரு தேத்தண்ணிய குடிச்சிட்டுதான் பத்து பதினொரு மணிவரைக்கும் பசியே வராம இருக்கிறது.

கேஸ்டிக்குன்ற பேச்சே இருக்காது.

இப்பிடி தாராளமா தேத்தண்ணி கலவைக இருக்கிறப்ப சீனிய மட்டும் சாடியிலதான் வைப்பாங்க.

சீனிய சாடியில வைக்கிறது ஒரு காலத்தில ஏளனமா பாத்தாங்க. ஆனா, இப்பையெல்லாம் பெரிய பெரிய ஓட்டல்கள்ல சீனிய வேறையா வைக்கிறதுதான் நாகரீகமா போச்சி.

அவுங்கவுங்களுக்குத் தேவையான அளவு போட்டுக்கிருவாங்க.

சீனிய தாராளமா போட்டு கட்டாயத்தில குடிக்க வைக்கிற நிலைமையெல்லாம் அப்ப இல்ல.

மாச கடைசியா இருந்தா கொஞ்சம் சாமான் சட்டு முட்டெல்லாம் தட்டுக்கட்டுரும்.

அந்த நேரங்கல்ல கருப்பட்டி துண்டுகத்தான் இருக்கும்.

கருப்பட்டில தேத்தண்ணி குடிச்சா, கொஞ்சம் ஒரு மாதிரிதான் பாப்பாங்க.

இப்பையெல்லாம் அது பெசனா போயிருச்சி.

அட ஒரு காட்டம் குடிச்சாலும் அந்த தேயிலை வாசமே மனசுக்கு இதமா இருக்கும்.

ஸ்டோரு பக்கம் பேனாலே, தேயிலைத்தூள் வாசம் ரொம்ப இதமா இருக்கும். பஸ்ல போற நேரம் வாந்தி வர்ற மாதிரி இருந்தாலும் இந்த வாசத்த முகர்ந்ததும் நல்லா போயிரும்.

இப்பையெல்லாம் தூளு வாசம் எங்க போயிரிச்சின்னே தெரியல.

சனிக்கிழமை, மத்தது ஸ்கூல் லீவு கொடுத்ததுக்கப்புறம் மலைகளுக்கு தேத்தண்ணி கொண்டுபோறதும் ரொம்ப சந்தோசமா இருக்கும்.

வீட்ல அக்காமாருக ஊத்தி கொடுக்கிற தேத்தணியையும் சாப்பாடையும் எடுத்துக்கிட்டு போவோம்.

காலை நிறுவ முடிஞ்சதுக்கப்புறமா அம்மாமாறு பொட்டல், கானு இப்பிடி ஏதாவது ஓர் இடத்தில் ஒன்னா உக்காந்து சாப்பிடுவாங்க.

பொட்டல்னா, ஏதாச்சும் ஓர் இடந்தா இருக்கும். இப்ப என்னாடானா, பொட்டலை தவிர தேயிலை மரங்கல பாக்கிறதுக்கே அபூர்வமா இருக்கு.

அப்பையெல்லாம் நூறு மீற்றர் நடந்தாலே இருவது கிலோ கொழுந்து எடுத்திரலாம்.

இப்ப இருவது கிலோ கொழுந்து எடுக்க எத்தனை கட்ட நடக்கணும். அவ்வளவு பொட்டல்.

நாள் சம்பளத்தில் நடை கூலிய எங்க சோக்கிறாங்க.

ஒரு கட்டத்தில் “தோட்டம் செழித்திட தேயிலைகளுக்கிடையே இடைவெளி வேண்டும். குடும்பம் செழித்திட பிள்ளைகளுக்கு இடையே இடைவெளி வேண்டும்” அப்பிடினுதான் பிரசாரம் செய்தாங்க.

தேயிலைகளுக்கிடையே சொன்ன இடைவெளி, தோட்டங்களையே இல்லாமல் ஆக்கிரிச்சி.

பிள்ளைகளுக்கு இடையில் சொன்ன இடைவெளி நம்ம சனத்தொகையையே கொறைச்சிரிச்சி.

ரொம்ப நல்ல முன்னெடுப்பு, இல்லையா?

ஒரு சமூகம்தான் அழியும்னு நெனைச்சாங்க. இது ஒட்டுமொத்த நாட்டுக்கும்தான் சாபமா போனிச்சி இல்லையா?

கொண்டு வந்த ரொட்டில ஒரு துண்ட வாங்கி சாப்பிட்டு தேத்தண்ணில கொஞ்சம் வாங்கி குடிச்சிட்டு, தேயிலை கொட்ட புடுங்க தொடங்கிருவோம்.

ரெண்டு நெறைகளுக்கு நடுவுல பாத்தா, அப்பிடியே சொரங்கம் மாதிரி நீட்டமா தெரியும்.

நெலத்தில ஒரு புல்லு இருக்காது. அங்கங்கயும், கானு ஓரங்கல்லேயும், பவுண்டரத்திலையும் பொன்னாங்காணி, வல்லாரை, தவசிமுருங்க, தக்காளி கீரை இப்பிடி வகை வகையா கீரைகளாதான் இருக்கும்.

அம்மாமாறு வர்ர நேரம் எப்பிடியும் புடிங்கிட்டு வருவாங்க. சில மலைகள்ல கானுக ஓரமா கானு கொச்சிக்கா கன்னுகளும் இருக்கும்.

மொளகு தக்காளி செடில, நாவக்கலரா பழங்கள் சின்ன சின்னதா பழுத்திருக்கும்.

அதை புடிங்கி சாப்பிடுவோம்.

சில எடங்கல்ல தவட்டுக்கொய்யா பழங்களும் பழுத்திருக்கும்.

ஒரே வேட்டையாதான் இருக்கும்.

தேயிலை மலைகளுக்குள்ள போறதுக்கே ஆசையா இருக்கும்.

சில மலைகள்ல சொடக்கு தக்காளி செடிகளும் இருக்கும். அதுல நெறைய மருத்துவ குணம் இருக்கிறதா சொல்லுவாங்க.

இதையெல்லாம் புடுங்கி திண்ணுட்டு சாவகாசமா வீட்டுக்கு வருவோம்.

வீட்டுக்கு வந்தவொடன யாராவது “சொக்கா” போடுறதுக்கு ஐடியா கொடுப்பாங்க.

தோட்டங்கள்ல வப்பாளிக்காய் மரங்கள் நிறைய இருக்கும்.

யாரு வூட்டு தோட்டத்திலயாவது, ஒரு வப்பாளிக்காய புடுங்கி தோலை சீவி, கொட்டைகளை வெளியில் எடுத்துட்டு வைச்சிருவோம்.

புளி ஒராளு, கொச்சிக்காய் ஒரு ஆளு.

மூட்டக் கொச்சிக்காவையும் சேத்திக்கிருவோம்.

உப்பு கணக்கா வைச்சி அம்மில நேகா அரைச்சிக்குருவோம்.

ஒரு பக்கம் ஓட்ட உள்ள பப்பாளிக்காய் உள்ளுக்கு அரைச்ச கொச்சிக்காய் சாந்த போட்டுருவோம்.

கூரா குச்சி ஒன்னு சீவி அதை குத்தி எல்லா பக்கத்துக்கும் சார்ர மாதிரி குத்தணும்.

அப்புறமா துண்டு துண்டா வெட்டி சாப்பிடணும்.

ஒரு துண்ட சாப்பிட்றதுக்கு முன்னாடி வேணானுப் போயிரும்.

அவ்வளவு ஒரப்பா இருக்கும். ஊதி, ஊதி எப்பிடியும் சாப்பிட்டுருவோம்.

உச்சி மண்ட உணர்ர வரைக்கும் ஒரைக்கும். பிறகு பீலில வாய அப்பிடியே புடிச்சி நனைப்போம்.

அப்பத்தான் ஓரளவு ஒரப்பு குறையும்.

உச்சி மண்டையில் உள்ள சளியெல்லாம் வெளிய வந்திரும். நெஞ்சி சளியும் அப்பிடித்தான்.

பப்பாளிக்கா சாப்பிடுறனால சாப்பாடும் செமிச்சிரும். பூச்சி பிரச்சினையும் குறைஞ்சிரும்.

கொஞ்சம் ஓவரா போனாதான் அந்திக்கு வயித்துக்கடுப்பு தொடங்கிடும்.

இப்பிடி லீவுனாலே சரி மாங்காய் சொக்கா, கொய்யாக்கா சொக்கா இப்பிடி வெத வெதமா டேஸ்ட்டு போட்டு சாப்பிடுறதுதான் வழமை.

தோட்டமே கொய்யா மரம், நினைச்ச நேரம் கொய்யாக்கா சாப்பிடுவோம். புளிச்சக்கொய்யா, கொஞ்சம் காட்டுப்பக்கம் போனா, வெரலி, நெல்லி காய்கள் எல்லாம் தாராளமா இருக்கும்.

தோட்டத்தில் ஐம்பது, அறுபது ஜம்போலை மரங்கள் இருக்கும். நினைச்சா ஜம்போலை காய புடுங்கி உரிச்சி சாப்பிட்டுருவோம்.

இப்பிடி வெத வெதம்மா நினைச்ச சாமானுங்கள் எல்லாம் இருக்கும்.

அட நவாப்பழம், அதையெல்லாம் நினைச்சாலே! வாய் ஊருதே.

பெலாக்கா சீசன் வந்திட்டா, கிழமையில் இரண்டு மூணு தடைவ சாப்பிட்டுருவோம்.

ஊலாம் பழத்தை சாப்பிடுறது ஒரு வகையான கலைதான். நெருப்பு வரிக்கேன் ரொம்ப இனிப்பா இருக்கும்.

வாழைப்பழங்கள் விதவிதமா சாப்பிடுவோம். அட சப்பத்தில்லா காயும் நினைச்ச மாதிரி இருக்குமே!


மாங்காய சொல்லவா வேணும்.

இதெல்லாம் நம்ம உடம்புக்கு விற்றமின்களை தர்ற சாப்பாடுக.

இப்பிடி இருந்த சொர்க்க பூமிய விட்டுட்டு போறததான் முன்னேற்றமுனு நெனைச்சிக்கிட்டு இருக்கோம்.

**தோட்டத்தில் வலம் வருவோம்.**

# பேசவேண்டியவை மூடியே கிடக்கின்றன



– ஷாமிலா ஷெரீப்

பரிதாபங்கள் 02

**தலைநகரில் போர்டிங், வாடகை வீடு பரிதாபங்கள்**

*2002ஆம் ஆண்டு கொழும்பு வொக்சோல் வீதி, வொக்சோல் லேன் ஒரு வீடு. நான் முதன் முதலாவது போர்டிங்கில் குடியிருக்கத் தொடங்கிய காலம். பொற்காலம், கலிகாலம் எப்படி வேண்டுமெனினும் வர்ணிக்கலாம். நவலோக வைத்தியசாலையில் பணிபுரியும் தாதியர்கள் அதிகமானோர் அங்குதான் இருந்தனர். எனது சகோதரியும் ஒரு வீட்டில் அறுநூறு ரூபா பணத்துக்கு போர்டிங் வீட்டில தங்கினார். சகோதரியைப் பார்க்க வருவதுடன், நானும் எனக்குரிய இடத்தைப் பேசிக்கொண்டேன். ஒரு மாதம் முற்பணமாகக் கொடுக்க வேண்டும்.*

*‘‘வருமான வரி கட்டாமல் தொழில் செய்கிறா’’ என வீட்டு முதலாளியம்மாவைக் கிண்டல் செய்வோம். அந்தளவுக்கு அதிகமான பெண்கள் அங்கு தங்கவைக்கப்பட்டிருப்பர். யுத்த காலம் என்பதால் அனைவரையும கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்து வைத்திருப்பர். தினமும் காலையில் இராணுவத்தினர் பார்வையிடுவர். தாதிக்கும் இராணுவத்துக்குமிடையில் காதல் மலரும். இரவு வேளைகளில் வந்து கதைத்து விட்டுச்செல்வர். நாங்கள் பெல்கனி வழியே புதினம் பார்ப்போம். ஏதாவது ஏடாகூடமாக அவதானிப்பதை போர்டிங் அன்ரி கண்டுவிட்டால் முற்பணத்தை எறிந்து துரத்திவிடுவார்.*

*சிங்கள பெண்பிள்ளைகளுக்கு இந்த மாதிரியான சம்பவம் அடிக்கடி நிகழும்.*

*‘‘திடீரென இப்படி துரத்திவிட்டால் எங்க அன்ரி அவங்க போவார்கள்’’ எனக் கேட்டேன்.*

*‘‘அதான் பொடியன் பார்த்து வச்சிருக்காலே, எங்க சரி போகட்டும்’’ என்பார்.இதனால் பல பெண்கள் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் மரியாதையாக போர்டிங்கில் பல வருடங்கள் தங்கியிருந்தனர்.*

*குத்தகைக்கோ வாடகைக்கோ குடியமர்த்தப்படும் முறைமை இந்த போர்டிங் முறைமையில் இல்லாததனால் இவ்வாறான அசம்பாவிதங்கள் நிகழ்வதைத் தவிர்க்க முடியவில்லை போலும். ஆனால், மகளின் திருமணத்துக்கு அறை தேவைப்படுகிறது. அடுத்த மாதம் தங்கை வெளிநாட்டிலிருந்து வருகிறார் அறை தேவைப்படுகிறது என முன்னறிவித்தலின்றி வெளியேற்றப்படும் துர்ப்பாக்கியமும் நடந்தேறும்.*

*குறிப்பிட்ட காலவரையறைக்குள் ஓர் அறையைத் தேடிக்கொள்வது இப்போதுபோன்று அப்போது இலகுவான தல்ல. ஞாயிற்றுக்கிழமை பத்திரிகை விளம்பரத்தை மாத்திரம் நம்பியிருக்க வேண்டும். தரகர்களை நம்பினால் ஏதோவொரு விதத்தில் ஏமாற்றிவிடுவர். எனவே, ஒரு வார காலம் பத்திரிகை விளம்பரத்துக்காகவே காத்திருக்க வேண்டும். விளம்பரங்களைப் பார்த்து பல இடங்களைப் பார்வையிட்ட பின்னர் எதுவும் நமது விலைக்கு சரிவராவிட்டால் கொழும்பிலுள்ள உறவுக்காரர்கள் வீட்டில் சில நாட்கள் தங்கவேண்டிய பரிதாப நிலை ஏற்படும். அப்போதுதான் உறவுக்காரர்களின் உண்மையான முகத்தைக் காணலாம்*

*ஒரு முறை எனது சகோதரி தங்கியிருந்த வீட்டு அம்மணியின் மகள் திடீரென வெளிநாட்டிலிருந்து வந்ததனால் அறை உடனடியாக தேவைப்படுவதாகக் கூறி ஓரிரு வாரத்துக்குள் அறை பார்த்துக்கொள்ளுமாறு கூறியபோது மட்டக்குளியிலுள்ள பெரியம்மா வீட்டில் ஒரு மாத காலம் தங்கியிருந்தார். பால் போல தேன் போல இனிமையாக கதைக்கும் உறவினர் வீட்டில் ஒரு மாத காலம் தங்குவதென்றால் மிக இலகுவாக கல்லில் நார் உரித்துவிடலாம்.*

**தொடர்வாள்...**

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் அடிப்படைவாதம் என்ற அமைச்சர்களின் கூற்றுகளை மக்களுக்கு தெளிவுபடுத்தி அரசாங்கம் பொதுவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவேண்டும். புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னவென் பதையும் அறிந்துகொள்ள மக்கள் ஆவலுடன் இருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் கல்முனை மாநகர சாய்ந்தமருது பிரதேசத்தில் பொதுமக்களாகக் கூடி தீவிரவாதிகளைக் காட்டிக்கொடுத்த சம்பவத்தையும் முஸ்லிம் பெயர் தாங்கியவர்கள் தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்பதால் அவர்களின் பூதவுடலைக்கூட முஸ்லிம் சமூகம் பொறுப்பேற்கவோ நல்லடக்கம் செய்யவோ அனுமதிக்கவில்லை என்பது வரலாறு.

சுதந்திர இலங்கைக்காகப் போராடிய இலங்கை முஸ்லிம்கள் இன்றுவரை இலங்கையின் நலனுக்காக அரச பாதுகாப்புப் படைகளில் இருந்துகொண்டு நாட்டைப் பாதுகாக்க போராடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். முஸ்லிம்கள் தேசபக்தி கூடியவர்கள் என்பதற்கு முஸ்லிம் சமூகத்தின் அர்ப்பணிப்புமிக்க வரலாறுகளே சான்று.

அண்மையில் பாராளுமன்றத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராலும் பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளராலும் கிழக்கு மாகாணத்தில் - குறிப்பாக, கல்முனையில் இஸ்லாமிய தீவிரவாதம் மேலோங்கி இருப்பதாகவும் அரசு இது விடயமாகக் கண்காணித்துக்கொண்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்ததையடுத்து குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் கல்முனையின் தாய்ப் பள்ளிவாசலான கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரியபள்ளிவாசலும் கல்முனை வாழ் அனைத்து மக்களும் கவலையுற்றிருப்பதுடன், மேற்படி விடயம் தொடர்பில் மிக அவதானமாகவும் இருக்கின்றோம்.

சமய தீவிரவாதம் தொடர்பாக இஸ்லாம் மார்க்கமும் முஸ்லிம் சமூகமும் குறிப்பாக, கல்முனை வாழ் சிவில் சமூகமும் இக்கோட்பாட்டுக்கு முற்றிலும் எதிரானவர்களாகவே இருக்கின்றனர் என கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் பகிரங்க அறிவித்தலொன்றை கூட வெளியிட்டது.

அந்தப் பகிரங்க அறிக்கையில் கல்முனை தொடர்பான குற்றச்சாட்டு குறித்து கல்முனை பிரிவுக்கான உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை கடந்த 06.03.2025 அன்று சந்தித்து குறித்த விடயம் தொடர்பான பூரண விளக்கத்தை எங்களுக்குத் தருமாறும் குறித்த இஸ்லாமிய தீவிரவாதம் கல்முனையில் ஆதாரபூர்வமாக செயற்படுமாயின், அதனை முற்றிலும் இல்லாமலாக்குவதற்கான உரிய நடவடிக்கைகளைப் பாதுகாப்புப் பிரிவினர் உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என்றும் அதற்கான சகல ஒத்துழைப்புகளையும் எமது ஊர் பள்ளிவாசல்களும் மக்களும் வழங்கத் தயாராகவுள்ளோம் எனும் உறுதிப்பாட்டை எழுத்து மூலமும் அறியப்படுத்தியுள்ளதோடு இவ்விடயம் தொடர்பில் பொலிஸாரும் கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பள்ளிவாசலும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை திட்டமிட்டுள்ளோம் என்றும் தெரிவித்திருந்தனர்.

இதுதான் கல்முனை மக்களின் உண்மையான நிலைப்பாடாக உள்ளது. இதனை பாராளுமன்றத்திலும் அமைச்சரவையிலும் உரிய இடங்களிலும் தெளிவாக எடுத்துரைக்க ஓர் அரசியல் சக்தி இல்லாத நிலை இம்முறை கல்முனைக்கு வந்துள்ளது. ஆளுந்தரப்பில் ஒரு முஸ்லிம் எம்.பி. குறித்த தொகுதியிலிருந்தும் கூட வாய்திறக்கா பொம்மையாக இருப்பதுதான் இங்கிருக்கும் உண்மை நிலை.

இந்தக் கல்முனை விடயம் பற்றிய மேலதிக கலந்துரையாடலுக்காக கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரை கல்முனை ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு நம்பிக்கையாளர்கள் அழைத்திருப்பதுடன், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் தலைமையில் அனைத்து மாகாண, மாவட்ட பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் கல்முனையின் சிவில் சமூக பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலொன்றையும் மிக விரைவில் ஏற்பாடு செய்து இந்த விடயம் தொடர்பில் பொதுமக்களுக்கும் நாட்டுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மேலும் கொழும்பிலுள்ள International Advocacy Institution ஒன்றின் துணையுடன் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பான உண்மைத்தன்மைகளை ஆராய்ந்து அறிக்கையொன்றைத் தயாரித்து அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் முன்வைப்பதற்கான மேலதிக ஏற்பாடுகளையும் கல்முனை பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை முன்னெடுத்து வருகின்றது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் உண்மைகளை வெளிக்கொணர பொதுமக்களும் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகிறார்கள். இதன் ஓர் அங்கமாக இதுவரைக்கும் எடுக்கப்பட்டிருக்கும் முன்னெடுப்புகள் குறித்து தெளிவுபடுத்துவதற்காகவும் எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்குமாக கல்முனையிலுள்ள அனைத்து பள்ளிவாசல்கள் மற்றும் சிவில் அமைப்பினர்களுடனான பிரத்தியேக கலந்துரையாடலொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை (16-03-2025) அன்று முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் தலைவர் எம்.ஐ.அப்துல் அஸீஸ் தலைமையில் கல்முனை தனியார் மண்டபமொன்றில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கல்முனையிலுள்ள அனைத்து பள்ளிவாசல்களின் நிர்வாகிகளும் அஹ்லுஸ்ஸுன்னாஹ் வல் ஜமாஅத் உலமா சபையினர், அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா - கல்முனைக் கிளையினர் மற்றும் முன்னணி சிவில் அமைப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தங்களது கருத்துகளை முன்வைத்துள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் எதிர்காலத்தில் முன்னெடுக்கவேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன், இவ்விடயத்தைப் பெரிய பள்ளிவாசலினது தலைமையில் அனைத்து பள்ளிவாசல்கள் மற்றும் சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் எனவும் இக்குற்றச்சாட்டுடன் தொடர்புடையதாக ஊடகங்களில் குறிப்பிடப்படும் குழுவை நேரடியாக அழைத்து அவர்களின் கொள்கைகள், பின்பற்றுதல்கள் தொடர்பில் கலந்துரையாடி அறிந்து ஆவணப்படுத்தல் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இதன்பின்னர் தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகளை ஊர் தழுவிய ரீதியில் முன்னெடுத்தல் என முக்கிய பல தீர்மானங்களும் இதன்போது நிறைவேற்றப்பட்டுள்ளன. கல்முனை மக்கள் சமாதானத்தை நேசிப்பவர்கள். தேவையற்ற பீதி மனப்பான்மையை ஏற்படுத்தாதீர்கள்” என மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. பாராளுமன்றத்தில் கூறிய கருத்தே கல்முனை மக்களின் கருத்தாகவும் அமைந்துள்ளது.

இஸ்லாத்தை பற்றிய தவறான உருவகத்தை மாற்ற வேண்டிய கடமை, பொறுப்பு, இஸ்லாமியர்களுக்கே இருக்கிறது. பேச்சிலும் எழுத்திலும் குர்ஆன் மற்றும் நபிமொழி ஆதாரங்களை எடுத்துக்காட்டி ‘இஸ்லாம் அமைதி மார்க்கம்’ எனச் சொல்லிவிடுவதால் மட்டுமே, அது உண்மை என்பதை நிரூபித்துவிட முடியாது. இஸ்லாம் கூறும் அமைதி முறையை, மனித நேயத்தை, சீறிய வாழ்க்கை நெறியைப் பின்பற்றி வாழ்ந்து காட்டுவதால் மட்டுமே, இஸ்லாம், தீவிரவாதத்தை, பயங்கரவாதத்தை வெறுக்கிறது, இஸ்லாத்துக்கும் அதற்கும் துளியளவும் தொடர்பில்லை என்பதை நிரூபிக்க முடியும். அதன் மூலமே, சிலரது செய்கைக்கு முழு சமூகமும் பொறுப்பாகாது என்ற புரிதலுடனான, மாற்று மத சகோதரர்களின் நம்பிக்கையையும் நல்மதிப்பையும் பெறமுடியும். இஸ்லாமியர்களுக்கெதிரான மிகமோசமான சூழல் நிலவும் பன்முகச் சமூகத்தில் இவற்றை சாத்தியப்படுத்துவது மிகக்கடினம் என்றாலும் செய்தே தீர வேண்டிய கட்டாயத்துக்கு முஸ்லிம்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

# அன்புதான் இன்ப ஊற்று

தமிழன் சிறுகதை

யூ.எல்.ஏ.மஜீட்

இரவெல்லாம் படிப்பதில் ஈடுபட்டிருந்த சதீஸ் நள்ளிரவு பன்னிரெண்டு மணியையும் தாண்டிவிட்ட நிலையில் படுக்கைக்குச் சென்றவன் நேரம் போனதே தெரியவில்லை நன்றாகவே உறங்கிவிட்டான். அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் கிளாஸுக்குப் போகவேண்டியிருந்தது.

உலகையே மறந்து படுக்கையில் கிடந்த சதீஸ், அம்மா எழுப்பும் சத்தம் கேட்டு பதலித்தவனாக படுக்கையை விட்டு எழுந்தவன் சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தை நோக்கினான். நேரம் எட்டையும் தாண்டியிருந்தது. அவசர அவசரமாக காலைக்கடனை நிறைவுசெய்தவனாக அம்மா தயாரித்துக்கொடுத்த தேநீரை அருந்திவிட்டு சைக்கிளில் மிகவும் வேகமாக டியூசன் கிளாஸுக்கு சென்றுகொண்டிருந்தான்.

ஆனால், சற்றும் எதிர்பார்க்காத நிலையில், சதீஸுக்குப் பின்னால் வேகமாக வந்துகொண்டிருந்த ஓட்டோ அவன் மீது மோதித் தள்ளிவிட்டு நிறுத்தாமலேயே சென்றுவிட்டது. கீழே விழுந்த சதீஸ், ‘‘ஐயோ அம்மா, கடவுளே’’ என அலறிக்கொண்டிருந்தான். ஆனாலும் அவனது அவலக்குரலை யாரும் கண்டுகொள்ளவில்லை.

சதீஸின் பக்கத்துக் கிராமத்தில் வசித்துவந்த ரிஸ்வான், கடைக்கு ஏதோ பொருள் வாங்க அவ்வழியால் சைக்கிளில் வந்துகொண்டிருந்தவன் சதீஸ் கீழே விழுந்து எழும்ப முடியாமல் அவதியுறுவதைக் கண்டான். உடனே அவனை நோக்கி ஓடிச்சென்ற ரிஸ்வான் கீழே விழுந்து கிடந்த சதீஸை தூக்கி எடுத்தான். சதீஸின் கை கால்களிலிருந்து இரத்தம் பீறிட்டுக்கொண்டிருந்தது. பலமாக அடிபட்டிருந்தான்.

உடனே அவ்வழியால் வந்துகொண்டிருந்த ஓட்டோவை நிறுத்திய ரிஸ்வான் அவனை ஏற்றிக்கொண்டு அருகாமையிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்ததோடு, நடந்த சம்பவத்தையும் கூறியதுடன் தனது பெயர், முகவரியையும் பதிவுசெய்துகொண்டான். உடனடியாக வைத்தியசாலை ஊழியர்கள் சதீஸை பொறுப்பேற்று அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்து சிகிச்சையளிக்கப்பட்டது.

சதீஸின் கை, கால்களில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. ஆனாலும் இரத்தக்கறை படிந்த உடையோடு நின்றுகொண்டிருந்த ரிஸ்வான் சதீஸின் காயங்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வெளியே வரும்வரையும் பார்த்துக்கொண்டிருந்தான். சதீஸ் சற்றுநேரத்தில் வெளியே கொண்டுவரப்பட்டு



இரண்டாம் வார்டில் சேர்க்கப்பட்டான். ஆனால், வைத்தியசாலை அதிகாரிகள் ரிஸ்வானை வீடுசெல்லுமாறு பணித்தபோதும் அவன் அதனை நிராகரித்தவனாக சதீஸின் அருகிலிருந்து சதீஸுக்கு ஆறுதல் கூறிக்கொண்டிருந்தான்.

அத்துடன், சதீஸின் பெற்றோருக்குத் தொலைபேசியில் சதீஸ் ஓட்டோவில் அடிபட்டு வைத்தியசாலையில் இருப்பதாக அறிவித்தான். சதீஸுக்கு உடலில் வேதனை காணப்பட்டாலும் ஒரு மாற்று மதத்தைச் சேர்ந்த ரிஸ்வானின் நடவடிக்கையானது நிம்மதியை ஏற்படுத்தியிருந்தது. சதீஸ் தனது உள்ளத்தில் ரிஸ்வானை நினைத்து நினைத்து ஆனந்தத்தில் மிதந்துகொண்டிருந்தான்.

சதீஸின் மனச்சாட்சி பேசத் தொடங்கியது. இந்த உலகில் வாழும் மனிதர்களில் பெரும்பாலானோர் சுயநலவாதிகளாகவும் குறுகிய மனம் கொண்டவர்களாகவும் இரக்கமற்றவர்களாகவும் நற்குணம், நற்பண்பு, நல்லொழுக்கம், கருணை, காருண்யம், அன்பு, மனிதாபிமானம், மனிதநேயம் போன்றவை காணக்கூடியதாக இல்லாத கலியுலகில் ரிஸ்வானைப் போன்ற நல்ல உள்ளம், நல்ல எண்ணம், தூர நோக்கம் கொண்டவர் இந்த உலகில் வாழ்வதனால்தான் இந்த உலகம் நிலைத்திருப்பதாக அவனது மனச்சாட்சி பேசிக்கொண்டிருந்தது.

ரிஸ்வானை பார்க்கும்போதெல்லாம் சதீஸுக்கு அவனைக் கட்டியணைத்து முத்தமிட வேண்டும்போல் இருந்தது. இதேநேரம் வைத்தியசாலையில் சதீஸுக்கு கொடுத்த காலை உணவை ரிஸ்வான் அவனுக்கு ஊட்டலானான். சதீஸ் ஓட்டோவில் அடிபட்டதைக் கேள்வியுற்ற சதீஸின் பெற்றோர் தலையில் அடித்துக்கொண்டு அலறிக்கொண்டு வைத்தியசாலையை நோக்கி ஓடிவரலாயினர். ரிஸ்வான் இரத்தம் தோய்ந்த உடையுடன் சதீஸுக்கு உணவு ஊட்டிக்கொண்டிருப்பதைக் கண்டு வியப்படைந்தனர். சதீஸின் தாயார் வதனி மகனைக் கட்டியணைத்து முத்தமிட்டவளாக அழுது புலம்பினாள். வதனியை சமாதானப்படுத்தி ஆறுதல் கூறலானான் ரிஸ்வான். யாரென அறியாத வதனி தடுமாறிக்கொண்டிருந்தாள்.

ரிஸ்வானை நோக்கி வதனி, ‘‘தம்பி, நீங்க எப்படி இங்க’’ என்று கேட்க, அம்மாவை அருகில் அழைத்த சதீஸ், ஒன்றுவிடாமல் நடந்த சம்பவத்தை விபரித்துக் கூறலானான். இதனைக் கேட்ட வதனியின் கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் வடிந்தன. தனது இரு கைகளையும் கூப்பி தனது நன்றியைத் தெரிவித்தாள். பதிலுக்கு நன்றியைத் தெரிவித்த ரிஸ்வான் அவர்களிடமிருந்து விடை பெற்றவனாக வைத்தியசாலையை விட்டு வெளியேறலானான். அவ்விடத்திலிருந்து ஓட்டோ ஒன்றின் மீது ஏறியவன் தனது வீட்டுக்குச் சென்றான்.

கடைக்குப் பொருட்கள் வாங்கச் சென்ற ரிஸ்வான் நீண்டநேரமாகியும் வீடு திரும்பாததால் ஏதோ என்னவோ என்ற கவலையுடன் அவனது வரவை எதிர்பார்த்திருந்த நிலையில்தான் ரிஸ்வானும் ஓட்டோவில் வந்து இறங்கினான். ஆனால், ரிஸ்வான் வந்த கோலத்தைக் கண்ட அவனது பெற்றோர்களான அப்துல்லாவும் கதீஜாவும் அதிர்ச்சியடைந்தனர். மகனுக்கு ஏதும் விபரீதம் நடந்துவிட்டதோ என்று எண்ணி மகனிடம் இருவரும் விசாரிக்கலாயினர். ரிஸ்வான் மிகவும் அமைதியாகவும் நிதானமாகவும் நடந்த சம்பவத்தை விளக்கிக் கூறினான்.

இதனைச் செவியுற்ற அவ்விருவரும் ‘‘உண்மையாகவே மகனே நீ நல்லதொரு காரியத்தைச் செய்துள்ளாய். ஆபத்தில் ஒருவர் கஷ்டப்படும்போது அவர் யாராக இருந்தாலும் உதவி செய்யவேண்டியது ஒரு மனிதனின் நல்ல பண்புகளில் ஒன்றாகும். இதனையே அந்த இறைவனும் விரும்புகின்றான். நீ செய்த இந்தக் காரியத்துக்காக முதலில் இறைவனுக்கு நன்றி செலுத்துவதோடு, இவ்வாறான ஒரு மனிதநேயமுடைய அன்பு, கருணை, இரக்கமுடைய நல்லுள்ளம் படைத்த ஒரு மகனைப் பெற்று வளர்த்ததற்காக நாங்கள் இருவரும் பெருமையடைகின்றோம்’’ என்று ரிஸ்வானைப் பாராட்டினர். மேலும் இவ்வாறான நல்ல பண்புள்ள ஆபத்துகள் இடம்பெறும்போது அவ்வாறானவர்களுக்கு அன்புக்கரம் நீட்டி உதவிசெய்யும் நல்ல மனிதனாக மரணம் வரையும் வாழவேண்டும் எனவும் ரிஸ்வானிடம் மிகவும் வினயமாக வேண்டிக்கொண்டனர்.

சதீஸ் சுகமாக வீடு வருவதற்கு மூன்று வாரங்கள் சென்றன. ரிஸ்வான் அடிக்கடி சதீஸை வைத்தியசாலை சென்று பார்த்து வரலானான். உண்மையாகவே அன்பு எனும் வார்த்தைக்கு இந்த உலகில் ஈடிணை கிடையாதென்பதற்கமைவாக சதீஸுக்கும் ரிஸ்வானுக்குமிடையிலான அன்பு எனும் இன்ப ஊற்றானது வலுப்பெறலாகியது. இதனூடாக இருவரும் இணைபிரியா நண்பர்களாகினர். அத்தோடு நின்றுவிடவில்லை. சதீஸின் குடும்பத்தினர்களுக்கும் ரிஸ்வானின் குடும்பத்தினர்களுக்குமிடையில் உறவுப்பாலம் உருவாகியதோடு, இரு குடும்பத்தினர்களும் தங்களின் துன்பம், துயரம், சுகங்களில் கலந்துகொண்டு இனம், மதம், மொழி, நிறம், குலம், கோத்திரம் போன்றவைக்கப்பால் இவ்வுலகில் இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட அனைத்து மனித ஆத்மாவும் ஒன்றுதான். அதில் பிரிவினைவாதத்துக்கு ஒருபோதும் இடமில்லை என்ற உண்மையை வலியுறுத்தும் வகையில் அவர்களது தொடர்புகள் காணப்பட்டன.

பக்கத்து பக்கத்து கிராமங்களில் அவர்கள் வாழ்ந்தாலும் மாற்று மதத்தவர்களாகக் காணப்பட்டாலும் அந்த இருசாராருக்குமிடையில் ஏற்பட்ட அவர்களது அன்பு எனும் பாசக்கயிறானது அந்த இரு கிராமத்தில் வாழ்பவர்களின் மத்தியில் ஒருவிதமான ஆச்சரியத்தை ஏற்படுத்தலாகியது. அத்துடன், இவர்களது செயற்பாடானது இனவாதம், மதவாதம், பிரதேசவாதம், சுயநலவாதம், அன்பு, பண்பு, பாசம், பற்று, கருணை, காருண்யம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, சத்தியம், தர்மம், நீதி, நியாயம், நேர்மை, மனிதாபிமானம், நற்குணம், நல்லொழுக்கம், சாந்தி, சமாதானம், நல்லிணக்கம், புரிந்துணர்வு, பொறுமை, அகிம்சை, இரக்க சுபாவம், விட்டுக்கொடுத்தல், மன்னிக்கும் மனப்பான்மை போன்றவற்றை நிராகரித்து வாழ்வோருக்கு இவர்கள் ஒரு முன்னுதாரணமாக விளங்கினார்கள்.

இவர்களது இறுக்கமான அன்பின் தொடர்பாடலானது இறுதிவரை நிலைத்திருந்தன. மனிதர்களுக்கிடையில் உருவாகும் உறவுகள் பல காணப்படுகின்றன. அதில் ஒன்றுதான் நட்பு என்றபெயரில் இருவருக்கிடையில் ஏற்படும் அன்பின் இன்ப ஊற்றாகக் காணப்படுகின்றது. இதனை எந்தவொரு மனிதன் உறுதியாகவும் தூய உள்ளத்துடனும் பேணுகின்றாரோ அவர்களின் உள்ளமும் எண்ணங்களும் பிரகாசமடைகின்றன. அதனடிப்படையில்தான் சதீஸ், ரிஸ்வான் இருவருக்குமிடையில் உருவான அன்பு எனும் அழியா பொக்கிஷம் அவர்கள் திருமணமாகி மனைவி பிள்ளைகளோடு வாழ்ந்த நிலையிலும் கூட அவர்களது உறவுகளில் எந்தவொரு தளம்பல்கூட ஏற்படாத நிலையில், அவர்களது உள்ளங்களில் நிலைகொண்டிருந்தன. அத்தோடு, அன்புக்கு ஈடிணையாக இந்த உலகில் எதுவுமில்லை என்பதை அவ்விருவரும் நிரூபித்தும் காட்டினார்கள். அவர்களது முன்மாதிரியானது அனைத்து மனிதகுலத்துக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

***அன்புதான் இன்ப ஊற்று***
***அன்புதான் இன்ப ஜோதி***
***அன்புதான் இன்ப உலக மகாசக்தி***

**யாவும் கற்பனையே**

## மலையகத்தின் சொல்ல மறந்த கதை
## வலிகள்

**கோப்பியாலே வந்து சேர்ந்தோம்**
**போகும் இந்த காலத்திலும்**
**கோப்பியில வந்து இங்கு**
**முடிவ சொல்லிவிட்டு**
**முணுமுணுத்துப் போகிறது.....**

**கையை தடுத்து விட்ட பாப்பாத்தி**
**உடம்பு அது மெல்ல மெல்லமாக**
**கனமாகி போகிறது சூடாக இருந்த**
**அந்த**
**உள்ளங்கைகள் எல்லாம் சூட்ட**
**தனித்து விட்டு குளிரேறி போகிறது.....**

**வாயில் சிக்கிவிட்ட கோப்பி இலையை**
**கொஞ்சம் கடித்து ருசி பார்த்து**
**மெல்ல விழுங்குகிறா பாப்பாத்தி....**

**ஐயோ பாப்பாத்தி என்னாச்சு**
**உனக்கம்மா**
**எழுந்திரடி கொஞ்ச நேரம்**
**உனக்கு நினைவு திரும்பிச்சுன்னு**
**உன் சொந்தங்கள் யாருக்காச்சும்**
**போய் நானும் சொன்னாக்கா**
**யாராச்சும் நம்புவாங்களா....**

**திரும்பும் உன் நினைப்ப**
**திரும்பிப் பார்ப்பதற்கா**
**அந்த ஆண்டவே இங்கே என்ன**
**இப்போது அனுப்பி வச்சான்......**

**கோப்பியல அதிலே**
**கண்களெல்லாம் போதை ஏற**
**கண்கள் ரெண்டும் மெதுவாக**
**மூடிவிட பார்க்கிறது...**

**அங்கிருந்த சொம்பு ஒன்னில்**
**இருந்த கொஞ்சம் தண்ணீர**
**தொண்டையில ஊத்தி விட**
**கோப்பியில தண்ணியோட**
**வைத்துக்கொள்ள போகிறது...**

**பாதி தண்ணி ஈடேற**
**மீதி தண்ணி கடை வாய் பக்கமாக**
**மெதுவாக வெளியேற**
**பாப்பாத்தி உசுரும் அங்கே**
**மெல்ல மெல்ல போகிறது......**

**கண்கள் இரண்டில் கருவிழிகள்**
**காணாமல் போய்விட**
**இமைகள் ரெண்டும்**
**ஒரு நிமிடம் இமைக்காமல்**
**அப்படியே இருக்கிறது....**

**முனியாண்டி வலது கையை**
**பற்றி பிடித்திருந்த**
**பாப்பாத்தி கைகளது இன்னும்**
**இறுக்கமாக அப்படியே பிடித்துக்கிற**
**பிடித்த அந்த கைகள் அது**
**இரும்பாகிப் போகிறது...**

**அதுவரையும் நீட்டாமல்**
**மடக்கி வைத்திருந்த**
**அவள் அழகான கால்களது**
**நீட்டி நிமிர்ந்து அங்கே**
**உற்சாக மிகுதியிலே**
**நேராக கிடக்கிறது....**

**குளிராக மாறிப்போகும்**
**அழகான அவள் உடல**
**உயிர் கொடுப்போம் என்று சொல்லி**
**சூடாக்க பார்க்கிறது**
**முனியாண்டி கைகளது....**

**உள்ளங்கையில் கைய வச்சு**
**சூடு வர வரைக்கும்**
**அழுத்தி தேய்த்து விட்டு**
**அடிக்காலி கிட்ட போயி**
**காலையும் தேய்கின்றான் முனியாண்டி**

**விழித்திருந்த விழிகளது**
**வதைக்கப்பட்ட உலகம் இத**
**இனிமேலும் பார்க்க மாட்டேன்**
**என்று சொல்லி**
**இறுக்கமாக மூடிவிட்டு**
**இறுகிப்போய் கிடக்கிறது....**

**ஆரம்பத்தில் பெருமூச்சு**
**மேல் மூச்சு கீழ் மூச்சு என்று எல்லாம்**
**படப்படத்த இதயமது மெது மெதுவாய்**
**ஓசையிட்டு இப்போ முழுமையாய்**
**மூழ்கி தான் போனதுவே.....**

**பாப்பாத்தி இந்த உலகை விட்டு**
**தொலைதூரம் போய்விட்டா**
**அவ ஆத்மா இங்கேதான்**
**போயிருக்கும்....**

**இது வயது தாயாக**
**அவள் இருக்கும் போதே**
**இல்லாமல் போய்விட்ட**
**கணவனை தேடிக்கிட்டு**
**கனதூரம் போனது வா.....**

**இல்லையென்றால்**
**பொறந்த மண்ணு விட்டு**
**கொஞ்சமும் மனசு இன்றி**
**வந்தோமே என்று சொல்லி**
**மீண்டும் அந்த மண்ணை தேடி**
**தாய்வீடு போனது வா.....**

**இல்லையென்றால்**
**வந்து சேர்ந்த மண்ணு நாளும்**
**பிழைக்க வச்ச ஊராட்சே**
**என்று சொல்லி**
**அந்த ராகல மண்ணை தேடி**
**ஈர மண்ணுக்குள்ளே**
**போனது வா**

**இல்லையென்றால்**
**அந்த மாத்தளை அம்பளத்தில்**
**சேர்ந்திருந்த சொந்தங்கள**
**பிரிச்சதேனோ என்று சொல்லி**
**அந்த மாத்திரை அம்மன் கிட்ட**
**வழக்காட போனது வா....**

**எங்கே போயிருக்கும்**
**பாப்பாத்தி அவ உசுரு**

**(சொல்ல மறந்த கதை இன்னும் சொல்லப்படும்)**

எம்.ராமதாஸ்,
இறம்பொடை.

# புலரும் பொழுது

தமிழன் தொடர்கதை

கலாபூஷணம் சபீனா வைத்துல்லாஹ்

அத்தியாயம் 14

“வாழ்க்கையிலே எத்தனை கஷ்டந்தான் வந்துபோகுது. நம்ம கவலைப்பட்டு நோயைத் தேடிக்கிட்டா எல்லாருக்கும் நெருக்கடிதான். நமக்கு கஷ்டம் வார்ற நேரம், எதுவும் கடந்து போவும். நல்ல தீர்வு வருந்தான் எண்டு உறுதியோட, நிதானமாக இருக்கணும்.”

“அப்பா! டீ குடிச்சிட்டீங்களாப்பா” என்று கேட்டுக் கொண்டு அப்பாவிடம் வந்தாள் மலர்.

அவரின் சிந்தன கலைந்தது.

“இல்லம்மா கொண்டு வாங்களேன்” என்றார்.

அவர்கள் மலரின் வீட்டுக்கு வந்து ஒரு வார காலம் விரைவாகக் கழிந்தது.

அங்கு வந்த மாலா டீச்சர், “என்னங்க இவ்வளவு கெதியா ஒரு கெழமை போயிற்றுது. நாளைக்கு நம்ம வீட்டுக்குப் போகணுமே” என்றார்.

“ஓமோம் மாலா மருமகனுக்கும் மலருக்கும் சொல்லுவம்” என்றார் நாதன்.

அடுத்தநாள் இருவரும் தங்களின் கிராமத்துக்குச் சென்றனர்.



இவ்வாறு அவர்கள் அடிக்கடி மகளைப் பார்க்கச் சென்று வருவது வழக்கமாயிற்று. மலருக்குப் பேறுகாலம் நெருங்கியது.

தாய் மாலா மலரின் வீட்டிலேயும் அப்பா நாதன் கிராமத்திலேயும் தங்கினர்.

வேலைக்காரன் சுந்தரத்தாரும் நாதனும் சேர்ந்து சமைத்துச் சாப்பிட்டார்கள்.

அப்பா நாதன், தன் இரு மகன்மாரையும் திருமணம் செய்துகொடுக்க ஆசைப்பட்டார். ஆனால் அவர்களிருவரும், “தங்கச்சிட வீட்டு வேலையை முடிச்சிப் போட்டுக் கல்யாண வேலையைப் பாப்போமே அப்பா” என்றனர்.

மாரிகாலம் தொடங்கியது. ஊரெங்கும் வெள்ளம் பரவியது. பயிர்களெல்லாம் நாசமாயிற்று. அந்த ஊரிலே பலநூறு ஏக்கர் வயல்கள் நீரில் மூழ்கிற்று. விவசாயி நாதனின் பத்து ஏக்கர் வயலிலே நெற்கதிர்கள் தரையைத் தொட்டுக்கொண்டு அமிழ்ந்தன. கடன்பட்டு விதைத்தவர்களும் கதிரறுக்கக் காத்திருந்து ஏமாந்தனர். விவசாயிகளின் மனசெல்லாம் உடைந்துவிட்டது. கஷ்டப்பட்டு மண்ணுழுது மாடாய் உழைத்தபின், அறுவடை வீணாகிப் போகும்போது, என்னதான் செய்வது.

கவலைப்பட்டார் நாதன்.

“ஐயா இதெல்லாம் தாண்டித்தானே நம்ம வாழுறோம்” இது சுந்தரத்தாரின் அனுபவ மொழி.

நாதனின் கைப்பேசி ஒலித்தது. மறுமுனையில் மாலா,“என்னப்பா செய்யிறீங்க. சாப்பிட்டீங்களா. சுந்தரத்தார் எங்கே? என்றார்.

“சுந்தரம் என்னோடதான் நிற்கிறார். அவர் எனக்கு நல்ல ஓதவிதான் மாலா” என்றார்.

“இங்கு நல்லமழை அங்கு எப்படி’’ என்றதும் “மழை நமக்கு மட்டுமா பெய்யுது இல்லதானே” என்றார் மாலா.

“நமக்கு இந்த முறை வெள்ளாம நட்டமாப் போனாலும் இன்னொரு முறை வெளச்சல் கெடைக்குமப்பா. ஒன்னும் யோசிக்க வேணாம்’’ என்றார் மாலா டீச்சர்.

“உண்மைதான் மாலா. பேத்தியும் மலரும் நல்லா இருக்காங்களா. நீங்க எப்போ வாறீங்க மாலா’’ என்றார் அப்பா.

“இன்னும் பத்து நாள் தள்ளி டேட் குடுத்திருக்காங்க. அதுக்கிடையிலே ஒருக்கா வீட்ட வந்துட்டுப் போவம் என்றிருக்கேன்” என்றார் மாலா.

“சரி சரி இப்ப மழை வெள்ளமாக் கெடக்கு ஆறுதலா வாங்க’’ என்றார் நாதன்.

இரண்டொரு நாட்களில் கிராமத்துக்கு வந்த மாலா டீச்சர், சுந்தரத்தாரை வீட்டுக் காவலுக்கு வைத்துவிட்டு, கணவர் நாதனையும் கூட்டிக்கொண்டு மலரின் வீட்டுக்கு வந்துவிட்டார்.

நாட்கள் நகர்ந்தன. பிரசவ வலி கண்ட மலரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டாள். மலருக்குள் பூத்த மலர் ஒன்று மாலாவின் கைகளில் கிடைத்தது.

தாத்தாவும் பாட்டியும் ஆனந்தம் கொண்டனர்.

பால்நிலா வதனம் கொண்ட தன் மகளைப் பார்த்து உளம் மிக மகிழ்ந்தார் குணாளன் டொக்டர்.

தங்கையின் மகளைக் காணத் தாய்மாமன் மார்கள் சீர்கொண்டு வந்தனர்.

சுகப்பிரசவம் கண்ட மலரும் அவளின் பிஞ்சு மகளும் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டனர். உறவுகளும் உற்ற நண்பர்களும் மழலையைப் பார்க்க வந்து நிறைந்தனர். அந்தக் குடும்பம் ஆனந்தக் கடலில் மிதந்தது.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த அந்த மழலையோடு மாலாவுக்கும் நாதனுக்கும் காலம் கழிந்தது.

முதன்முறையாக அந்த வீட்டுக்கு ஆனந்தனை மணமுடிக்கக் காத்திருக்கும் மீனாவும் அவளின் தாயாரும் வந்துசேர்ந்தனர். அவர்கள் ஆனந்தனின் குடும்பத்தோடு மிகவும் இங்கிதமாக நடந்துகொண்டனர்.

மனிதன் தன் வாழ்க்கைப் பயணத்தில் பல இன்னல்களையும் இழப்புகளையும் கடந்து செல்லும்போது, சந்தோஷங்களையும் சந்தித்துக்கொள்வது வழமைதானே. மீனாவும் அம்மாவும் தங்கள் வீட்டுக்குத் திரும்பிய பின்னர்,

“ நம்ம மகன்மாரையும் முடிச்சுக் கொடுப்போமே மாலா’’ என்றார் நாதன்.

மாலா சிரித்துவிட்டு, “ஒங்கட புள்ளையளுக் கிட்ட நீங்கதான் கேளுங்க. அவங்க சரி என்று சொன்னா அடுத்த முகூர்த்தத்திலேயே ஒரு ஆளுக்குக் கல்யாணம் முடிச்சுக் கொடுப்போம்” என்றார் தாய் மாலா.

இந்தச் செய்தியை நாதன் தன் மகன் அமுதனிடமும் ஆனந்தனிடமும் கூறினார்.

அதைக் கேட்ட அமுதன்,

“அப்பா நீங்க முதல்ல ஆனந்தனுக்குக் கல்யாணம் முடிச்சுக் குடுங்கோப்பா “ என்றான்.

**(தொடரும்)**



# 2025 IPL Special

# ஐ.பி.எல். அணிகளின் பயிற்சியாளர்கள்

(ரமணி)

**கோ**டிக்கணக்கான கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள ஐ.பி.எல். தொடரின் அணிகளுக்கும் அதன் வீரர்களுக்கும் பலத்த ஆதரவை ரசிகர்கள் வழங்கி வருகிறார்கள். சில அணிகளின் பயிற்சியாளர்களுக்கும் ரசிகர் கூட்டம் உள்ளது. ஐ.பி.எல். அணிகளின் பயிற்சியாளர்களைப் பற்றிய தொகுப்பு



### சென்னை சூப்பர் கிங்ஸ் - ஸ்ரீபன் ப்ளெமிங்:

ஐ.பி.எல். தொடரில் 5 தடவைகள் சம்பியன் பட்டம் பெற்ற அணியாகத் திகழும் சென்னை அணியின் பயிற்சியாளர் ஸ்ரீபன் ப்ளெமிங். சென்னை அணியின் முன்னாள் வீரரும் நியூசிலாந்து அணியின் முன்னாள் கப்டனுமாவார். நியூசிலாந்து அணிக்காக சம்பியன்ஸ் டிராபி பட்டம் பெற்று தந்தவர். இவரது பயிற்சியின் கீழ் சென்னை அணி 5 தடவைகள் சம்பியன் பட்டம் வென்றுள்ளது. 51 வயதான ப்ளெமிங் டெஸ்டில் 7 ஆயிரத்து 172 ஓட்டங்களும் ஒருநாள் போட்டிகளில் 8 ஆயிரத்து 37 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.



### டெல்லி கெப்பிட்டல்ஸ் - ஹேமங் பதானி:

அக்ஷர் படேல் தலைமையில் களமிறங்கும் டெல்லி அணிக்குப் பயிற்சியாளராக ஹேமங் பதானி களமிறங்கியுள்ளார். தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹேமங் பதானி இந்திய அணிக்காக 4 டெஸ்ட்டில் 94 ஓட்டங்களும் 40 ஒருநாள் போட்டிகளில் 867 ஓட்டங்களும் எடுத்துள்ளார். சேப்பாக் சூப்பர் கில்லீஸ், ஜப்னா கிங்ஸ் ஆகிய அணிகளுக்குப் பயிற்சியாளராக இருந்துள்ளார்.



### குஜராத் டைட்டன்ஸ் - ஆஷிஷ் நெஹ்ரா:

முதல் சீசனிலே ஐ.பி.எல். பட்டத்தைப் பெற்ற குஜராத் டைட்டன்ஸ் அணிக்கு பயிற்சியாளராக ஆஷிஷ் நெஹ்ரா உள்ளார். இந்திய அணியின் தலைசிறந்த பந்துவீச்சாளராத் திகழ்ந்த இவர் 17 டெஸ்ட் போட்டிகளில் 44 விக்கெட்டு களையும் ஒருநாள் போட்டியில் 157 விக்கெட்டுகளையும் ரி20யில் 34 விக்கெட்டுகளையும் 88 ஐபிஎல் போட்டிகளில் 106 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். 2011ஆம் ஆண்டு இந்திய அணி உலகக்கிண்ணத்தை வெல்ல முக்கிய காரணமாக நெஹ்ரா திகழ்ந்தார்.



### லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் - ஜஸ்டின் லாங்கர்:

முதல்முறை கிண்ணத்தை வெல்ல போராடும் லக்னோ அணிக்காக பயிற்சி யாளராக இருப்பவர் ஜஸ்டின் லாங்கர். அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரரான இவர் தலைசிறந்த பேட்ஸ்மேனாவார். 54 வயதான ஜஸ்டின் லாங்கர் டெஸ்ட் போட்டிகளில் 7 ஆயிரத்து 696 ஓட்டங்களை எடுத்துள்ளார்.



### கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - சந்திரகாந்த் பண்டிட்:

ரஹானே தலைமையில் களமிறங்கும் கொல்கத்தா அணிக்குப் பயிற்சியாளராகத் திகழ்பவர் சந்திரகாந்த் பண்டிட். கடந்த சீசனிலும் கொல்கத்தா அணிக்கு பயிற்சியாளராகத் திகழ்ந்தவர் இவரேயாவார். இந்திய அணியின் முன்னாள் வீரரான இவர் 36 ஒருநாள் போட்டிகளில் ஆடி 290 ஓட் டங்களும் 5 டெஸ்ட்டில் ஆடி 171 ஓட்டங்களும் எடுத்துள் ளார். மும்பை அணிக்காக அடுத்தடுத்து இரண்டு தடவைகள் ரஞ்சி டிரா பியை பயிற்சியாளராக வென்று தந்துள்ளார்.



### மும்பை இந்தியன்ஸ் - ஜயவர்தன:

5 தடவைகள் சம்பியன் பட்டம் பெற்ற மும்பை அணிக்கு அந்த அணியின் முன்னாள் வீரரும் இலங்கை அணியின் முன்னாள் கெப் டனுமாகிய மஹேல ஜயவர்தன பயிற்சியாளராக உள்ளார். ஜயவர்தன டெஸ்ட் டில் 11 ஆயிரத்து 814 ஓட் டங்களும் ஒருநாள் போட்டி களில் 12 ஆயிரத்து 650 ஓட் டங்களும் எடுத்துள் ளார். மும்பை அணிக்காக 6ஆவது தட வையாக கிண் ணத்தை வென்று தரவேண்டுமென்று இவர் களமிறங்கி யுள்ளார்.




### பஞ்சாப் கிங்ஸ் - ரிக்கி பொண்டிங்:

ஒருமுறை கூட ஐ.பி.எல். கிண்ணத்தை வெல்லாத பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு இந்த தடவை பயிற்சியாளராக ரிக்கி பொண்டிங் களமிறங்கியுள்ளார். ஸ்ரேயாஸ் ஐயர் கப்டனாக களமிறங்கியுள்ளார். 2000ஆம் காலகட்டத்தில் கிரிக்கெட்டையே கட்டி ஆண்டவராக உலா வந்தவர் ரிக்கி பொண்டிங். இவர் அவுஸ்திரேலிய அணிக்காக 2 தடவைகள் 50 ஓவர் உலகக் கிண் ணத்தை வாங்கித் தந்துள்ளார். டெஸ்ட்டில் 13 ஆயிரத்து 378 ஓட்டங்களும் ஒருநாள் போட்டியில் 13 ஆயிரத்து 704 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.



### ராஜஸ்தான் ராயல்ஸ் - ராகுல் ட்ராவிட்:

ஐ.பி.எல். தொடரின் முதல் மகுடத்தை கைப்பற்றிய ராஜஸ்தான் அணிக்கு ராகுல் ட்ராவிட் பயிற்சியாளராக உள்ளார். இந்திய அணியின் தூணாகத் திகழ்ந்த ராகுல் ட்ராவிட் இந்திய அணிக்காக ரி20 உலகக் கிண்ணத்தை பெற்றுத் தந்துள்ளார். ராகுல் டிராவிட் டெஸ்ட்டில் 13 ஆயிரத்து 288 ஓட்டங்களும் ஒருநாள் போட்டிகளில் 10 ஆயிரத்து 889 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.



### சன்ரைசர்ஸ் ஐதரபாத் - டேனியல் வெட்டோரி:

பாட் கம்மின்ஸ் தலைமையிலான ஐதரபாத் அணிக்கு டேனியல் வெட்டோரி பயிற்சியாளராக உள்ளார். இவரது பயிற்சியின் கீழ் கடந்த சீசனில் இறுதிப்போட்டிக்கு முன்னேறியது ஐதராபாத். நியூசிலாந்து அணியின் முன்னாள் கப்டனாகிய இவர் டெஸ்ட்டில் 4 ஆயிரத்து 531 ஓட்டங்களும் ஒருநாள் போட்டிகளில் 2 ஆயிரத்து 253 ஓட்டங்களும் எடுத்துள்ளார். டெஸ்ட்டில் 362 விக்கெட்டுகளும் ஒருநாள் போட்டியில் 305 விக்கெட்டுகளும் எடுத்துள்ளார்.



### ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் - ஆன்டி ப்ளவர்:

18ஆவது சீசனில் தங்களது முதல் கிண்ணக் கனவுடன் களமிறங்கியுள்ள ஆர்.சி.பி. அணிக்குப் பயிற்சியாளராக ஆன்டி ப்ளவர் உள்ளார். ரஜத் படிதார் தலைமையில் களமிறங்கும் பெங்களூர் அணி பயிற்சியாளர் ஆன்டி ப்ளவர் சிம்பாப்வே அணியின் முன்னாள் கப்டன். இவர் டெஸ்டில் 4 ஆயிரத்து 794 ஓட்டங்களும் ஒருநாள் போட்டிகளில் 6 ஆயிரத்து 786 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.

## ஐ.பி.எல்லில் காணாமல்போன அணிகள்

**ஐ.பி. எல்.திருவிழா ஆரம்பமாகி விட்டது. மொத்தம் 10 அணிகள் பங்கேற் கும் இந்தத் தொடரில் கடந்த 18 சீசன்களில் விளையாடிய சில அணிகள் பங்கேற்று பின்னர் நிரந் தரமாக ஐ.பி.எல்.தொட ரிலிருந்து விலகின. அந்த அணிகளின் பட்டியல்**

**டெக்கான் சார்ஜர்ஸ்:** ஐ.பி.எல். தொடர் கடந்த 2008ஆம் ஆண்டு முதல் நடந்து வருகிறது. இந்த அணி கடந்த 2008ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரை இயங்கி வந்தது. டெக்கான் கிரானிக்கல் நிறுவனம் இந்த அணியை நிர் வகித்து வந்தது. ஆந்திராவை மையப் படுத்தி இந்த அணி ஆடியது. 2012ஆம் ஆண்டு வரை மட்டுமே இந்த அணி ஆடியது. கில்கிறிஸ்ட் தலைமையில் 2009ஆம் ஆண்டு ஐ.பி.எல். பட்டத்தையும் கைப்பற்றியது.

**கொச்சி டஸ்கர்ஸ் கேரளா:** கேரளாவை மையப்படுத்தி இந்த அணி ஆடியது. 2011ஆம் ஆண்டு மட்டுமே இந்த அணி ஆடியது. மஹேல



ஜெயவர்தன தலைமையில் இந்த அணி ஆடியது. ஆனால், அந்த ஒரே சீசனில் இந்த அணி தொடரிலிருந்து விலகியது. கொச்சி பிரைவேட் கிரிக்கெட் லிமிடெட் இந்த அணியை நிர்வகித்தது.

**புனே வாரியர்ஸ் இந்தியா:** சஹாரா இந்தியா பரிவார் நிறுவனம் இந்த அணியை நிர்வகித்தது. 2011ஆம் ஆண்டு கொச்சி அணியுடன் இந்த அணியும் ஐ.பி.எல். தொடரில் களமிறங்கியது. புனேவை மையமாகக் கொண்டு ஆடிய இந்த அணிக்கு கங்குலி கப்டனாக ஆடினார். 2011ஆம் ஆண்டு 9ஆவது இடத்தையும் 2012ஆம் ஆண்டு கடைசி இடத்தையும் 2013ஆம் ஆண்டு கடைசி இடத்தையும் பிடித்தது. 2013ஆம் ஆண்டுடன் ஐ.பி.எல். தொடரிலிருந்து இந்த அணி விலகியது.

**ரைசிங் புனே சூப்பர்ஜெயண்ட்ஸ்:** சூதாட்ட குற்றச்சாட்டு காரணமாக சென்னை, ராஜஸ்தான் அணிகள் ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகிய நிலையில், 2016ஆம் ஆண்டு உருவானது ரைசிங் புனே சூப்பர்ஜெயண்ட். டோனி தலைமையில் களமிறங்கிய முதல் சீசனில் மோசமான தோல்வியடைந்து வெளியேறியது. பின்னர், அடுத்த ஆண்டு ஸ்மித் கப்டனாக நியமிக்கப்பட்டார். இந்த அணியின் உரிமையாளர் கோயங்கா தற்போது லக்னோ சூப்பர்ஜெயண்ட்ஸ் அணியை நிர்வகித்து வருகிறார். இந்த அணி இரண்டு சீசன்கள் மட்டுமே ஆடியது.

**குஜராத் லயன்ஸ்:** 2016ஆம் ஆண்டு சென்னை, ராஜஸ்தான் அணிக்குப் பதிலாக களமிறங்கிய அணிகளில் புனேவுடன் இணைந்து களமிறங்கிய அணி குஜராத் அணியாகும். இந்த அணியும் 2 சீசன்கள் மட்டுமே ஆடியது. குஜராத் அணிக்கு கப்டனாக சுரேஷ் ரெய்னா ஆடினார். இன்டெக்ஸ் டெக்னாலஜிஸ் இந்த அணியை நிர்வகித்தது. இந்த அணிகளில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி மட்டுமே சம்பியன் பட்டம் பெற்றது. மற்ற அணிகள் சம்பியன் பட்டம் பெற முடியவில்லை.

## சம்பவம் செய்ய காத்திருக்கும் அஸ்வின்

**ஐ.**பி.எல். மெகா ஏலத்தில் மீண்டும் சென்னைக்குத் திரும்பிய அஸ்வின் புதிய சாதனைகளைப் படைக்கக் காத்திருக்கிறார்.

2009ஆம் ஆண்டு ஐ.பி.எல்லில் அறிமுகமான அஸ்வின், 212 போட்டிகளிலிருந்து 29.82 சராசரியாக 180 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இந்த சீசன் முடிவதற்கிடையில் அவர் 200 விக்கெட்டுகளைத் தொட்டுவிடுவார்.

லெக்-ஸ்பின்னர் யுஸ்வேந்திர சாஹல் மட்டுமே 205 விக்கெட்டுகளை வீழ்த்தி இந்தச் சாதனையைப் படைத்த ஒரேயொரு வீரராவார். ஐ.பி.எல். போட்டிகளில் சுனில் நரைனுடன் இணைந்து ஐந்தாவது இடத்தில் அஸ்வின் உள்ளார்.



சென்னைக்காக இதுவரை 97 போட்டிகளில் அஸ்வின் விளையாடியுள்ளார். அஸ்வினுக்கு முன்னால் எம்.எஸ்.டோனி (234), சுரேஷ் ரெய்னா (176), ரவீந்திர ஜடேஜா (172), , டுவைன் பிராவோ (116) ஆகியோர் உள்ளனர்.

90 விக்கெட்டுகளுக்குச் சொந்தக்காரரான அஸ்வின், இந்தப் பட்டியலில் பிராவோ (140), ஜடேஜா (133) ஆகியோருக்குப் பின்னால் உள்ளார்.

18ஆவது ஐ.பி.எல். சீசனில், புகழ்பெற்ற எம்.ஏ. சிதம்பரம் மைதானத்தில் 50 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்திய முதல் வீரர் என்ற பெருமையை அஸ்வின் பெற முடியும். தற்போது அவர் இங்கு 43 போட்டிகளில் 20.48 சராசரியுடன் 50 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். பவர்பிளேயில் (ஐ.பி.எல்.) 50 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் சுழற்பந்து வீச்சாளர் என்ற பெருமையையும் அஸ்வின் பெறவுள்ளார். 27.61 சராசரியுடன் 49 விக்கெட்டுகளுடன் அவர் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.








மாணவர்களின் கல்வி வழிகாட்டியான

ஜீனியர் தமிழன்

மார்ச் மாத சஞ்சிகைகள்

தற்போது விற்பனையில்...

பிரதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்

074 1684643 / 0777 983308

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7